Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 12.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-14 | வெள்ளி-21 | 18-24யூலை 2003



## லெப் சீலனின் 20ம் ஆண்டு நினைவில்





## கடற்புலிகளுக்கு வீரவணக்கம்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 18.07.2003

# சமாதானப் பணியாளர்களிடையே சந்தேகத்திற்குரிய பனிப்போர்

சமாதான நடவடிக்கை முன்னெடுப்பின் வேகம் தணிந்து, அதன் எதிர்காலமுன்னேற்றம் குறித்த சந்தேகங்கள் அதிகரித்து, ஒரு தேக்க நிலையை அடைந்துள்ள சூழலில், அதற்குத் தடையாக உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் நோர்வே அனுசரணையாளர்கள் மீண்டும் மீண்டும் விக்கிரமாதித்த முயற்சியில் சளைக்காது முயன்று வரும் நேரமிது.

தனது சமாதான இலக்கில் ஆர்த்மார்த்தமான பிடிப்பின்றி ஆனால் பரபரப்பான ஆர்வத்தை ஒரு நாடக பாணியில் வெளிக்காட்டும் அதிகாரவலுவற்ற அரசு, சமாதான முன்னெடுப்புக்கான தடைகளைக் களைவதில் - சிக்கல்களை அவிழ்ப்பதில் பின்னடிப்பு செய்து வருகின்ற வேளையில், பேச்சுவார்த்தையை நிறுத்து, நோர்வே அனுசரணையாளர்களை அகற்று.... விடுதலைப்புலிகளுடன் பேசாதே..... என்ற பேரினவாதிகளின் கோஷங்கள் மீண்டும் கொழும்பில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைக்கு திரும்புமாறு விடுதலைப்புலிகளுக்கு வேண்டுகோள் போன்ற அழுத்தத்தைகொடுக்க முனையும் ஆதிக்கசக்திகள், சிறிலங்காவின் அரசியல் யதார்த்தத்தை ஆழமாகப் புரிந்து கொண்டு செயற்படுவதாக இல்லை.

அவர்களின் அபிலாஷைகளும் இலக்குகளும் வேறு. அதை அடைவதற்கு இந்தச்சமாதான நகர்வுப்பாதை அவர்களுக்கு அவசியமாக உள்ளது. - அவ்வளவுதான்.

பிரச்சினை ஆதிமூலத்தை அறியாது, மேலோட்டமான பார்வையின் கருத்துக்களை திணிக்க முயல்பவர்களாகவே அவர்கள் செயற்படுகிறார்கள்.

நோர்வேயை வெளியேற்று, பேச்சுவார்த்தையை நிறுத்து.... என்ற குரல்களின் ஆபத்தான அழுத்தம் குறித்து அவர்கள் அக்கறை கொள்பவர்களாக இல்லை....

துணிச்சலற்ற பாராளுமன்றத் தலைமையும், அகங்காரம்மிக்க நிறைவேற்று அதிகாரதலமையும் சமாதானப்பாடலை போர்ராகங்களிலேயே இசைக்க விரும்புகின்றன் என்பது வெளிப்படை.

இந்நிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் அஞ்சல் ஓட்ட வீரர்களாகவே செயற்பட வேண்டியுள்ளது தான் பரிதாபம்.

இப்படி ஒரு நிலையில் - நெருக்கடிச்சூழலில் நோர்வேயை இந்த முயற்சியில் ஓரங்கட்டி விட்டு, அதன் பங்கை தான் எடுத்துக்கொள்ள ஜப்பான் முயல்வதாக வெளியாகியுள்ள செய்திகள் அருவருப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஜப்பான் இந்த விடயத்தில் ஒரு பனிப்போரை ஆரம்பித்துள்ளது என்ற தகவல் இராசதந்திர வட்டாரங்கள் மூலம் கசிவாகியுள்ளது என்பதையே கவனத்தில் கொள்ள வேண்டியது இங்கு அவசியமாகியுள்ளது.

நெருப்பில்லாமல் புகைவராது... சிறு பொறியாவது உண்மையாக இருக்கவேண்டும். அப்படியெனில் ஜப்பானின் உள்நோக்கம் என்னவாயிருக்கும்?

புதுடில்லியில் ஜப்பானிய பிரதித்தூதுவர் தேசவிரோதத் தலைமறைவுக்குழுவான ஈ.என்.டி.எல்.எப்பின் தலைவர் பரந்தன் ராஜனை சந்தித்து பேசியதும், அவரை ஜப்பான் வருமாறு அழைப்பு விடுத்ததும், ஏற் படுத்திய சந்தேகங்களை இந்தப் 'பனிப்போர்' செய்தியுடன் ஒப்பீடு செய்து பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எது எப்படியானாலும் -

சிறிலங்கா விவகாரம், எல்லாவகையிலும் வலுவற்ற சிறிலங்கா அரசாலும், எல்லா வகையிலும் வலு மிக்க மேலாதிக்க சக்திகளாலும் மேலும் மேலும் விகாரமாகிக் கொண்டே போவதாக உணரமுடிகிறது.

தேசிய, சர்வதேசிய, மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் முட்டி மோதி தமது ஆதிக்கத்தை வலுப் படுத்திக் கொள்வதற்கான பனிப்போர் களமாக சிறிலங்கா மாறிக்கொண்டு போவதாகவே எண்ணத்தோன்றுகிறது.

## தூரனின் பார்வை ------------

# பகிரங்கமாகும் ரகசியங்களும் பல்வேறு சந்தேகங்களும்

இரகசியங்களைப பாதுகாத்தல் என்பது ஒரு நாடு தன் இறைமையைப் பாதுகாத்தலுக்கு ஆதாரமான மூல அம்சமாகும்.

'ஓட்டை வாயன் நாட்டைக் கெடுத்தான்' என்ற முது மொழி மேற்குறித்த விடயத்தை ஓரளவுக்கு சுருக்கமாக விளக்குவதற்கு உதவும்.

இரண்டாம் உலகப் போர்காலக் கதைகளில் பல அக்கால அரசியல், இராணுவ மற்றும் ஏனைய நிர்வாகப் பொறுப்புகீகளில் உயர்பதவி வகித்தோர்களின் இயல்பினையும் சூழ்நிலையின் யதார்த்தத்தையும், நாடுகளுக்கிடையிலான உறவு நிலையையும் (அக்கதைகள் உண்மையோ, பொய்யோ, என்னவாக இருந்தாலும் சரி...) சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் வகையில் வெளிப்படுத்துபவையாக உள்ளதை அறிந்தோர் புரிந்து கொள்வர்.

அத்தகையதோர் கதையைக் கூறமுன், மேலே குறிப்பிட்ட இரகசியங்கள் தொடர்பாக பரகசியமாகவே சில விடயங்களைப் பார்க்க வேண்டிய, பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் தேசிய நிர்வாகக் கட்டுமானத்தின் அதியுச்சமானதும், அதிமுக்கியமானதுமான நிர்வாகக்கட்டமைப்பு புலனாய்வுத் துறை சார்ந்ததேயாகும்.

அமெரிக்கா என்றதும் 'சி.ஐ.ஏ' என்ற அந்த நாட்டின் புலனாய்வு அமைப்பே எவர் நினைவிலும் தோன்றும்.... அடுத்து 'FBI' என்ற அதே போன்ற மற்றொரு அமைப்பு நினைவுக்கு வரும் அதன்பின்னரே புஷ் தோன்றுவார்... ஏனைய அமெரிக்கா குறித்த விடயங்கள் தோன்றும்...

இதே போன்று பிரிட்டன் என்றதும் MI5, MI6 என்ற பெயர்களும்
இஸ்ரேல் என்றதும்'மொஸாட்' (MOZARD) என்ற சொல்லும்...
இந்தியா என்றதும் 'றோ' (RAW) என்ற வார்த்தையும் நினைவுக்குள் முந்தி வருவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

ஒரு நாட்டின் அரச நிர்வாகம், பாதுகாப்பு, தேசிய மற்றும் சர்வதேசிய கொள்கை வகுப்பு, தேசிய அரசியல் மற்றும் இராணுவ அபிலாஷைகளை தொலைநோக்கு சிந்தனையுடன் வரையறுத்தல் மற்றும் வழிநடத்தல், அந்நிய ஆதிக்க ஊடுருவலை இனங்காணல்- தடுத்தல்- முறியடித்தல் தேசவிரோதசக்திகளை பலவீனப்படுத்தல், அல்லது நிர்மூலமாக்கல், அரசியல்உயர் பீடத்தவர்க்கு ஆலோசனை கூறல் என ஒரு நாட்டின் புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பொறுப்புகள் பல நோக்கினையும், பல பரிமாணங்களையும் கொண்டதாகும்.

மேற் கூறப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளிலும் வெற்றி என்பது அந்த செயற்பாடுகள் குறித்த திட்டமிடல்களின் ரகசியத் தன்மை பேணப்படுவதிலேயே தங்கியுள்ளது.

ஒரு நாட்டின் புலனாய்வுக் கட்டமைப்பினுள் இன்னொரு அந்நிய சக்தி ஊடுருவுமேயானால், அந்நாட்டின் பாதுகாப்பு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை என்பது பலவீனமாகி விட்டது என்பதே அர்த்தம். இதற்கு எந்தவிதமான காரணங்களையும் கூறி நியாயப் படுத்த முனைவது அர்த்தமற்ற விடயமேயாகும்.

இப்போது சிறிலங்காவுக்கு வருவோம்.

இந்த நாட்டில் ரணில் தலைமையிலான அரசு பதவியேற்ற காலம் முதலே, அதன் இராணுவ மற்றும் புலனாய்வுக் கட்டமைப்பில் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் மேற்கொள்வது குறித்து அதிகளவில் வெளிப்படையாகவே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டுப் போரில் தீவிரம் காட்டிவந்த சிறிலங்காவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள், காலத்திற்கு காலம் அதிகார அரசியல் பீடத்தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம், தத்தம் அரசியல் மற்றும் ஏனைய ஆட்சியியல், பதவியியல் அபிலாஷைகளுக்கேற்ப இராணுவ மற்றும் புலனாய்வுக் கட்டமைப்புகளில் நிர்வாக ரீதியிலான மாற்றங்களை தொலைநோக்கு சிந்தனையின்றி மேற்கொண்டு வந்துள்ளமையானது புதினமான விடயமல்ல.

சிறிலங்காவின் புலனாய்வுக் கட்டமைப்பு என்பது அந்த நாட்டுக்கே உரிய வகையில், அந்த நாட்டின் புலனாய்வுத் துறை நிபுணர்களால், தொலைநோக்குச் சிந்தனையுடன் உறுதியான வகையில், ஒரு தீர்க்கமான மூலோபாயத்தின் அடித்தளத்தில் உருவாக்கப்படவில்லை என்பது அண்மைக் காலங்கள் இக்கட்டமைப்பு தொடர்பாக, வெளிப்படையாக விமர்சிக்கக்கூடாத பல விடயங்கள், குறித்து பகிரங்கமாகவே எந்த வித பொறுப்புணர்வுமின்றி ஊடகங்கள் கருத்து வெளியிடும் நிலை ஏற்பட்டுள்ளதன் மூலம் புரிந்து கொள்ளவும் முடியும்.



சிறிலங்காவின் புலனாய்வு கட்டமைப்பு மாற்றங்களுக்கு ஆலோசனைகளையும் திட்டவரைபுகளையும் வழங்கிய அந்நிய சக்திகள், தங்கள் தங்கள் நாட்டினதும் தமது தோழமை நாட்டினதும், சிறிலங்காவை மையப்படுத்தியதான இராணுவ அரசியல் அபிலாஷைகளுக்கேற்ற வகையில் தொலைநோக்கு மூலோபாயங்களுடன் தான் செயற்பட்டு வந்துள்ளன.

இதுவும் ரகசியமான விடயமில்லை. சிறிலங்காவின் புலனாய்வுக் கட்டமைப்பினுள் சர்வதேச மேலாதிக்க சக்திகளின் புலனாய்வு அமைப்புகளின் ஊடுருவல் என்பதும் ஒரு இயல்பான அம்சமே.

உள்நாட்டுப்போர், இந்த ஊடுருவல் சக்திகளுக்கு ஒரு வாய்பான நுழைவாசலாகி விட்டது.

யுத்தகாலத்தில் ஒரு வகையான தந்திரத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஊடுருவல்கள், சமாதான காலத்தில் மற்றொரு மூலோபாயத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருவ்தும் தெரிகிறது.

இந்த ஊடுருவல், இலங்கையின் இராணுவ கேந்திர முக்கியத்துவமிக்க, புவிசார் அமைவிடத்தின் எதிர்கால கட்டுப்பாட்டை தமக்குள் கொண்டு வரும் மூலோபாய இலக்கினை மையப்படுத்தியே மேலாதிக்க சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது முன்னர் 'போர்' நுழை வாசலாகியது.

இப்போது 'சமாதானம்' பிரதான உள்நுழை வாசலாகியுள்ளது. இது அண்மையில் சிறிலங்காவின் அதி முக்கிய இரகசியமுடிவுகளை தீர்மானிக்க கூட்டப்படும், புலனாய்வுத்துறை அதிகாரிகளின் உயர் மட்ட மாநாடுகளில் அமெரிக்காவின் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் பங்கேற்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

இதனைவிட ஆபத்தானதும் அவமானகரமானதுமான ஒரு விடயம் வேறொன்றுமேயில்லை.

வெளிநாட்டு புலனாய்வாளர்கள், அதிகாரிகள், துறை சார் நிபுணர்கள், ஒரு நாட்டுக்கு வருவதும் பரஸ்பரம் விடயங்கள் குறித்து பேசிக் கலந்துரையாடி, ஆலோசனை வழங்குவதும் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி குறித்து உடன்பாடுகளை எட்டுவதும் நாடுகளுக்கிடையியே சர்வ சாதாரணமான விடயமேயாகும்.

இதன்போது இரு தரப்பினருக்கும் உள்நோக்கங்களும் இருக்கலாம். புறநோக்கங்களும் இருக்கலாம். ஆனால் எதுவானாலும் கூட இப்படியான அணுகுமுறைகள் ஒரு மரபாகிவிட்டதால் எவரும் இது குறித்து சந்தேகம் கொண்டாலும் கூட விமர்சிப்பது கிடையாது. இதும் ஒரு மரபுதான்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# வல்லரசுகளின் குத்துச்சண்டைக்குள் சிக்கிய சமாதானம்?

**நிலாந்தன்**

**வவுனியாவில** ஜப்பானியர்கள் வீடுவீடாக மணிக்கூடுகள் விற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் தெரியாத அநேகமாக ஆங்கிலமும் தெரியாத மேற்படி ஜப்பானியர்கள் சிறிதளவு ஆங்கிலம் மற்றும் கைப்பாஷைகள் மூலம் பொருட்களை விற்று வருகிறார்களாம். இப்படிக் குழுக்கள் குழுக்களாக வரும் ஜப்பானியர்கள் மணிக்கூடுகளை விற்கும் ஒரு போக்கு சுமாராக ஒரு மாதத்துக்கு முன்பு தொடங்கியது என்றும் கூறப்படுகிறது.

இது போல இந்தியர்களும் புடவைகள் மணிமாலைகள் மற்றும் மூலிகைத்தைலங்களை வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் வீடுவீடாக விற்று வருவதாகக்கூறப்படுகிறது. இந்தியர்கள் ஜப்பானியர்கள் வருவதற்குச்சில மாதங்களுக்கு முன்பே இங்கு வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னையகாலங்களில் ஜப்பானிய வாகனங்களே எமது தெருக்களில் ஓடின. ஆனால் கடந்த சில வருடங்களாக இந்திய மோட்டார் சைக்கிள்கள் எமது தெருக்களை நிறைத்து வருகின்றன.

மலிவான விலை மற்றும் எரிபொருள் சிக்கனம் ஆகிய இரண்டு முக்கிய காரணங்களுக்காகவும் இந்திய மோட்டார் சைக்கிள்களுக்கு இங்கே கிராக்கி அதிகரித்து வருகிறது. இதுதவிர இளந்தலை முறையினரை வசப்படுத்தும் விதத்தில் மிகக்கவர்ச்சியாக வடிவமைக்கப்படும் இந்த மோட்டார் சைக்கிள்கள் மிடுக்காகவும் இளமைத்துடிப்போடும் காணப்படுகின்றன. அதோடு விதம்விதமான கண்ணைப்பறிக்கும் நிறங்களிலும் கிடைக்கின்றன.

கீரோ கொண்டா மற்றும் பஜாச் கொம்பனிகளுக்கிடையிலான போட்டியால் வரவர இந்த மோட்டார் சைக்கிள்களின் கவர்ச்சி இன்னுமின்னும் அதிகரித்துவருகிறது.

ஒரு முறை கீரோகொண்டா தனது மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு செய்த விளம்பரத்தில் "இது தொழிற்சாலையில் தயாரிக்கப்படவில்லை மாறாக ஸ்ரூடியோவில் உருவாக்கப்பட்டது" என்று காணப்பட்டது. அதாவது அது ஒரு தயாரிப்பு அல்ல படைப்பு என்று அர்த்தம்.

இப்படி மோட்டார் சைக்கிள் மட்டும் அல்ல கனரக வாகனங்கள் குறிப்பாக சொகுசு பஸ்களைப் பொறுத்தவரை இந்திய உற்பத்திகள் இலங்கைச்சந்தைகளில் அதிகம் விற்கப்படும் ஒரு நிலை உருவாகிவருகிறது. இந்தியச் சொகுசு பஸ்கள் உடனடியாக வேகம் எடுக்கும் சக்தி மிக்கவையாக இருப்பது திருப்பங்கள் நிறைந்த சீரற்ற எமது தெருக்களுக்கு மிகவும் பொருத்தமாய் இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதோடு அவை கடும்பாவனைக்கு நின்று பிடிக்கத்தக்கவையாகவும் காணப்படுகின்றன.

இது போன்ற சொகுசு பஸ்களைத்தவிர இந்தியடாட்டாக் கொம்பனியின் உற்பத்திகளான இன்ரகூலர் வகை சொகுசு வாகனங்களுக்கும் இலங்கைச்சந்தையில் மிகவும் பிரகாசமான எதிர்காலம் ஒன்று உருவாகிவருகிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இங்கு நிலைமைகள் காணப்படுகின்றன.

இது மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நாட்டின் எரிபொருள் விநியோகத்தை இந்தியக் கொம்பனிகளிடம் கொடுக்கத் தொடங்கிவிட்டது. இதன்படி முன்பு அரசின் பொற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்த நூறு எரிபொருள் விநியோகக்கடைகள் இந்திய ஓயில் கம்பனிகளிடம் கொடுக்கப்பட்டு விட்டன.

இதற்கிடையில், அண்மையில் மன்னார் குடாவில் எண்ணெய்ப்படிவுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த எண்ணெய்ப் படிவுகளை அகழ்ந்தெடுக்கும் சக்தி இலங்கை போன்ற சிறிய நாட்டிடம் இல்லை என்று கூறும் அமைச்சர் கருஜெயசூரிய அகழ்வு வேலைகளை தனியார் கொம்பனிகளிடம் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக கடந்த புதன்கிழமை கூறியிருக்கிறார். இது அநேகமாக இந்திய கொம்பனிகளிடமே தரப்படும் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இது தவிர இந்திய மருந்துப்பொருட்களுக்கு அவற்றின் மலிவு விலை காரணமாக ஏற்கனவே இலங்கைச்சந்தையில் கிராக்கிமிக அதிகம்.

இதெல்லாம் எதைக்காட்டுகிறது? உலகின் கொம்பியூட்டர் மென்பொருள் வல்லுநர்களில் 30 சதவீதத்தினரை தன் பிரஜைகளாகக் கொண்டிருக்கும் இந்தியா இச்சிறிய இலங்கைத்தீவை தன்னுடைய போட்டிக்கிடமற்ற ஒரு சந்தையாக மாற்றிவருகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் வைத்தே இப்பத்தியின் தொடக்கத்தில் கூறப்பட்ட ஜப்பானிய வியாபாரிகளின் வருகையைப் பார்த்தாகவேண்டும்.

அண்மையில் கொழும்பை மையமாகக்கொண்டியங்கும் ஒரு தமிழ் மீடியாக்காரர் சொன்னார்... புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளில் ஜப்பானின் ஈடுபாட்டை எப்படிப்பார்க்கிறார்கள் என்று. அவர்கள் சொல்கிறார்களாம் இச்சிறுதீவு தமக்கு மட்டுமேயான ஒரு சந்தை என்று. இதற்குள் ஜப்பான் நுழைவது என்பது அவர்களால் எதுவித்திலும் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாயிருக்கிறதாம்.

இது ரோக்கியோ மாநாட்டுக்கு முன்பே புதுடில்லி ஜப்பானுக்குத்தெளிவாகச்சுட்டிக் காட்டிய ஒருவிவகாரம்தான். புதுடில்லிக்கு விஜயம்செய்த ஜப்பானிய துணைவெளிவிவகார அமைச்சரிடம் இது கூறப்பட்டது. இலங்கைத்தீவில் இந்தியா அல்லாத வேறெந்த சக்தியும் தலையிடும்போது அதிலிருக்கும் 'வரையறைகளை' அந்தசக்தி உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற தொனிப்பட இந்திய அதிகாரிகள் ஜப்பானிய அமைச்சரிடம் கதைத்திருந்தார்கள்.

ஆனால் ஜப்பான் அதைப் பொருட்படுத்தவில்லை. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னிருந்து வந்த மிகநீண்ட ஒதுக்கத்திலிருந்து விடுபடுவது என்று அவர்கள் எப்பொழுதோ முடிவெடுத்துவிட்டார்கள். ஈராக்கின் வீழ்ச்சிக்கு பிந்திய உலகில் அதற்கான அகப்புற நிலைமைகள் மேலும் அதிகரித்து வருகின்றன.

சந்தைவாய்ப்புகளுக்காகவும் பாதுகாப்பான வர்த்தக வழிகளுக்காகவும் இவற்றுடன் முக்கியமாக, இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அவர்கள் இழந்த முதன்மையையும் மதிப்பையும் மீளப்பெறுவற்காகவும் அவர்கள் மிகநிதானமாக இச்சிறுதீவின் யுத்த களத்தில் அடியெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு இரண்டாகப்பிளக்கப்பட்ட ஜேர்மனி அந்த வீழ்ச்சியில் இருந்து இன்னமும் முழு அளவில் எழவேயில்லை. ஆனால் ஜப்பான் எழத்தொடங்கி விட்டது. தொழில்நுட்ப அர்த்தத்தில், அது எப்பொழுதோ எழுச்சி பெற்று விட்டது. அரசியல் அர்த்தத்தில் தான் இழந்த முதன்மையை பெறும் பொருட்டாக களத்தில் இறங்கி விட்டது. இது இந்தப்பிராந்தியத்தின் வலுச்சமநிலையை பாரதூரமாகப் பாதிக்கவல்லது. சீனாவும் இந்தியாவும் தான் இது குறித்து முதலில் அஞ்சவேண்டிய நாடுகளாய் இருக்கின்றன.

இலங்கைத்தீவில் நோர்வே தலையிட்டபோது இந்தியா அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. இச் சமாதான முயற்சிகள் முன்னரைப் போல குறுகிய ஆயுளைக் கொண்டவைகள்தான் என்று இந்தியா கணக்குப்போட்டது. நோர்வேயும் நடக்கின்ற எல்லா விசயங்களையும் அவ்வப்போது இந்தியாவுக்கு ஒப்புவித்து வந்தது. எனவே இந்தியா ஆரம்பத்தில் ஒத்துழையாது ஒதுங்கியிருக்கும் ஒரு போக்கைக் கடைப்பிடித்தது பெரியளவு எதிர் நிலைஎடுக்கவில்லை.

ஆனால் சமாதான முயற்சிகள் வழமைக்கு மாறாக நீடித்த போது அவற்றின் பின்னணியில் வேறு ஏதோ வெளியில் சொல்லப் படாத ஒரு ரகசிய நிகழ்ச்சிநிரல் இருக்கக்கூடும் என்று இந்தியா சந்தேகிப்பதுதெரிகிறது.

ஆனாலும் சமாதானத்தைக்குழப்பும் விதத்தில் இந்தியா பெரியளவில் வெளிப்படையாக எதையும் செய்யமுயலவில்லை. ஆனால் ஜப்பானின் பிரவேசத்தோடு இந்தியா அதிகம் சீண்டப்பட்டு விட்டதுபோலத்தோன்றுகிறது. இந்தப்பிரச்சினையை இந்தியா நீண்ட கால நோக்கில் பார்ப்பதும் தெரிகிறது.

எனவே சமாதான முயற்சிகளை நேரடியாகப்பாதிக்கும் விதத்தில் இந்தியா காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டது. இதில் இந்தியர்கள் ஒருவித இரட்டை அணுகுமுறையைக்கையாள்வதும் தெரிகிறது. தாங்கள் சமாதான முயற்சிகளுக்கு எதிர் இல்லை. ஆனால் புலிகளுக்கு எதிர் என்ற விதமாக இந்தியாவின் செய்கைகள் காணப்படுகின்றன.

முதலாவதாக, சர்வதேசக் கடலில் வைத்து புலிகளின் கப்பல்கள் தாக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியாவின் கடற்படையும் உளவுத்துறையும் சம்பந்தப்படுவதாக பலமாக சந்தேகிக்கப்படுகிறது. இத்தகைய தாக்குதல்களின் மூலம் புலிகளை ஆத்திரப்படுத்தி சமாதானத்தை முறித்து விடலாம் என்று அவர்கள் நம்புகிறார்களா? அல்லது சர்வதேசக்கடலில் தமது பலத்தை நிரூபிக்க விரும்புகிறார்களா? இதன் மூலம் தம்மை மீறிச் செய்யப்படும் சமாதானத்துக்கு இருக்கும் வரையறைகளை உணர்த்த விரும்புகிறார்களா?

இரண்டாவதாக, தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பில் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளில் கொழும்புக்கான இந்தியத்தூதுவர் நேரடியாகவே களத்திலிறங்கியிருக்கிறார். ஆனந்த சங்கரியை மாற்றும் பொருட்டு சில யாழ்ப்பாணத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்றிருந்த ஒரு சூழ்நிலையில், இந்தியாவுடனான அவர்களுடைய குடும்பங்களின் தங்கு நிலையை உணர்த்தி அவர்களுடைய அடுத்தகட்ட நகர்வை இந்தியத்தூதுவரே தடுக்க முயற்சி எடுத்ததாக ஒரு தகவல் கூறுகிறது.

மூன்றாவதாக, இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுக்கு ஏகபிரதிநிதித்துவம் தரப்படுவதை இந்தியா எதிர்ப்பதாக நம்பப்படுவது.

நாலாவதாக, யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள சில தீவுகளுக்கும் இந்திய உளவுத்துறை அதிகாரிகள் போய் வந்தாக ஒரு தகவல் உண்டு. இந்திய உளவுத்துறை அதிகாரிகள் அடிக்கடி பலாலியூடாக யாழ்ப்பாணத்துக்கு வந்து போவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவதாக, சில சமயங்களில் சமாதானம் முறிக்கப்பட்டால், புலிகள் எடுத்த எடுப்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலக்குள் எதையும் தாக்கிக் கைப்பற்றும் வாய்ப்புகள் குறைவுஎன்று புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் கூறுகிறார்களாம். அல்லது அப்படியொரு நம்பிக்கையை கொழும்பில் உருவாக்க முயல்கிறார்களாம்.

இந்த எல்லா விசயங்களையும் தொகுத்துப்பார்த்தால் ஒன்று தெரியவரும். இந்தியா இப்பொழுது எங்கே யாருடன் நிற்கிறது என்று. இதைவிட முக்கியமாக எப்பொழுதில் இருந்து இந்தியா இப்படித்தீவிரமாக களத்தில் இறங்கியது என்று பார்த்தால் இன்னும் ஒன்று தெரியவரும். அவர்கள் ஜப்பானின் பிரவேசத்தால் அதிகம் சீண்டப்பட்டிருக்கிறார்கள்என்பது.

இலங்கையைப் பொறுத்த வரை ஜப்பான் ஒரு உதவிவழங்கும் நாடாக இருந்தது வரை இந்தியா பெரிதாகப்பொருட்படுத்தவில்லை. ஆனால் சமாதான முயற்சிகளில் அது ஒரு நிதி அனுசரணையாளராக மாறிய போதே அதை இந்தியா களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

சிங்களத்தீவிரவாதியான கலாநிதி நளின்டீசில்வா, ஜப்பானை கிழக்கின் பிரிட்டன் என்று அழைக்கிறார். மேற்கில் உள்ள பிரிட்டன் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு மறுப்பேதுமின்றி தலையாட்டுவது போல கிழக்கில் ஜப்பான் காணப்படுகிறது என்ற அர்த்தத்தில் அவர் இவ்வாறு கூறுகிறார்.

இந்தியா அமெரிக்காவின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு அமெரிக்காவுடன் சேர்ந்து ஆசியாவைப்பங்கிடத்தயார். ஆனால் ஜப்பானின் புதிய பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு ஜப்பானுடன் சேர்ந்து இலங்கைத்தீவைப்பங்கிடத்தயாரில்லைப்போலத்தோன்றுகிறது.

இந்த சந்தை பிடிக்கும் போட்டியில் இப்பொழுது சிக்கியிருப்பது தமிழர்களின் நிலமும் உயிரும் உரிமைகளும் தான்.

இதில் ஜப்பான் யுத்தநிறுத்தத்தை தனது பிரதான துருப்புச் சீட்டாகப்பயன்படுத்துகிறது.

இந்தியாவோ புலி எதிர் நிலைப்பாட்டை தனது பிரதான துருப்புச்சீட்டாக வைத்திருக்கிறது.

ஆசியாவின் கேந்திர முக்கியதுவம் மிக்க வர்த்தக வழிகளில் இச்சிறுதீவு அமைந்திருப்பதே அதன் கவர்ச்சிக்குக்காரணம். அதோடு, உலகின் விரைந்து வளரும் ஆறு பொருளாதாரங்களில் ஒன்றாகிய இந்தியாவுக்கு அருகே இச்சிறுதீவு அமைந்திருப்பதும் மற்றொரு காரணம்.

இந்த கவர்ச்சிகள் காரணமாக இச்சிறுதீவை மொய்க்கும் எல்லாப்பேரரசுகளோடும் தமிழர்களை மோதவைப்பதே இது வரையிலும் இருந்து வந்த அநேகமாக எல்லாச் சிங்களத்தலைவர்களினதும் பிரதான உத்தியாய் இருந்து வருகிறது.

இது காரணமாகவே இனப்பிரச்சினை சர்வதேச மயப்பட




இந்தியா இலங்கையில் ஆரம்பித்துள்ள எண்ணெய் கம்பனிக்குச்சொந்தமான எண்ணெய் நிரப்பும் நிலையமொன்றில் எண்ணெய் நிறப்பும் சிங்களஇளைஞர்கள்

மேலும் மேலும் சிக்கலானதாகிக்கொண்டு வருகிறது.

சிங்களத்தலைவர்கள் என்றைக்குமே வரலாற்றிலிருந்து பாடம் கற்றதில்லை. இச்சிறுதீவு இரு இனங்களாகப்பிளவுண்டிருக்கும் வரை பேரரசுகளுடன் பேரம்பேசும்போதெல்லாம் சிங்களவர்களின் பேரம் பேசும் சக்தி மிகப்பலவீனமாகவே இருக்கும். அந்நியரிடம் நிபந்தனையின்றி சரணடைவதைத்தவிர அவர்களுக்கு வேறு வழி இருப்பதில்லை.

மாறாக தமிழர்களோடு சேர்ந்து இச்சிறுதீவை பங்கிடத் தயாராகும் போது மட்டும் தான் முழு இலங்கைத்தீவினதும் பேரம்பேசும் சக்தி மிகவும் உச்சமாய் இருக்கும்.

எனவே, சிங்களத்தலைவர்கள் தமிழர்களின் தலைகளை உருட்டி அரசியல் செய்யும் ஒரு நிலை உள்ளவரை இச்சிறுதீவு பேரரசுகளின் குத்துச்சண்டைக்களமாக மாறும் ஆபத்தும் அப்படியேயிருக்கும். ●

# நறுக்கென...

## திரிசங்கு நிலையில் சந்திரிகா...



வெண்ணெய் திரண்டு வாற நேரத்தில தாழி உடைந்த கதையாக..... சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டணி அமைப்பு முயற்சி போய் விடும் போல இருக்கிறது.

ஜே.வி.பியுடன் கூட்டினை ஏற்படுத்தும் தீவிரமான செயற்பாடுகளுக்கு சுதந்திரக்கட்சிக்குள் உள்ள சிரேஷ்ட தலைவர்களின் தீவிரமான எதிர்ப்பு இருப்பது தெரிந்ததே..... சனாதிபதி கனவில் மயங்கி கூத்தாடும்'அனுரா'வுக்கு உரு வேற்றி..... அவரைத்தம்மிஷ்ரப்படி ஆட்டிப்படைத்து வரும் ஜே.வி.பியினர், தமது அரசியல் அபிலாஷைகளை மிகச்சுலபமாக எட்ட சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றமையும் தெரிந்ததே.... ஒரு காலத்தில்.... சிறிமாவின் ஆட்சிக்காலத்தில்.... ஆட்சியைக் கவிழ்க்க 'புரட்சி' செய்ய முயன்று.... தோல்வி கண்டதுடன் அதே 'சிறிமா'வினால் இந்திய உதவியுடன் சிதைக்கப்பட்டு சீரழிக்கப் பட்ட அமைப்புத்தான் ஜே.வி.பி என்ற ஜனதாவிமுக்தி பெரமுனை...

'விமுக்தி' என்றால் 'விடுதலை' என்று அர்த்தம் மக்களை 'விடுதலை' செய்வோம் என முன்னணி அமைத்தவர்கள் மாக்களாக சிறிமாவினால் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

பின்னர் ஜே.ஆர்ஆட்சிக் காலத்தில் 'விடுதலை' பெற்ற இந்த முன்னாள் 'புரட்சி' யாளர்கள் பின்னர் பிரேமதாசாவின் ஆட்சியின் போது ஆடிய ஆட்டமும், அது அடங்கிய தன்மையும் கூட உலகறிந்த விடயம்.

அக்காலத்தில் இந்த 'விமுக்தி' விரும்பிகளால் கொல்லப்பட்டவர்தான் சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரரணதுங்க. இப்போது தன்னை விதவையாக்கிய 'விமுக்தி' விரும்பிகளுடன் கைகோர்க்கத் துடிக்கும் சந்திரிகா.... விஜயகுமாரரணதுங்கவுக்கு தான் செய்யும் துரோகத்தை உணரும் நிலையில் இல்லை.....

பதவியாசை.... அதிகார வெறி..... அரசியல் அபிலாசை 'கொலைகாரர்' என்று அவரால் வர்ணிக்கப்பட்டவர்களுடன் அரசியல் 'குலாவ'லுக்கு ஆசை கொள்ள வைத்துள்ளது. ஆனால்.... சந்திரிகா கணவனை புறமொதுக்கி 'விமுக்தி' விரும்பிகளுடன் கூட்டுச் சேர முயன்றாலும் மற்றொரு 'விமுக்தி'க் காரர் அதை விரும்பவில்லையாம்.

அவர் சந்திரிகாவின்.... விஜய குமாரரணதுங்கவின் மகனான 'விமுக்தி'யே தான்.

'அப்பாவை கொன்றவர்களுடன் உங்களுக்கென்ன கூட்டு' என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளதாம்...!

விமுக்திக் கும்பல்.... இனி இந்த 'விமுக்தி'யையும் இலக்கு வைக்கலாம்.

அரசியல் அபிலாசை எதனைத்தான் செய்யாது?

சந்திரிகா ஜனதா விமுக்தியினருக்காக மகன் 'விமுக்தி'யை பகைக்கப்போகி றாரா?

பொறுத்திருந்து பார்ப் போம்.

## கைக் கூலிகளின் காட்டில் 'கன' மழை பொழிகிறது...



டக்ளஸ் தேவானந்தா வின் திடீர் இந்திய விஜயம்.

பரந்தன் ராஜனை ஜப்பானிய பிரதித்தூதுவர் புதுடில் லியில் சந்தித்துப்பேச்சு... இரகசியச் சந்திப்பில் ஜப்பான் வருமாறு அழைப்பு.

தமிழர்விடுதலைக் கூட்டணியினரை இந்தியத் தூதுவர் அழைத்துப் பேச்சு.... அழுத்தமும் அச்சுறுத்தலும்.

இடைக்கால அலகில் தமிழ் குழுக்களையும் சேர்க்குமாறு இந்திய அழுத்தம் அதிகரிப்பு...!

இவையாவும் கடந்த வாரப் புதினப் பத்திரிகைகளில் வெளியான சிந்திக்க வைக்கும் செய்திகளில் சிலவாகும்.....

பொ.ஐ.முன்னணி- தேசபக்தர் முன்னணியாக வடிவமைக்கப்படும் சமயத்தில் அதில் ஈ.பி.டி.பியையும் இணைத்துக் கொள்ளுமாறும் அவர்களையும் அதில் இணைந்து கொள்ளுமாறும் 'அயலகத்' தின் அறிவுறுத்தல் இருதரப்புக்கும் அழுத்தமாகவே வழங்கப்பட்டதைத் தொடர்ந்து டக்ளசின் இந்திய விஜயம் நடந்துள்ளது.

இந்தியாவின் 'எடுபிடியும் செல்லப்பிள்ளையுமான 'காலமா கிக்கொண்டிருக்கும் வடக்குக் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வர் வரதர் மீதான அக்கறை இந்தியாவுக்கு குறைந்து வருவதாகவும், அவரது செல்வாக்கின்மையை அவர்கள் புரிந்து கொண்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்தே இந்தியப் பார்வை 'டக்ளஸ்' மீதுபதிந்துள்ளதாகவும் அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள்.

அதே போன்று, சமாதான நகர்வுகளில் கை நழுவிப்போன இனப்பிரச்சினை மீதான தனது பிடியை மீண்டும் கைப்பற்றும் முயற்சியின் ஆரம்ப நகர்வுகளை இந்தியா ஆரம்பித்துள்ளதாகவும் அதன் வெளிப்பாடுகளே கூட்டமைப்பினர் மீதான அழுத்தம். இடைக்கால அலகில் தமிழ்க் குழுக்களை உள்ளடக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம்... போன்றவையாகும் என்றும் கூறப்படுகிறது...

ஜப்பான் பிரதித்தூதருடனான பரந்தன் ராஜனின் சந்திப்பும் ஜப்பானுக்கு வருகை தருமாறு அவருக்கு விடுக்கப்பட்ட அழைப்பும் கூட இந்திய மூலோபாயத்தின் ஒரு அங்கமாகவே நோக்கர்களால் கருதப்படுகிறது.

தமிழ் மக்கள் உரிமை விடயத்தில் விடுதலைப்புலிகள் காட்டிவரும் இறுக்கமான, விலைபோகாத தன்மை, இந்த வெளிச்சக்திகளையும் கைக் கூலிகளையும், தலையாட்டி களையும் அணுகவைத்துள்ளது என்றும் தெரிகிறது.

எதுவானாலும் இலங்கையின் இனப்பிரச்சினை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆதிக்க வலுவை மேம்படுத்த நினைக்கும் சக்திகளின் ஊடுருவல் ஊடகமாகியுள்ளது என்பது மட்டும் உண்மை...

இந்த 'ஊடக'த் தேடல் கைக்கூலிகளதும், காட்டிக் கொடுப்போரதும் காட்டில் தற்காலிக 'மழை' பொழியக்காரணமாகி விட்டுள்ளது...

## சமாதானம்... தூரத்துப் பச்சை!



படைத்தரப்பிற்கு மீண்டும் ஆட்களைச்சேர்ப்பதற்கு பாதுகாப்ப அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தொடங்கி யுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இதனை ஒரு வழமையான - பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைதான் எனவும், 'போர்' நோக்கம் கொண்டதல்லவென்றும் அரசு விளக்கமளிக்கலாம்......

ஆனால் தமிழ் மக்கள் 'காதிலை' பூச்சுற்றிக்கொண்டு இதற்கு தலையாட்டப் போவதில்லை. அவர்களின் பட்டறிவு அனைத்தையும் அவர்களுக்கு உணர்த்தும்.

சமாதான உடன்பாடு எட்டப்பட்டு போர் நிறுத்தப்பட்டதும், தீர்வு எட்டப்பட்டவுடன் இருக்கும் படையினருக்கு வேலையில்லாமல் போய் விடும் என்றும், எனவே அவர்களை ஐ.நா.அமைதிப் படையில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வேறு எவருமல்ல..... சிறிலங்கா பிரதமர் ரணிலே கூறியிருந்தார்.

அது உண்மையானால்... அப்படியான நிலையான தொரு தீர்வை வழங்குவதற்கு அவர் ஆத்மார்த்தமாக உறுதி பூண்டிருந்தால் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கியிருக்க மாட்டார்....

கடற்படையை வலுப்படுத்த மேலும் புதிய போர்க்கப்பல்கள் பீரங்கிப்படகுகள், நீண்டதூரவீச்சுக்கொண்ட பீரங்கிகள் உட்பட கனரக ஆயுதங்களைப் பெருமளவில் கொள்வனவு செய்வதற்காக அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும் பேச்சுக்களை ஆரம்பிக்க அனுமதிவழங்கியிருக்கமாட்டார்.

பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான ஒரு குழு இச்சமாதான காலத்தில் திடீரென அவசர அவசரமாக - கடற்படைத்தளபதி தயாசந்தகிரியுடன் இஸ்ரேலுக்கு பயணமாகி இருக்கவேண்டிய அவசியமேயில்லை...

பாதுகாப்புத்தரப்பை, முப்படையை, புலனாய்வுக்கட்டமைப்பை என்றுமில்லாதவாறு நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடவேண்டிய தேவைக்கு காரணம்தான் என்ன?

இஸ்ரேலியபாதுகாப்பு அமைச்சரைச் சந்தகிரி சந்தித்துப் பேசுகிறார்.

அமெரிக்க, பிரிட்டிஸ் இராணுவ அதிகாரிகள் அடிக்கடி விஜயம் செய்கின்றார்கள்.

இராணுவத்தினர் புதிய முகாம்களை - காப்பரண்களை அமைத்து பலப்படுத்துகிறார்கள். சோதனைக் கெடுபிடிகளை தீவிரமாக்கத் தொடங்கியுள்ளனர்...

இவையாவும் சமாதானத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளே அல்ல... அமைதிக்கு அச்சுறுத்தலான 'போர்'எச்சரிக்கை நடவடிக்கைகளேயாகும்....

சமாதானத்தின் பேரால் திறைசேரி நிரம்பி வருகிறது...

போரின் பேரால் அதனை செலவழிக்க அரசும் தயாராகிவருகிறது போல் தெரிகிறது....

'யுத்தம் சரணம் கச்சாமி..'

— செங்குட்டுவன் —

## மதவடி மயிலர்



**செய்தி:-** *சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணியால் அனுரா- நிமால் சிறிபால டிசில்வா இருவருக்கிடை யிலும் விரிசல்.*

**மயிலர் :-** கூட்டணி சேரும் முன்னரே விரிசல் என்றால் சேர்ந்தால் 'உடைசலாத்'தான் போகும் போல.... தேசபக்தர்களிடையே மோதலென்றால் தேசம் முன்னணிக்கு வந்தாப்போல தான்.... போங்கோ....

**செய்தி :-** *ஆட்சிக்காலம் முடியுமுன்னர் அரசை சந்திரிகா கலைக்க முடியாது என்கிறார் ராஜிதசேனாரத்தன.*

**மயிலர் :-** அம்மையார் கலைப்பன் கலைப்பன் எண்டு குலைக்கிறார்... இவர் கலைக்கேலாது என்கிறார்..... நல்ல கள்ளன் பொலிஸ்விளையாட்டு தான்பாருங்கோ..... ஏட்டிக்குப் போட்டி நாட்டிற்கு நல்லதில்லை பாருங்கோ.....

**செய்தி :-** *சமாதானம் தொடராவிட்டால் நிதியுதவி நிறுத்தப்படும். பிரித்தானியத் தூதர் எச்சரிக்கை.*

**மயிலர் :-** காசுக்காக சமாதானம் பேசினால் கடைசி வரை நிலைக்காது பாருங்கோ..... முந்தி பிரித்தாளும் தந்திரத்தை கையாண்ட பிரித்தானியா இப்ப சேர்த்து வைக்க மந்திரம் ஓதினம்.....முட்டி மோத கத்தியைக் கொடுத்திட்டு கட்டித் தழுவென்றால்..... கதையைப் பாருங்கோ...!

**செய்தி :-** *சுதந்திரக்கட்சி.... ஜே.வி.பி கூட்டணிக்குள் ஈ.பி.டி.பிக்கும் இடமளிக்க ஏற்பாடு...*

**மயிலர் :-** ஆடாத ஆட்டம் ஆட கூடாத கூட்டம் கூடுது பாருங்கோ... கெட்ட கிரகங்கள் ஒண்டாச் சேர்ந்தா...கேட்டுக்கு மேல கேடு தான் பாருங்கோ...! வீடு கொழுத்திற ராணிக்கு..... விளக்குப்பிடிக்கிற தளபதிகள்.... நான் சொல்லிறதிலை பிழையிருக்கே...?

**செய்தி :-** *புதிய ஆட்சேர்ப்புக்கு சிறிலங்கா இராணுவம் திட்டம்.....*

**மயிலர் :-** ஓடு மீனை ஓடவிட்டிட்டு உறு மீன் பிடிக்க திட்டம் போடினம் போல.... 'படையைத்' திரட்ட நினைக்கிற சண்டியன்.... சண்டைக்கு விடை கொடுப்பான் என்று நினைக்கலாமோ? கத்தியைக்கமக்கட்டுக்குள்ள மறைச்சுக் கொண்டு.... கையாட்களையும் கூட்டிக்கொண்டு கைகுலுக்குவம் வா எண்டால் எப்படி...?

**செய்தி :-** *எம்.பீக்கள் மீதும் இனிமேல் உடற்சோதனை நடத்தப்படும்...! பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு.....*

**மயிலர் :-** உடற்சோதனை உடனடியாச்சாத்தியப்படாது பாருங்கோ..... சோதனை செய்யப் போறவருக்கு தான் வேதனை பாருங்கோ.... பாதாள உலகக்கும்பல்களின் பங்காளிகளை பகைக்கிற வேலை சரிப்படாது பாருங்கோ.....

# விழிப்படையும் தருணமிது!



இலங்கைத்தீவைச் சுற்றி இப்போது பலமான இராசதந்திர போர் வியூகம் ஒன்று இடப்படுவதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

இந்த இராசதந்திர போர் வியூகத்திற்குள் இலங்கைத் தீவுஇப்போது பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

இந்த பகுப்பாய்வுக்கான தகவல்களுக்காகவும் தரவுகளிற்காகவும் பல இராணுவ அரசியல் இராசதந்திர நிபுணர்களின் இலங்கைக்கான விஜயம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம் இலங்கை இப்போது பொறிக்குள் திணறும் எலி போன்று இருக்கும் நிலையையே காட்டுகிறது.

இராசதந்திரப் போரியலின் பகுப்பாய்வின் பெறுபேறுகளுக்கான பல முன்மொழிவுகள் சமாதானத்தின் பெயரால் வைக்கப்படுவதும் தெளிவாகிறது.

இலங்கைத்தீவில் காணப்படும் அசாதாரண நிலை இராசதந்திர படையெடுப்பாளர்களிற்கு வாய்ப்பாகவுள்ளது.

இதில் எதிரெதிர் முரண்பட்ட இராசதந்திர தளகர்த்தாக்கள் எதிரெதிர் நிலையில் இருந்து பலவியூகங்கள் அமைக்கின்றனர்.

இந்த இராஜதந்திரப்போர் வியூகத்திற்கு வாய்ப்பாக இலங்கைத் தீவிற்குள் இருப்பது அரசு புலிகளுக்கிடையிலானபோர் மட்டுமல்ல.

முன்பு பிரான்ஸ் தேசத்தில் காணப்பட்ட இரு தலைவர்களும் ஒரு நாடும் என்ற நிலையைப் போன்று இலங்கையில் காணப்படுவதும் ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

அதாவது பிரான்சில் ஒரு சமரசத்தின் அடிப்படையில் ஒரு நாட்டை இரு தலைவர்கள் நிர்வகித்தார்கள். இதனால் பெருமளவில் குழப்பங்கள் இடையூறுகள் தவிர்க்கப்பட்டன.

ஆனால் இலங்கையில் பிரான்சைப் போன்று அல்லாமல் எதிரெதிர் முரண்பட்ட இரண்டு தலைவர்கள் தமக்குள் சமரசங்கள் ஏதுமின்றி நாட்டை நிர்வகிப்பதும் இராசதந்திர போர் வியூகத்திற்கு வாய்ப்பளித்துள்ளது.

இதில் பிரதமர் ரணிலை ஒரு தரப்பும் சனாதிபதி சந்திரிகாவை இன்னொரு தரப்பும் என கையாளப்படும் நிலையைக் காணலாம்.

இதில் வடக்குக் கிழக்கில் புலிகளால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமாந்திர அரசு இந்த இராசதந்திர போர் வியூகத்திற்குள் முதன்மையான விவகாரமாகிறது.

வடக்குக் கிழக்கில் காணப்படும் சமாந்தர அரசிற்கெதிரான இராசதந்திர வியூகமாகவே இந்தியாவில் அஞ்ஞாதவாசம் மேற்கொள்ளும் ஈ.என்.டி.எல்.எப்பை ஜப்பானும் சந்திரிகாவின் விசுவாசியான டக்ளஸ் தேவானந்தாவை இந்தியாவும் கையாள நினைக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு தகவலின்படி வரதராசப் பெருமாளினூடாக இலங்கையால் சாதிக்க முடியாது போனதை டக்ளஸ்தேவானந்தாவினூடாக சாதிக்க முடியுமா என இந்தியா பரீட்சிக்க முயல்வதாகவும் தகவலொன்று தெரிவிக்கின்றது.

இதே நேரம் கூட்டணியின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஆனந்த சங்கரிக் கூடாக மிகப்பொருத்தமான நேரத்தில் கூட்டணிகளுக்குள் ஒரு இரத்த அதிகாரத்தை பிரயோகித்து விடலா மெனவும் இந்தியா நினைப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இவையெல்லாம் எதைக் காட்டுகிறது. இலங்கைத் தீவிற்குள் தோற்றிவிக்கும் சமாதானத்தையா? அல்லது தோற்றிவிக்கப்போகும் குழப்பங்களையா?

இங்கே தமிழ் மக்கள் விழிப்படைய வேண்டிய தருணமிது வென்பதை எவரால் மறுதலிக்க முடியும்?

இந்த நிலையில் ஒப்பந்தங்கள்மூலம் புலிகளைத் கட்டுப்படுத்தி பலவீனமாக்கிவிட அமெரிக்கா நினைக்கிறது.

புலிகள் மீதான அமெரிக்காவின் தடையை நீக்கக் கூடிய காலம் நெருங்கி வருகையில் அமெரிக்காவோ புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு நிபந்தனையை வைப்பது போலத் தெரிகிறது.

அண்மையில் 'திவயின' பத்திரிகையில் வெளியான தகவலொன்றின்படி அமெரிக்காவின் இராசாங்கத் திணைக்களம் 'புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடுவதாக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்களேயானால் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து புலிகளை நீக்கமுடியும்' என அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாக செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இது அமெரிக்கா ஒஸ்லோ மாநாட்டில் புலிகளிடமிருந்து பெறமுடியாது போனதை அல்லது இறுதியாக புலிகளின் பங்களிப்பு ஏதுமின்றி நடந்துமுடிந்த ரோக்கியோ மாநாட்டில் பெறமுடியாது போய் விட்டதை ஒரு ஒப்பந்தத்தின் மூலம் பெறநினைக்கிறது போலத்தெரிகிறது.

ஆனால் தமிழ் மக்களிற்காக எந்த ஒப்பந்தங்களாலும் பெற முடியாது போய் விட்ட, மறு தலிக்கப்பட்ட உரிமைகளை பெற்றுக்கொடுக்க அமெரிக்கா தயாராக இருப்பது போன்று தெரியவில்லை.

உலகில் உள்ள எல்லா போராட்ட அமைப்புகளிலிருந்தும் மாறுபட்டு ஒப்பீட்டு ரீதியில் அதிக பகுத்தறிவு சிந்தனையின் பாற்பட்டு ஒரு செல் நெறியின் கீழ் தமது போராட்டத்தை தொடரும் புலிகளை பலவீனமாக்கிவிட எத்தனிக்கப்படுகிறது.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரை குறைந்த பட்சமாகக் கூட பலவீனப்படுவதென்பது தமிழ்மக்களின்உரிமையை வலுவிழக்கச் செய்யும் என்கின்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் போலத் தெரிகிறது.

இராணுவ ரீதியாக சிறிலங்கா அரசைப் பலப்படுத்திக்கொண்டு பொருளாதார ரீதியாக அரசை வலுப்படுத்திக் கொண்டு பயங்கரவாதம் என்ற பெயரில் புலிகளை பலவீனப்படுத்த நினைப்பது மேலும்மேலும் இலங்கைப்பிரச்சினையை இறுதிப்புள்ளியில் இருந்து தள்ளச் செய்யும்.

வல்லரசுகளின் போட்டிகளுக்கு அப்பால், சனாதிபதி பிரதமருக்கிடையிலான போட்டிகளுக்கு அப்பால், அரசதரப்பு போச்சுவர்த்தை பிரதிநிதிகளுக்கிடையிலான போட்டிகளுக்கப்பால் தமிழர் பிரச்சினை தப்பிப்பிழைத்து எந்த வடிவத்தில் வரப்போகின்றதென்ற கேள்வி இப்போது எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர்களின் உரிமைகள் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் புலிகளின் பலம் பாதுகாக்கப்பட்டேயாக வேண்டும். அதுவே தமிழர்களிற்கான நம்பிக்கையாக இருக்கும்.

கொழும்பில் ஒரு இராசதந்திரி பிரஸ்தாபித்தாராம். புலிகள் அவர்களை நோக்கியெழுப்பப்படும் பல கேள்விகளுக்கு உடனடியாக பதிலளிக்காமல் மௌனம் சாதிக்கிறார்கள் என்று.

**சிறி. இந்திரகுமார்**

புலிகளின் மௌனம் அவர்களிற்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் இந்த இராசதந்திர வியூகத்தை புலிகள் எப்படி விளங்கிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறார்கள்.

ஆனால் புலிகளோ இழுத்த இழுப்புக்கெல்லாம் சாயாமல் காத்திருக்கிறார்கள். இந்த சமாதான நாடகத்தின் கருப்பொருள் வெளிப்படும் வரை அதுவே இந்த இராசதந்திர படையெடுப்பிற்கு தடையாகவும் இருக்கிறது.

## சுகாதாரத்திற்கும் சூழலிற்கும் ஆபத்தை விளைவிக்கும் பிளாஸ்ரிக் பொருட்களின்... படையெடுப்பும்... ஆக்கிரமிப்பும்....

## இயற்கையில் இருந்து அந்நியமாகும் எம்மவர்கள்: எதிர்கொள்ளவுள்ள ஆபத்தை உணரவில்லை...!

**சாதாரணமாகவே** பிளாஸ்ரிக் பொருட்களில்லாத வீடுகள் எதுவும் எங்களுடைய சூழலில் இல்லையென்று சொல்லலாம்.

பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக்வாளிகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், பிளாஸ்ரிக் குவளைகள், பிளாஸ்ரிக்பாய்கள், பிளாஸ்ரிக்கொள்கலன்கள், பிளாஸ்ரிக்கோப்பைகள், பிளாஸ்ரிக் மேசைகள், பிளாஸ்ரிக்தட்டுகள், பிளாஸ்ரிக்விரிப்புகள், பிளாஸ்ரிக் பூக்கள்,பிளாஸ்ரிக்பேசின்கள் என எல்லாவற்றிலும் பிளாஸ்ரிக் மயமாகி வந்து விட்டோம் எல்லோரும். அதுவும் இத்தனை விரைவாகஇப்படி வந்து விட்டோமா என்று ஆச்சரியம் கொள்ளுமளவிற்கு பிளாஸ்ரிக்கின் கவர்ச்சிக்குட்பட்டு விட்டோம்.

பிளாஸ்ரிக்பொருட்கள் அழகானவையாக இருக்கின்றன. இல்லையில்லை கவர்ச்சியானவையாக இருக்கின்றன. அவைபாவனைக்கு இலேசானவையாகவும் உள்ளன. அதேவேளை விலை குறைந்த வையாகவும் இருக்கின்றன.

இவையெல்லாம் பிளாஸ்ரிக்பொருட்களின் மீதான ஈடு பாட்டை சனங்களிடம் குவிக் கின்றன. இதனால் உளளூர் உற்பத்திப் பொருட்களின் கவர்ச்சி குறைந்து வருகின்றது. அவை எத்தனை தான் சிறப்பாக கூறப்பட்டாலும் இயற்கையோடிணைந்தவை என்று சொல்லப் பட்டாலும் அவற்றை வாங்குவோர் குறைந்தே வருகின்றார்கள். அதிலும் தமிழ்ப் பகுதிகளில் தான் இத்தகைய உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்குவோரின் தொகை குறைந்து வருகின்றது.

இயற்கையோடிணைந்த பொருட்களின் பாவனையைக் கைவிடும் போக்கில் மிக வேகமாக இருப்பவர்கள் தமிழர்கள் என்பதை சாதாரண அவதானிப்பின் போதே இலேசாக புரிந்து கொள்ளலாம்.

அந்த அளவுக்கு நாங்கள் கவர்ச்சியின் பாற்பட்டு ஓடுகிறவர்கள் ஆகிவிட்டோம்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் வானொலி, தொலைக்காட்சிகளிலும் பிறபிரசுரங்கள், கூட்டங்கள் எல்லாவற்றிலும் சுற்றுச் சூழல் மாசடைதலைப்பற்றி அடிக்கடி பேசிவருகின்றோம். சூழலியலில் விழிப்புணர்ச்சியடைய வேண்டும் என்றும் பாடுபடுகின்றோம். இதில் பிளாஸ்ரிக்கின் தீமைகள் பற்றியே கூடுதலாகக் கதைக்கின்றோம்.

ஆனால் மறு பக்கத்தில் பிளாஸ்ரிக்பொருட்களையும் குறைவில்லாமல் வாங்கிக்குவிக் கின்றோம். அநேகமாக சொல்வது ஒன்றாகவும் செய்வது அல்லது வாழ்வது வேறொன்றாகவும் பழகிவிட்டது நமக்கு. இதில் வெட்கமோ கூச்சமோ கொஞ்சமும் இல்லை என்ற நிலைமை தான்.

பொதுவாகவே இப் போது தமிழர் பகுதிகளிலுள்ள எல்லா அலுவலகங்களிலும் பிளாஸ்ரிக் கதிரைகள் தான் நிறைக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய பாவனைப் பொருட்கள் கூட பிளாஸ்ரிக்கால் ஆனவை தான்அதிகம்.

பிளாஸ்ரிக்கினால் ஏற்படுகின்ற தீங்குகள் பற்றியும் எங்களுக்கு நிறையத்தெரியும். தெரிந்தாலும் பிளாஸ்ரிக்கின் மீதே எங்களுக்கு பிடிப்பதிகம்.

**வெளிவாசல்பாலன்**



மரத்தளபாடங்கள், மண்ணாலான பாத்திரங்கள், பித்தளை, அலுமினியம் ஆகியவற்றாலான பொருட்கள் பிரம்பு, பனை, தென்னை, மூங்கில், புல், ஈஞ்சு போன்றவற்றாலான கைவினைப்பொருட்கள் எல்லாம் எவ்வளவு இதமான சுவாத்தியத்தையும் நல்ல மன நிலையையும் தருவன என்று தெரிந்தாலும் நாங்கள் அவற்றை விரும்புவது குறைவு.

இது ஏனோ தெரியவில்லை. எங்களுக்கு இப்படி யொரு பிடிவாதமான நன்மை மறுப்புக்குணம் உண்டு.

இல்லையென்றால் எங்களுடைய முன்னோர் பாடுபட்டுச்செய்து, பக்குவமாகச் சேர்த்த கைவினைப் பொருட்களையும் கலைப்பெறுமதிகளையும் யார்யரோவுக்கெல்லாம் சில்லறைவிலைக்கே விற்றுத் தீர்ப்போமா?

பதிலாக அந்த இடங்களிற்கும் இன்னும் புதிதாகவும் இப்படியே பிளாஸ்ரிக்கை அள்ளி வந்து நிரப்புவோமா?

ஆனால் இந்த விடயத்தில் சிங்களவர்கள் வேறு விதமாக நடந்துகொள்கிறார்கள். எப்போதும் அவர்கள் கைவினைப் பொருட்களுக்குச்சிறப்பிடம் தருகிறார்கள். கலைப் பெறுமதியை மதிக்கிறார்கள், விரும்புகிறார்கள்.

தங்களுடைய கைவினைகளை அவர்கள் என்றும் விட்டுவிடுவதில்லை. இன்னும் புதிது புதிதாக இன்னும் அழகு அழகாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

அநேகமாக சிங்களவர்களின் வீடுகள் எல்லாவற்றிலும் பல கைவினைப் பொருட்களிருக்கும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# எங்கட கை கால்களை நம்பி...



நேரம் 12 மணி என்பதை சூரியனின் ஒளிக்கதிர்களின் அகோரத்தில் விளங்கிக்கொண்டேன். பஸ் புறப்படுவதாய் தெரியவில்லை.

"சீ..... வெளிக்கிட்டால் போயிடவேணும் இது..... அங்கநிண்டு, இங்கநிண்டு போறதுக்கிடையில வாழ்க்கை வெறுத்துப்போடும். பழஞ்சீலை கிழிந்ததாய் சுமித்தா புறு புறுத்துக் கொண்டாள்.

"பிள்ளைகள், வெளியில போகப்போறியள் மக்கள் இன்றைய நாட்டு நிலைமையைப்பற்றிக்கேள்வி கேட்பினம், பதில் சொல்லக்கூடிய நிலையில் நீங்கள் இருக்கவேணும். இந்தாங்கோ பேப்பர் இதுல முக்கியமான செய்திகளை வாசியுங்கோ" உதயாக்கா ஈழநாதத்தை சுமித்தாவிடம் நீட்டினார்.

"ம்.... நான் சொன்னதில என்ன பிழையிருக்கு. முகாம விட்டு வெளிக்கிடவே 2,3 மணியாகும். பேந்தெங்க நிலைப்பாடுகளைப் புரியிறது.... சுமித்தா முகத்தைச் சுழித்தபடி பத்திரிகையுடன் வந்தாள்.

"பிள்ளைகள் பேப்பரைதாங்கோ, நான் வாசிக்கிறன். கவனமா கேட்கவேணும், கேள்வி கேட்பன்." ஞானம் ரீச்சர் பேப்பர் வாசிக்கத்தொடங்கினார். அவர்களின் கவனம் வாகனச் சத்தம் கேட்கிறதா....? என்பதிலேயே இருந்தது.

"அக்கா வாகனம் வந்திட்டுதா?" ஞானம் ரீச்சர் நிலாக்காவைக்கேட்டார். எங்கடநிலப்பாடு புரிந்தது.

"ஓம் ரீச்சர் ஆக்களை அனுப்புங்கோ."

வாகனத்தில் ஏறினோம் ம்.... ஊ... வாகனம் புறப்படுவதாய் இல்லை. சினத்துடன் சுமித்தா வதனாவைப்பார்த்தாள், வெய்யிலின் அகோரத்தில் சினக்கிறாள் என்பதை விளங்கிக் கொண்டு புரிந்தும் புரியாதவளாய்..."என்ன சுமித்தா சரியாய் வேர்க்குதென்ன?" சினந்த அவளுக்கு வதனாவின் நிமிண்டல் சிரிப்பையூட்டியது. அவளின் கையை பிடித்தடி வாகனத்தில் ஏறினாள்.

பஸ் விட்டுவீதியாய் இருந்ததால், காற்று மேலில் பட சுகமாய் இருந்தது.

பஸ் பயணிக்கிறது. வீதிகளில் மக்களின் நடமாட்டம் பெரிதாக இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பு பச்சைப் பசேலென காட்சியளித்த நெற்பயிர்கள், அறுவடை செய்யப்பட்டு பூசணிக்காய் வடிவில் உயர்ந்து இருந்தது. வீதி அருகு வயல் வெளி மர ஓர நிழல்களில் 200 மீற்றர் இடையிடை பெண் போராளிகள். ஆயுதங்களுடன். தலையில் சாக்குத்தொப்பி அணிந்து, வீதியால் செல்லும் வாகனங்களின் புழுதி முழுதும் அவர்களில் தான் படிந்திருக்க வேணும்.

கைவேலியடி காட்டுத் தொடர்ச்சிப் பிரதேசம், அது தான் விடியவே கிளியறின்போய் வருகினம். அணிக்கு விளக்கம் கற்பித்துக் கொள்கிறேன். நானும் ரீமில் நின்றிருந்தால் இப்ப இந்தக்கடமையில ஈடுபட்டிருப்பன். சுமித்தா எட்டி, எட்டி பார்த்தபடி வதனாவிற்கு விளக்கம் சொன் னாள்.

எங்கள் பஸ் ஒழுங்கை ஒன்றினுள் திரும்புகிறது. நடேசன் குடியிருப்பு தேவிபுரம் ஒழுங்கை போட் போடப்பட்டிருந்தது. மெயின் றோட்டில் இருந்து மிக அண்மையில் அந்தக்குடியிருப்பு.

"ஒருத்தருக்கும் இறங்க மனமில்லைப் போல." சுமித்தா முண்டி அடித்துக் கொண்டு இறங்கினாள். வீதியையும் அரவணைத்துக்கிளைகள் பரப்பிப்படர்ந்திருந்தது ஆலயமரநிழல். என்னை அந்த இடத்திலேயே இருக்கச்சொல்லியது. நிழலைப் பிரியமனமின்றி குடியிருப்புக்குச் செல்கிறேன்.

வாழைச் சருகால் அடைக்கப்பட்ட வேலி சிறிய மண்குடிசை முற்றத்தில் இரண்டு வாழைக்குட்டிகள் அருகே மாமரம் ஒன்று.

"வதனாக்கா வாங்கோ நாங்கள் இந்த வீட்ட போவம்"
வெண்ணிலா அவள் கையைப்பிடித்துக்கொண்டே சொன்னாள்.

"வாங்கோ பிள்ளையள்; வாங்கோ வாங்கோ நீங்களும் என்ர பிள்ளைகள்தான்."உரிமையோடு வரவேற்கிறார்.அம்மா புன்சிரிப்புடன் மருது வரவேற் கிறார். உயிரோடல்ல உயிரோட்டமுள்ள படத்திலிருந்து ஒரு கணம் அவனுக்கு தலை சாய்த்து விட்டு அருகிருந்த குந்தில் அமர்ந்திருக்கிறோம்.

"அம்மா, இங்க எத்தினையாம் ஆண்டம்மா வந்தனீங்கள்?" அடுத்து அவரிடம் கேள்வி கேட்கவேண்டிய அவசியமே இருக்க வில்லை.

"எங்கட சொந்த இடம் திருகோணமலை கந்தளாய்பிள்ளை. அங்க இருந்து 76ஆம் ஆண்டு இனக்கலவரத்தில இடம் பெயர்ந்தம். அண்டில இருந்து இன்றுவரைக்கும் இடம்பெயருறம்....

கந்தளாயிலிருந்து, ஆலங்கேணிக்கு இடம் பெயர்ந்தம். 76ம் ஆண்டு, 40 முஸ்லிம்காரர்ட கடைய சிங்களக் காடையர்கள் கொழுத்திப்போட்டு, இயக்கப் பெடியள் கொழுத்திப் போட்ட தாய்ச் சொன்னானுகள். எங்கட பெடியள் கொழுத்தினது எண்டால் எங்களவிடு வாங்களே."

இப்பவும் அப்படித்தான் நடக்குது. எங்கட தமிழ்மக்களை தாக்கிறதும் ஆயுதங்களைக் காட்டி, நாங்கள் விடுதலைப்புலிகள் எண்டு, வேசம் போட்டு கப்பம்பறிக்கிறதும், விடுதலைப் புலிகளுக்கும் எங்கட மக்களுக்கு மிடையில பிரிவினை ஏற்படுத்தி தன்ரவசம் மக்களை எடுக்க அவன் கையாளுற தந்திரோபாயங்களும் நினைவில் வந்துபோயின.

"ஐயோ நாங்கள் படாதபாடு கொஞ்சநெஞ்சமில்லப்பிள்ள பிள்ளைகளத்தூக்கிறதா, சமானுகளைத் தூக்கிறதா, கடவுளே அவன் அடிகிற செல்லொன்று விழுந்து குடும்பத்தோட கொண்டு போய் சேர்த்திடாதா என்று தோன்றிச்சு. இதத்தவிர அந்த நேரத்தில வேற ஒன்றுமே நல்ல வழியாத் தெரியேல்லப்பிள்ள. அவனிட்டப் பிடிபட்டு சித்திரதவப்பட ஏலாது. மிருகத்தனமா நடப்பாங்கள்.

தம்பலகாமத்தில 10 வருசம் இருந்தம், ஒரே நோயும் நொடியும் தொழிலும் இல்ல. இப்பிடியே இருந்து என்ன செய்யிறது? குத்தகைக்கு இரண்டேக்கர் காணி விதைப்பமெண்டு வெளிக்கிட்டம்: அடுத்த இடப்பெயர்வு.

86 ம் ஆண்டு வடமராட் சிக்கு வந்தம். அங்க வந்தும் 2,3 வருசமாபடாத பாடு. நாயலைச்சல்தான்.

எனக்கு நாலு பிள்ளைகள் 3 பெடியனுக்கு இவள் ஒருத்தி தான் பெட்ட முத்தவர் போராட்டத்துக்குப் போகப் போறன் எண்டு நிண்டார். தகப்பன் "நீ போறது சரி தம்பி O/L ரெஸ்ற் எடுத்துட்டுப்போ." என்றார் அவன் பிடியாய் நிண்டான் இப்ப வீரச்சாவு அடைந்தராயு அவரிட்ட நாங்களே ஒப்படைச்சம் பிள்ள... 1994 ஆம் ஆண்டு, 1996 ம் ஆண்டு சாவகச் சேரியில வீரச்சாவடைதிட்டார். பொடி கூட இல்லப்பிள்ள...

96 ம் ஆண்டு 10ஆம் மாதம் சூரியகதிர் நடவடிக்கை யோட வன்னிக்கு இடம் பெயர்ந் தம். இங்க வந்து 6,7 மாதம் படாத கஸ்ரமில்ல. இந்த நிலையில இளையவரும் போயிட் டார்.

மாவீரர், போராளிகள் குடும்பத்திற்கெண்டு இந்தக் காணி தந்தவையள்பிள்ள இருக்கிறம். இவருக்கு மூத்தவன் நல்லா படிப்பான். எல்லாத்திலையும் நல்ல கெட்டிக்காரன். O/L லில் ஏழு பாடம் பாஸ் அவரும் வால் காட்டீட்டார். இவரும் இயக்கத்தோடு தான் வேலை. நாங்கள் ரெண்டுபேர்தான்வீட்டில.

"அம்மா இப்ப பிரச்சினை இல்லத்தானே திருகோணமலைக்கு போகலாம்தானே"

"ஐயோ என்னால திரும்பி யோட முடியாது' பிள்ள பட்டஅவலம்காணும்"

இந்த குசுனி 10வது குசுனிபிள்ள. இயல்பு வரும் வரைக்கும் இந்த இடம்காணும்.

"அம்மா உங்களுக்கு நிறுவனங்கள் ஏதும் உதவி செய்து தந்ததில்லையா?"

"பிள்ள எண்டைக்கும் எங்கட கை, கால்கள நம்பித்தான் நாங்கள் இருக்க வேணும். யாரும் உதவி செய்வாங்கள் எண்டு நினைக்கிறது. பிழை பிள்ள."

அம்மாவின் பட்டறிவுப் பரிந்துரை. ம்..... எத்தினை பேர் எங்களுக்கு உதவுறது எண்டு வந்தவயள் என்ன நடந்தது. இப்பவுந்தான் நடுநிலை. தீர்க்கிறம் இந்தா, இந்தா எண்டு 2 வருச மாகப் போகுது ஏ-9 போக்குவரத்து தவிர என்னத்தக் கண்டம்.

நினைவுகள் கனக்க பஸ்சில் ஏறுகிறேன். "வாங்கோ பிள்ளைகள் நீங்களும் என்ர பிள்ளைகள் தான். எங்கட கை கால்களை நம்பித்தான், நாங்கள் இருக்கிறம்..."

பஸ் வேகத்தைவிட என் மன வேகம் அதிகமாய் தாக்கிறது.

**பா.இசைவிழி**

# தமிழ் நாட்டில் சினிமா ரசனை



தமிழ் நாட்டில் இதுவரை தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் 5,000. இதில் சர்வதேச அளவிலோ அகில இந்திய ரீதியிலோ பாராட்டப்பட்ட திரைப்படங்கள் எத்தனை? எத்தனை படங்கள் தமிழர் இல்லாத பகுதிகளில் வர்த்தக ரீதியாக ஓடியிருக்கின்றன? இந்த வருட இந்தியத்திரைப்பட விழாவில், ஏன் ஒரு தமிழ் படம் கூட இடம் பெறவில்லை? வருடத்திற்குச் சிலபடங்களையே தயாரிக்கும் சீனா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து வெளிவரும் படங்களின் தாக்கத்தைக் கவனியுங்கள். ஆண்டுக்கு ஆறு படங்களே எடுக்கும் பெல்ஜியம்,சீரிய படைப்புக்களைத் தருவது, சினிமா விமர்சகர்களால் The Belgian Miracle எனப் போற்றப்படுகிறது.

நாட்டிலேயே அதிகமான திரையரங்குகள் தமிழ் நாட்டில் தான் உள்ளன: 2546, அவற்றில் 806 டூரிங் கொட்டகைகள். 1916 லேயே இங்கு திரைப்படத் தயாரிப்புத் தொடங்கியும் ஏன் பின்தங்கியிருக்கிறோம்? சினிமா ரசனை நம்மிடையே வளராததற்கு ஒரு முக்கிய காரணம் அதன் மீது காட்டப்படும் அசிரத்தை. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இசை பற்றியும் நடனம் பற்றியும் போதிக்கப்படுகிறது. சினிமாவிற்கோ இடமில்லை. தமிழில் சினிமா பற்றி எழுதுபவர்களும், அத்தகைய நூல்களை வாங்குவோரும் குறைவு. ஆனால் தமிழ் இலக்கியத்தைப் பற்றி நூற்றுக்கணக்கில் நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ்ப் பத்திரிகைகளில்இலக்கியம், இசை, நடனம் பற்றி ஆழமான விமர்சனக் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனால் சினிமா விமர்சனங்கள் வருவதில்லை. வெகு அரிதாகச் சில சிற்றிதழ்களில் மட்டுமே வெளியாகின்றன. வெகுஜனப்பத்திரிகைகளில் திரைப்படம் பற்றி வரும் மதிப்புரைகள் சினிமா சார்ந்தவையாக இருப்பதில்லை. சினிமாவின் தன்மைகள் பற்றிய தெளிவு இருந்தால்தான் ஒரு திரைப்படத்தை மதிப்பீடு செய்ய முடியும் நம் விமர்சனத்தின் தரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு, விமர்சனங்கள் கதாபாத்திரங்களைக் குறிப்பிடாமல் நடிகர்-நடிகையரின் பெயர்களையே உபயோகிப்பது. "ஆட்டோ ரிக்ஷா ரைவரான ரஜினிகாந்திற்கு நக்மா காதலி" என்று தொடங்குகிறது ஒரு விமர்சனம்.

தமிழில் சினிமா பற்றிப் பேச, விவாதிக்க துறைச் செய்தி தேவை. இப்போது சினிமா பற்றி இலக்கிய ரீதியாகப் பேசுகிறோம். சினிமாவின் சாத்தியப்பாடுகள் பற்றிப் பேசாமல் அதன் உள்ளடக்கமாய் வரும் விஷயங்கள் பற்றி, கதைபற்றி மட்டுமே பேசுகிறோம்.நம் அனுபவங்களில் சிலவற்றை மட்டுமே வார்த்தைகளால் எளிதாக வர்ணிக்க முடியும். புதியதொன்றை நாம் சொல்ல முற்படும் போது சில எண்ணங்கள், சில உணர்வுகள் நம்முன் வருகின்றன. இங்கேதான் துறைச் சொற்கள் உருவாகின்றன.இத்தகைய சொற்கள் இல்லை என்றால் அந்தப் புதிய அனுபவத்தைப் புரிந்து கொள்வது, விவாதிப்பது சிரமம். சினிமா ரசனை வளர இத்தகைய துறைச்சொற்கள் அவசியம்.

சினிமா மொழியின் அடிப்படை இலக்கணம் எல்லா மக்களுக்கும் பொதுவானது. எழுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. பிம்பங்கள், அவற்றின் ஒருங்கிணைப்பு, கமராக் கோணங்கள் இவற்றால் ஆனது. இம்மொழி பற்றிய பரிச்சயம் நமக்குத்தேவை. மற்ற நாடுகளிலிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கும் காரணம் இந்தப் பரிச்சயமின்மைதான். இதனால்தான் நாம் அங்க அசைவுகளை நடிப்பென்றும் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சிக் கதம்பங்களை சினிமா என்றும் ஏற்கிறோம்.

இந்தக் கட்புல மொழியின் கோட்பாடுகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை. சினிமா பற்றிப்பேசும்போது இந்திய அல்லது தமிழ் சினிமாவை மேலை நாட்டுக் கண்கொண்டு பார்க்கக்கூடாது என்றவாதம் நம் முன்வைக்கப்படுகிறது. சில திரைப்படங்களுக்கு கலைப்படம் (Art film) என்ற முத்திரையைக் குத்துவதும் சினிமா பற்றித் தீர்க்கமாகப் பேசுபவரை ':.பிலிம் சொசைட்டி ஆள்' என்று சொல்வதும் போல, சினிமா மொழியை, அதாவது சினிமா எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சினிமா மொழி நாம்பேசும், எழுதும் மொழியிலிருந்து வேறுபட்டது. பாடலாசிரியர் ஒருவர் எழுதினாரே "கண்களின் வார்த்தைகள் புரியாதோ" என்று-அவ்வாறு கண்ணால் கண்டு உணரும் மொழி. சினிமா மொழி மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அதுதான் அதன் சக்தியும் கூட. சினிமா, முழுக்க முழுக்க தொழில் நுணுக்க வளர்ச்சியின் படைப்பு. இசை, நாடகம், நடனம் போலல்லாமல் கமரா லென்ஸ், ஒளிவிளக்குகள், ஒலிப்பதிவு நாடா, ஒளிவீச்சு ஆகியவற்றின் உதவியால் வெளிப்படும் ஒரு கட்புல ஊடகம். அதை ஒரு கதையாகவோ (இலக்கியம்) அல்லது நாடகமாகவோ பார்த்துக் கணிக்க முடியாது. சினிமாவை உணர, அனுபவிக்க வேறு வழி இல்லை. இந்த அம்சங்கள், கமராக்கோணங்கள், ஒளியமைப்பு, வெறும் தொழில்நுட்ப உத்திகள் மட்டுமல்ல; அவை சித்தாந்தத்தை உள்ளடக்குபவை. ஆகவே இம் மொழியை நாம் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அப்படிச்செய்தால் சினிமா ரசனை மட்டுமல்ல; நம் தனிப்பட்ட சினிமா அனுபவமும் புலனளவிலேயே நின்றுவிடாது, ஆழமானதாய் அமையும்.

சினிமாவின் அழகியல் பற்றிப்பேசினால் வெகுசனக் கேளிக்கைத் திரைப்படங்களை ஒதுக்குவதாக எண்ணவேண்டாம். ஒரு முழுக்க முழுக்க கேளிக்கைத் திரைப்படமும் நல்ல சினிமாவாக மலரலாம். இவற்றில் சித்தாந்தப்பாவனை எதுவும் கிடையாது. இலக்கியம், இசை, சினிமா போன்ற ஊடகங்கள் நம் வாழ்வைச்செறிவுள்ளதாக்க வேண்டும். நம் ஆளுமையைச் சீரழிக்கக்கூடாது.

**க.தியடோர் பாஸ்கரன்**

## அறிவியல்

# செவ்வாய் களத்தில் மூன்று நாடுகள்

**த.அருவி**

செவ்வாய்க்கோளில் ஆய்வுகளை மேற்கெள்வதில் 3 நாடுகள் விண்கலங்களை விண்ணில் செலுத்திவிட்டு காத்திருக்கின்றன.

ஐரோப்பிய விண்ணாய்வு மையமான ESA யின் மார்ஸ் எக்ஸ்பிரஸ் செவ்வாயை நோக்கி பீகிள் - 2 என்ற உபகலத்துடன் பயணித்துக்கொண்டிருக்கின்றது. பீகிள் - 2 உபகலம் பிரட்டனின் தயாரிப்பு. பீகிள்-2 மார்ஸ் எக்ஸ்பிரஸ் கலத்திலிருந்து பிரிந்து செவ்வாயில் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொள்ளும்.

அடுத்த விண்கலம் 'மார்ஸ் ரோவர்கள்' இவை அமெரிக்காவினுடையவை. இந்த விண் கலங்கள் 6 சக்கரங்களைக் கொண்ட ஓடும் வண்டிகள் ஸ்பிரிட், ஒப்பசூனிட்டி என்ற பெயர்களைக் கொண்ட இவற்றில் ஸ்பிரிட் முதலில் செலுத்தப்பட்டது. இரண்டாவதாக சென்றவாரம் செலுத்தப்பட்டது. ஒப்பசூனிட்டி ஏற்கனவே 1997ல் அமெரிக்காவின் பாத்பைண்டர் விண்கலம் சோயேணர் என்ற வண்டியை செவ்வாயில் தரையிறக்கி அதனை அதன் தரையில் ஓடச்செய்தது.

இப்பொழுது அடுத்தடுத்து இரு அமெரிக்கவண்டிகள் செவ்வாய்குச் செல்கின்றன. ஏற்கனவே அமெரிக்கா செவ்வாயில் தரையிறக்கிய மார்ஸ்போலர்லாண்டர் விண்கலம் தரையிறங்கியதுடன் தொடர்பினை இழந்தது. இதன் பின் அமெரிக்கா அனுப்பும் தரையிறக்கக் கலங்கள் இவை.

'மார்ஸ் எக்ஸ்பிரஸ்'ESA வின் முதல் பிற கோள் விண்கலம் ஆகும்.

செவ்வாய்க் கலத்திலுள்ள மூன்றாவது நாடு எது தெரியுமா? ஜப்பான்.

ஜப்பானே செவ்வாய்க்கான விண்கலப்பயணத்தில் ஈடுபட்டுள்ள மூன்றாம் நாடு. ஜப்பானின் விண்கலம் செவ்வாயை நோக்கி செலுத்தப்பட்டு நீண்டகாலமாகிவிட்டது. ஆனால் விண்கலம் நாஸோமி தான் செவ்வாயை சென்றடையவில்லை.

நஸோமி என்ற ஜப்பானின் செவ்வாய்க்கான விண்கலம் ஒரு சோகக்கதையாகி தளம்புகின்றது.

நஸோமி - இந்த ஜப்பானியச் சொல்லின் பெயர் 'நம்பிக்கை' 5 ஆண்டுகளுக்கு முன் நஸோமி விண்கலம் ஜப்பானால் செலுத்தப்பட்டது. பூமியின் சுற்றுப்பாதைக்கு வெற்றிகரமாக சென்ற நஸோமி செவ்வாய்க்கான பாதைக்குச் செலுத்தப்படும் வேளையில்-சூரியகாந்தப் புயலால் விண்கலத்தின் எரிபொருள் தாங்கி சேதப்படுத்தப்பட்டது. அதனால் அதன் தொடர்பு சாதனங்கள் செயலிழந்தன. இதன் பின் நஸோமி பூமியை விட்டு விலகிப் பயணித்தது.

இது ஒரு வளைபாதையில் பயணித்தது. இதன் போது 2002 டிசம்பரில் பூமியின் ஈர்ப்பு விசைக்கு கிட்டவாக வந்தது. பூமியின் அல்லது கோள்களின் ஈர்ப்பு விசையில் மோதி விண்கலங்கள் அதிகவேகம் பெறும் கோட்பாட்டிற்கமைய நஸோமி பூமியின் ஈர்ப்பு விசையில் மோதி வேகம் பெற்று செவ்வாய்க்குச் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் போதிய வேகம்கிட்டவில்லை.

இதன் பின் இரண்டாம் தடவையாக நஸோமி பூமிக்கு கிட்டவாக வரவுள்ளது. இப்பொழுது அது பூமியின் ஈர்ப்புவிசை மீது மோதி வேகம்பெற்று அது செவ்வாய்க்கு போகும் வாய்ப்பு உள்ளது. இதுவும் 50 வீதமே சாத்தியம் என ஜப்பானிய நாசேஸ் விண்மைய இயக்குநர் கலாநிதி ஜசுனேரி மடோவா கூறுகின்றார்.

இந்தநஸோமி மோதுகை அண்மையில் நடக்கவிருக்கின்றது.

நஸோமியின் காலம் கடந்த பறப்பு அதன் 'தூர சரிசெய்' ரொக்கட்டின் ஆயுளைக்குறைத்துள்ளது. செவ்வாய் நஸோமியை சென்றடைந்தாலும் செவ்வாயின் சுற்றுப்பாதைக்குள் அது நுழைய ஆதாரமாக செயற்படப்போகும் ரொக்கட்டின் எரிபொருள் உறையும் சாத்தியம் உள்ளது. ஏனெனில் நஸோமியின் வெப்பமாக்கி தொகுதி வலுவிழந்திருக்கின்றது.

வெப்பமாக்கல் தொகுதி தான் உறை வெப்பநிலையில் விண்கல எரிபொருளை உறையாது பாதுகாப்பதாகும். இங்கு அதன் நிலை கேள்வியாக உள்ளது.

செவ்வாயின் வளிமண்டலத்தை ஆராய்வதே நஸோமியின் பயண நோக்கம்.ஆனால்அது நிறைவேறுமா என்பதே கேள்வி.

செவ்வாய்ப் பயணத்தின் முன்னோடியான ரஷ்யா 1996ல் மார்ஸ் 96விண்கலப்பயணம் தோல்வியடைய ஓய்ந்துவிட்டது. ஆனால் செவ்வாய்க்கு மனித பயணம் பற்றியோசிக்கிறார்கள்.



வண்டியுடன் மார்ஸ்ரோவர் விண்கலம்.



நஸோமி விண்கலம் - ஜப்பானின் செவ்வாய் பரிதாபம்.



செவ்வாய் தரையில் இறங்கும் மார்ஸ்ரோவர் துணை வரைபடம்
Garth - பூமி
ஜப்பான் கொடி - நஸோமி
அமெரிக்ககொடி - மார்ஸ்ரோவர்- ஸ்பிரிற்
பிரிட்டன் - ஐரோப்பியக் கொடி - மார்ஸ் எக்ஸ்பிரஸ்
mars - செவ்வாய்
ஸ்பிரிட் - மார்ஸ்எக்ஸ் பிரஸ் பூமியிலிருந்து 3 மில்லியன் கிலோமீற்றர் தூரம் சென்று விட்டன.

சூரியத் தொகுதியுள் -
Earth position at launcl
செலுத்துகையின் போது பூமியின்நிலை
Mercury - புதன்
Venus - வெள்ளி
Mars - செவ்வாய்



மார்ஸ்ரோவர் ஒப்பசூனிட்டியை காவிய டெல்ரா ரொக்கட்.




மார்ஸ்ரோவரின் பயணப் பாதை.



மார்ஸ் ரோவர் அடங்கிய விண்கலம்.




மார்ஸ்ரோவர் ஸ்பிரிட் ஒப்பச்சூனிட்டி என வண்டிகளுக்குபெயரிட்ட சிறுமி.



மார்ஸ் எக்ஸ்பிரஸ்.

---

# தென்துருவக் கோமாளிகள்

பனி அடர்ந்த தென்துருவப் பிரதேசத்தின் சொந்தக்காரர்கள் தான் இந்தப்பென்குவின்கள். பென்குவின்களில் 18 வகையான இனங்கள் இருக்கின்றன. உலகின் மக்கள் தொகையைக் கணக்கெடுப்பது மாதிரி பென்குவின்களின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்துப் பார்த்திருக் கின்றார்கள். பார்த்தவர்கள் அதிர்ந்து போய் விட்டார்கள். 100 மில்லியன் பென்குவின்கள் என்றால் என்ன சும்மாவா? (துருவப்பகுதியில் மனிதன் இன்னும் வாசம் செய்ய ஆரம்பிக்காததாலேயே இந்தப் பறவைகள் நாசத்திலிருந்து தப்பித்து வருகின்றன.)

பெரும்பாலான பறவைகளில் பார்த்தஉடனேயே அதன் தோற்றத்தை வைத்து எது ஆண்? எது பெண்? என்று சொல்லி விடலாம். ஆனால், பென்குவின்களில் அதெல்லாம் முடியாத காரியம். ஆண் பறவைகள் பெண்களை விட கொஞ்சம் பெரிது என்பதைத் தவிர ( அதைக்கூட இலகுவில் கண்டு பிடித்து விடமுடியாது. மற்றும்படி ஆணும் பெண்ணும் பார்வைக்கு ஒரே மாதிரித்தான்.)

பெண் பறவைகளின் பார்வையைத் தம்மேல் படியவைப்பதற்காக ஆண் பென்குவின்கள் செய்யும் சில்மிஷங்கள் இருக்கின்றதே அப்பப்பா! கரணமடித்து, கற்களை அலகுகளால் தூக்கிக் காண்பித்து ' பார் என் பலத்தை ' என்று முஷ்டியை உயர்த்தாக் குறையாக சுவாரசியமான சேட்டைகளையெல்லாம் செய்து காண்பிக்கும் ஆண்பென்குவின்களை கடைசியில்'முட்டையை இட்டு விட்டு நீ ஜாலியாக போய் விடுநான் உக்காந்து அடைகாக் கின்றேன்' என்று கற்களை முட்டைகளாகப் பாவித்து அடைகாத்தும் காண்பிக் கின்றன. சரியான ஜெகஜாலப்பேர் வழிகள்.

துருவப்பகுதியில் தரையில் பென்குவின்களுக்கு எதிரிகள் கிடையாது. ஆனால், சீல்கள், திமிங்கிலங்கள், கடற்சிங்கங்கள் என்று கடலில் தான் இந்த அப்பாவிப் பிராணிகளுக்கு ஆபத்து அதிகம். மிக வேகமாக நீந்தக் கூடியவையாதலால் (மணிக்கு 24 கிலோ மீற்றர்களாம்) துரத்தி வரும் எதிரிகளுக்கும் போக்குக் காட்டி விட்டு பெரும்பாலானவை தப்பித்துப் போய்விடுகின்றன. மாட்டிக்கொள்பவை வேகமாக நீந்தமுடியாத நோயாளிப் பென்குவின்கள் தான். மேலே கறுப்பு, கீழே வெள்ளை என்று இதன் தோற்றமும், ஒரு தந்திரம் தான். கடலில் இவை மணிக்கணக்கில், நாள் கணக்கில் நீச்சலடிக்கும் போது கடலின் அடித் தளத்தில் இருக்கும் இதன் எதிரிகளுக்கு அடையாளம் தெரிந்து விடக்கூடாதல்லவா? அதனால் தான் வயிற்றுப்பகுதிக்கு இந்த வெள்ளைப்பூச்சு.

மற்ற விலங்குகளைப் போலவே இந்தப் பென்குவின்களும் தாகத்துக்கு தண்ணீர் குடிக்கின்றன. ஆனால், இருக்கும் இடம் கடல் பகுதியாச்சே. இதனால் உப்புத் தண்ணீரையே குடித்துக் கொள்கின்றன. கடைசியில் இப்படி உடம்பில் சேரும் உப்பு திரவ வடிவிலேயே பென்குவினின் அலகினூடாக துளித்துளியாக வடிந்து வெளியேறிவிடுகிறது (முதலைக் கண்ணீர் கதை மாதிரித்தான் இதுவும்.)

உலகிலேயே மிகக்குறைந்த வெப்பநிலையில் அடைகாக்கப் படும் முட்டைகள் பென்குவின்களுடையது தான். பென்குவின்கள் முட்டைகளை இடுவதற்காகக் கட்டும் கூடுகள் இனத்துக்கு இனம் வேறுபட்டதாக இருக்கின்றன.

எம்பரர் பென்குவின்களும் (Emperor penquins) கிங் பென்குவின்களும் (King penquins) கூடுகளைக் கட்டுவதேயில்லை. முட்டைகளைக்கால்களுக்கிடையில் வைத்து அடைகாக்கின்றன. பொரி த்து வரும் குஞ்சுகள் பற்றியும் ஒரு சுவாரசியமான செய்தியிருக் கிறது. குஞ்சுகளாய் இருந்தாலும் சரியான சாப்பாட்டு ராமர்கள். தாய்ப்பறவையும் தகப்பன் பறவையுமாக மாறி மாறி கடலுக்குப் போய் வந்து குஞ்சுகளுக்கு ஊட்டும் உணவின் அளவு கொஞ்சம் நஞ்சம் அல்ல. ஒருமணி நேரத்துக்கு இரண்டு கிலோ(அடேங்கப்பா.)

மனிதர்களைக் கண்டால் இதற்கு ஏகத்துக்கு குஷி பிறந்துவிடுகிறது. மனிதர்களுடன் சேர்ந்துதானும் நடைபோடுகிறது. இதன் தோற்றம், இது போடும்சத்தம், இரண்டு இறக்கைகளையும் கைகள் மாதிரி வீசி வீசி இது நடக்கும் இசகு பிசகலான நடை... எல்லாம் பார்ப்பவர்களுக்குச்சிரிப்பை வரவழைத்து விடுகின்றன. அதனால் தான் இந்தப் பறவைகளுக்குக் 'தென் துருவக் கோமாளிகள்' என்று பட்டப்பெயர் கிடைத்திருக்கிறது.



**விக்கி**

அதிகாரத்தில் பங்கு பெறுவதே சுதந்திரம் - ஸிஸரோ

# “நீரின்றி அமையாது இவ்வுலகம்”

ஒருகலஉயிரிமுதல், மனிதன்வரை நீரின்றி வாழ்வது என்பது முடியாத காரியமுமாகும்.

உலகின் மொத்தப்பரப்பில் 2/3 பங்கு நீரால் ஆனது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். அந்நீரில் பெரும் பகுதி உவர்நீராகவும், உறைபனியாகவும் உள்ளது. மனித பயன்பாட்டிற்கு உகந்த நன்னீர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. எனவே நன்னீரைப்பெறுவது, நன்னீர்வளத்தைப் பாதுகாப்பது என்பது மிக அத்தியாவசியமான செயற்பாடு ஆகும்.

எம் தாயகத்தின் நீர்வளம் பற்றி நோக்குவோமாயின் யாழ். குடாநாடு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் குளங்கள், ஆறுகள், நிலத்தடி நீர் ஆகியவற்றின் மூலம் நீரைப்பெறக்கூடிய வசதிகள் உள்ளன. யாழ் குடாநாடு தனியே நிலத்தடி நீரை மாத்திரம் கொண்ட பிரதேசமாகும் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளும் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலம் (புரட்டாதி - மார்கழி) அதிக மழையைப் பெறுகின்றன. கிழக்குப் பிராந்தியமானது மலையகத்திலிருந்து பாய்ந்து வரும் ஆறுகள் மூலம் வருடம் முழுவதும் நீரைப் பெறக்கூடியதாக உள்ளது. ஆனால் வடபகுதியானது குறிப்பாக வன்னிப் பெருநிலம் பருவக்காற்றுக் காலத்தில் மாத்திரம் உருவாகும் பருவகால ஆறுகள், இப்பருவகால ஆறுகளின் மூலம் நீர் பெற்று நிரம்பலடையும் குளங்கள் ஆகியவற்றின் மூலம் நீரைப்பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

வன்னிப் பிராந்தியத்தின் சில பகுதிகள் கடும்வரட்சிக் காலங்களில் குளங்கள் வற்றும் போது கிணறுகளில் நீர் வற்றிப் போவதும் உண்டு. இதனால் மக்கள் நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர். எனவே எம்மால் இயலுமான அளவு

| இயல்பு | அதி உச்ச ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு | அதி உச்ச அனுமதிக்கக் கூடிய அளவு |
|---|---|---|
| அமில கார தன்மை (PH) | 7.0 - 8.5 | 6.5 - 9.0 |
| கலங்கல் தன்மை | 2 | 8 |
| குளோரைட் Chioride | 200 ppm | 1200 ppm |
| மொத்தவன்மை | 250 ppm | 600 ppm |
| நுண்ணங்கி 01. E - Coli 02. ColiFoim | NIll(0) 0/100ml | 0 1-2/100ml |

அதிகமான நீரைத்தேக்கிவைப்பது விவசாயத்திற்கும் மக்களின் இருப்பிற்கும் அத்தியாவசியமாகும்.

வருடம் முழுவதுமாக நீரைப் பெற்றுக்கொள்வதற்கு தகுந்த நீர் முகாமைத்துவம் அவசியமாகும். இதற்காக

01. குளங்களின் அணைக்கட்டுகளைப் பலப்படுத்துதல், உயர்த்துதல்.

02. வடிகால், வாய்க்கால்களை புனரமைத்தல்

03. அளவான நீர்ப்பாசனமும், குறைந்த நீரில் வளரக்கூடிய நெல் வர்க்கங்களை (மேட்டுநில நெல்வர்க்கம்) பயிரிடல் என்பவை மிகமிக அத்தியாவசியமானதாகும்.

எம் தாயகத்தின் சிரசென அமைந்திருக்கும் யாழ். குடாநாட்டின் நீர் வளமானது அனைத்துப் பிரதேசங்களில் இருந்து வேறுபட்டு தனியே நிலத்தடி நீர்வளத்தை மட்டும் கொண்டுள்ளது. இந் நிலத்தடி நீர் இயல்புகள் பற்றி சிறிது பார்ப்போம்.

நிலத்தடி நீரானது ஒரு குவிவுவில்லை வடிவில் (படம் -1) அமைந்துள்ளது. நன்னீரானது உவர்நீரின் மேல மிதந்தபடி காணப்படுகின்றது. இந்நிலையில் கடல் மட்டத்தின் மேல் காணப்படும் பகுதியின் தடிப்பை நாம் xm எனக் கொள்வோமாயின் கடல் மட்டத்தின் கீழ் உள்ள நன்னீரின் தடிப்பானது 33xm ஆகும்.

உதாரணமாக ஒரு பிரதேசத்தில் கடல் மட்டத்தின் மேல் உள்ள நீர் வில்லையின் தடிப்பு 0.1 m எனக்கொண்டால் கடல் மட்டத்தின் கீழ் உள்ள நன்னீரின் தடிப்பு 3.3m ஆகும்.

எமது பாவனைக்கு அகற்றப்படும் நீரானது வருடாந்தம் பெறப்படும் மழையால் (பிரதானமாக பருவப்பெயர்ச்சி மழை) மீள நிரப்பப்படுகின்றது. ஆயினும் இந்நீரியல் சமநிலையானது படிப்படியாக இழக்கப்படுகின்றது. அதாவது யாழ் குடாநாட்டில் தற்போது பரவலாக எதிர்நோக்கப்படும் பிரச்சினை நன்னீர் கிணறுகள் உவர்நீராக மாறி வருவதும், நைதிரேற்று நஞ்சாக்கமும் ஆகும். இப்பிரச்சினைகளிற்கு மூலகாரணம் அதிகரித்த நீர்ப்பாவனையும் விவசாய உரங்களின் பாவனையும் ஆகும். அதிகரித்த நீர்ப்பாவனைக்காக ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதும் நன்னீர் கிணறுகள் உவர்நீராக மாற்றமடைவதில் பெரும் பங்காற்றுகின்றன. ஆழ் குழாய் கிணறுகளில் குழாய்கள் நன்னீர் வில்லையின் பருமனையும் கடந்து உவர்நீர் மட்டங்களை அடைவதனால் கிணற்று நீர் உவராக மாறுவதுடன், இந் நீரைப்பாய்ச்சும் போது நிலம் தரிசாக மாறுகிறது. அவ்வாறே கடற்கரைத் தளத்திற்கு அண்மையாக உள்ள கிணறுகளில் நீர்ப்பாவனை அதிகரிக்கும் போது வெளியேற்றப்படும் நன்னீரின் இடத்தை நிரப்ப கீழ் உள்ள உவர் நீர் மேல் உயர்கின்றது. இவ் உயர்ச்சியானது படிப் படியாக கிணற்று நீரை உவராக மாற்றுகிறது.

இவ்வாறு மாற்றமடைவதை எவ்வாறு தடுக்கலாம் எனப்பார்ப்போம்.

01. ஆழ் குழாய் கிணறுகள் அமைப்பதை இயலுமானவரைதவிர்த்தல்.

02. மிகையான நீர்ப்பாசனம், நீர் பயன்பாட்டை தவிர்த்தல்.




அ) கழிவு நீரை வீணே வழிந்தோட விடாது குழிகளில் தேக்கி நிலத்தினுள் ஊடுபுகச் செய்தல்.

ஆ) விவசாயத்தில் தூறல், சொட்டு நீர்ப்பாசனம், துளையிடப்பட்ட பாணைகள் என்பவற்றைப் பயன்படுத்தல்.

03. மேற்பரப்பு, நீர்த்தேக்கங்களை ஆழப்படுத்தல், புதிதாகஅமைத்தல் இதன் மூலம் மழை நீரானது வீணே கடலிற்கு ஓடிச் சேர்வது தடுக்கப்பட்டு நிலத்தடி நீரின் சூழ்நிலையைப் பேணுவதில் உதவும்.

04. உவர்நீர் தடுப்பு அணைகள் அமைத்தல்.

05. வாய்க்கால்கள் மூலம் கடலிற்கு பாய்ந்து செல்லும் நீரை தடுப்பணை அமைப்பதன் மூலம் கடற்கரையோரத்தில் தேங்கச் செய்து நிலத்தின் கீழாக படிப்படியாக ஊடுபுகச் செய்தல்

இவ் விரு செயற்பாடுகளின் மூலமும் நிலப்பரப்பினுள் ஊடுருவியிருக்கும் உவர் நீரின் மட்டத்தை கீழ் இறக்க முடியும். இச்செயற்பாட்டை (படம் 03) விளக்குகின்றது. படத்தில் அம்புக்குறிகளால் காட்டப்படுவது போன்று நீரானது விசையுடன் வெளியேற எத்தனிக்கும் போது உவர்நீரின் மட்டத்தை கீழ் இறக்குகின்றது.

06. மழைக்காலத்தில் கிடைக்கும் நீரை வீணே வழிந்தோட விடாது நிலத்தினுள் ஊடுபுகச் செய்தல். இச் செயற்பாடு பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

07. கைவிடப்பட்ட குடாநாட்டின் உப்பாறு நன்னீராக்கும் திட்டத்தை மீள ஆரம்பித்தல், கனகராயன் ஆற்று நீரை உப்பாற்றின் கீழ் முனையுடன இணைத்தல்.

அடுத்ததாக நைத்திரேற்று நஞ்சாக்கத்தைப்பற்றி பார்ப்போம். மிகையான நைதரசன் உரப்பாவனையானது. நீரின் மாசாக்கத்தில் பெரும் பங்காற்றுகின்றது. அமோனியா, யூரியா உரங்களில் காணப்படும் நைதரசன் ஆனது ஒட்சியேற்றம் அடைந்து நைத்திரேற்றாக மாற்றம் அடைகின்றது. இந் நைத்திரேற்றானது நீரினால் கழுவிச் செல்லப்பட்டு நிலத்தடி நீரை அடைகின்றது. நைத்திரேற்றின் அளவு நீரில் அதிகரிப்பதனால் அந்நீரை அருந்துவோருக்கு புற்று நோய், நீலக் குழந்தை பிறத்தல் போன்றவை ஏற்படும் சாத்தியம் உண்டு.

இதனைத் தவிர்ப்பதற்காக

01. நைதரசன் உரங்களை வரம்பு மீறிப் பாவிப்பதை தவிர்த்தல்.

02. மெல்லப் பரவும் (Slowre leasing) நைதரசன் உரங்களைப் பாவித்தல்.

03. இயற்கையான நைதரசன் பதிக்கும் நுண் உயிரிகளைப் பாவித்தல். (Agolla-Acetobaclor)

எம் தாயகத்தின் நன்னீர் பாதுகாப்பு பற்றி மேலோட்டமாக இது வரை பார்த்தோம். குடி நீரானது பின் வரும் நியமங்களை (Standords) கொண்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய இயல்புகளில் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையைக் கொண்டு நீரானது மலக்கழிவுகளினால் மாசாக்கம்அடைந்தது பற்றி அறியமுடியும். நீரானது மலக்கழிவுகளினால் மாசாக்கம் அடையும் போது மேற்கூறப்பட்ட அங்கிகளின் எண்ணிக்கை நீரில் அதிகரித்துக் காணப்படும்.

இந்நிலைமையானது தொற்று நோய் பரவும் அபாயத்தை அதிகரிக்கச் செய்யும். எனவே சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கு, பயன் படுத்துவதற்கு அனைவரும் கைகோர்த்துச் செயற்படல் அத்தியாவசியமாகும். இதற்காக

வி. ஜெயச்சந்திரன்,
விவசாய இரசாயனவியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்

அனைவரும் கொதித்தாறிய நீரைப் பருகுவது, மலசல கூடங்களைப் பாவிப்பது, மலசல கூடங்களை கிணறுகளில் இருந்து பாதுகாப்பான தூரங்களில் அமைப்பது என்பது அத்தியாவசியமாகும்.

பாதுகாப்பான தூரங்களில் மலசல கூடங்களை அமைப்பது நகர்ப்புறங்களில் மிகவும் சிக்கலான தீர்க்கப்பட முடியாத விடயமாக இருப்பது கவனத்திற்குரியது. இப்பகுதிக் கிணறுகள் கிரமமான முறையில் தொற்று நீக்கம் செய்வது அத்தியாவசியமாகும்.

“எம் சூழலை பாதுகாப்பதற்கு எம் நீர் மூலங்களைப் பாதுகாப்பதுடன் சுத்தமான நீர் அருந்தி எம் நலனையும் காப்போம்”

## ஈழநாதம் நிறுவனம் நடாத்திய 2002 மாவீரர் நாள் சிறப்பு இலக்கியப்போட்டியில் பரிசு பெற்றோர்




நிர்வாகப்பணிப்பாளர் கவியழகன் அவர்களிடமிருந்து ரதீஸ்குமாரும், பரமேஸ்வரனும் பரிசில்களைப் பெறுகின்றனர்.



பிரதம ஆசிரியர் ஜெயராஜ் அவர்களிடமிருந்து வீரபாகு ரஞ்சி பரிசினைப் பெறுகின்றார்.

ஈழநாதம் நிறுவனத்தால் நடத்தப்பட்ட 2002 மாவீரர்நாள் சிறப்பு இலக்கியப் போட்டியில் பங்கு பற்றிப்பரிசுபெற்ற போட்டியாளர்களிற்கு கரும் புலிகள் நாளன்று ஈழநாதம் பணிமனையில் வைத்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஈழநாதம் மக்கள் தினசரியின் வாரவெளியீடான வெள்ளிநாதத்தின் இணையாசிரியர் சிறி. இந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் போட்டியாளர்களிற்கான பரிசில்களை ஈழநாதம் பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளர் கவியழகன், ஈழநாதம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஜெயராஜ், வெள்ளிநாதப்பொறுப்பாசிரியர் ராதேயன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

இப்போட்டியில் கட்டுரைக்கான முதல் பரிசினை எட்வினும், இரண்டாம் பரிசினை திருமதி சுபோஜினி சிவபாலனும், மூன்றாம் பரிசினை வீரபாகு ரஞ்சியும்பெற்றனர். சிறுகதைக்கான முதல் பரிசினை யோ.கர்ணனும், இரண்டாம் பரிசினை கருணைரவியும், மூன்றாம் பரிசினை இரண்டு சிறுகதைகள் பெற்றுக்கொண்டன. சி. மாதுளாவும், ச. ராகவனும் பெற்றுக் கொண்டனர். கவிதைக்கான முதல்பரிசினை நா.கானகனும், இரண்டாம் பரிசினை மா. பரமேஸ்வரனும், மூன்றாம் பரிசினை ச. ரதீஸ்குமாரும் பெற்றுக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## அத்தியாயம் - 05

புரட்டாதி மாதம்.
மாரிக்கான முதல் மழைபெய்த போது சிவத்தைக் கூட்டிப்போக என்று வேலாயுதம் வந்திருந்தான். சிவத்துக்கும் கிளிநொச்சி போவதில் இப்போது சிறிது ஆர்வம் ஏற்பட்டிருந்தது.

சிவலையையும் வெள்ளையையும் தாங்கள் கவனமாகப் பார்த்துக்கொள்வதாக அன்னமும் சின்னையனும் உறுதியாய்ச் சொன்னார்கள். அன்னமும் சின்னையனும் அப்பு ஆச்சியுடன் இந்த வீட்டிலேயே தங்கிக் கொண்டார்கள். புத்தூர், ஆவரங்கால் தோட்டக்காரர்களுக்கு எருவும் குழையும் ஏற்றிக் கொண்டுபோய்க்கொடுக்கும் நேரங்கள் தவிர்ந்த பொழுதுகளில் அப்புவுடன் சின்னையனும் தோட்டத்தறைக்குப்போய்விடுவான். மாடுகளையும் கவனித்துக்கொள்வான். அதனால் சிவத்துக்கும் பெரிய ஆறுதலாய் இருந்தது.

கிடுகு ஏற்றிக்கொண்டு கிளிநொச்சிக்குப்புறப்பட்ட தாமோதரியின் வண்டிலில் கிடுகுக் கட்டுகளுக்கு மேல் வேலாயுதமும் சிவமும் ஏறிஅமர்ந்து கொண்டார்கள். ஆச்சி அழுகையை அடக்கிக் கொண்டு கவனம் மோனை என்று திருப்பித்திருப்பிச்சொல்லிக்கொண்டிருந்தாள். " தட்டித்தடியை கவனமாய் பிடிச்சுக் கொள்தம்பி" "தாமோதரி திரும்பிப்பார்த்துச் சொன்னான். " ஓம் அண்ணை நான் கவனமாய் இருக்கிறன். நீங்கள் வண்டிலை எடுங்கோ"

விடிகாலையில் பொழுது இன்னும் சரியாய் புலராத பொழுதில் அவர்கள் புறப்பட்டார்கள். ஆச்சி பனை ஓலையால் இழைத்துத்தந்த உமலுக்குள் அவனுடைய மாற்று உடுப்பாக இரண்டு வேட்டிகள் இருந்தன. பழுப்பேறிக்கிடந்த வெள்ளைத் துவாயை தலையைச்சுற்றிக்கட்டியிருந்தான். வேட்டியை மடித்துக்கட்டியிருந்தான். சட்டை போடாத மார்பை குளிர் காற்று தடவிச் சென்றது.

ஆச்சி குரக்கன் புட்டு அவித்து சீனி தேங்காய்ப்பூவுடன் கலந்து மூடி போட்ட சின்ன ஓலைப்பெட்டிக்குள் போட்டுத்தந்திருந்தாள். அதைவிட இன்னொரு மூடல்ப் பெட்டிக்குள் பனங்கட்டிக்குட்டான், புழுக் கொடியல், ஒடியல் மா, பனாட்டு எல்லாம் வைத்துத்தந்திருந்தாள்.

ஊரின் குறுணிக்கற்கள் இடறும் மண்தெருக்கடந்து இடைப்பட்ட ஊர்கள் கடந்து தார்சாலையில் ஏறிய மாடுகள் கிழக்கு நோக்கி நடைபோட்டன. தாமோதரி கிளிநொச்சிக்கு அடிக்கடி போய் வருபவன். இங்கிருந்து கிடுகுகளை ஏற்றிக்கொண்டு போய் கிளிநொச்சியில் கொடுத்து விட்டு அங்கிருந்து நெல், வைக்கோல்களை ஏற்றி வருவான். அந்த நீண்ட தூரப்பயணத்திற்கு மாடுகள் பழக்கப்பட்டவை போல இயல்பாக நடைபோட்டன. மழைபெய்து ஓய்ந்திருந்ததால் வெயில் அவ்வளவாக உறைக்கவில்லை.

பிரதான தெருவின் இருபக்கமும் தூரத்தூர சிறு குடிசைகள் பனை ஓலை வேலிகள், வழியில் ஒன்றிரண்டு கல்வீடுகள், இது உடையாரின் வீடு.... இது விதானையாரின் வீடு என்று வழியெல்லாம் தாமோதரி விபரம் செல்லிக் கொண்டு வந்தான். எதிரே வந்த இரண்டு மூன்று மாட்டு வண்டில்கள் அவர்களைக்கடந்து சென்றன.

" இது கொடிகாமம், இது ஆசைப் பிள்ளை ஏத்தம், இது பளை.... ஒவ்வொரு இடங்களையும் தாமோதரி சொல்லிக் கொண்டு வந்தான்.

யக்கச்சிச்சந்தியில் கொஞ்சநேரம் தங்கி சாப்பிட்டு ஆறிக்கொண்டார்கள். அந்தச் சந்தியில் இரண்டு மூன்று தேத்தண்ணிக் கடைகளும் இரண்டு பலசரக்குக் கடைகளும் இருந்தது. கிடுகுகளினால் வேயப்பட்ட சிறுசிறு கடைகள். அங்கு சனநடமாட்டமும் காணப்பட்டது.

அங்கிருந்து சிறிது உற்சாகமாகப்புறப் பட்டார்கள். "ஆனையிறவு கடந்து போயிட்டால் அங்கால காட்டுப்பகுதி தான். சனங்களும் அங்கால குறைவு"

சாவகச்சேரி தாண்டி எந்த இடமும் அறிந்திராத சிவத்திற்கு எல்லாமே புதிய காட்சிகளாகத் தென்பட்டது. பாதையின் இரு புறங்களும் பற்றைகளும் உயர்ந்த மரங்களுமாக காணப்பட்டது. மதியம் கடந்து விட்டபொழுதில் ஆனையிறவு கடந்து கொண்டிருந்தார்கள்.

வீதியின் இருபக்கமும் பரந்த வெளியாகக்காணப்பட்டது. மழைக்கால ஆரம்பம் என்பதால் சிறிதளவு தண்ணீர் எங்கும் பரந்து கிடந்தது. வேலாயுதம் சுற்றிலும் பார்த்துக்கொண்டே சொன்னான்.

"கோடை காலத்தில தண்ணி வத்திக் கிடக்கிற நேரத்தில இங்க கூழைக்கிடாக்கள் நூற்றுக்கணக்கில பறந்துதிரியும்."

அந்த வெளியின் அழகை வியப்புடன் கண் இமைக்காமல் சிவம் பார்த்தான்.

"ஆனையிறவிலதான் ஒவ்வொரு ஞாயிறும் சந்தை கூடுறது. உடுத்துறை தாழையடியிலிருந்து பொம்பிளையள் மீன், கருவாடு என்று நடந்து வந்து விற்பினம்.



கைக்குத்தரிசியும் சனங்கள் கொண்டு வருங்கள். நாங்கள் வண்டில் கட்டிவந்து தேவையான சாமானை வாங்கிப் போறனாங்கள். நெல்லும் இங்க கொண்டு வந்து தான் குத்தவேணும் அந்தாபார் அங்க தான் சந்தை கூடுறது. மற்ற நாளில சனம் அவ்வளவு இருக்காது."சற்றுத் தூரத்தில் நீளமான கொட்டில் வெறிச்சிட்டுத் தெரிந்தது. . ஒரு கிழவன் மட்டும் மரக்கப்புடன் குந்திக்கொண்டிருப்பது தெரிந்தது. சேறும் சகதியுமாய் நிலம் ஈரமாய்க் கிடந்தது.

அந்தஇடம் தாண்டி மேலே போன போது எந்த மனிதர்களையும் வெகு நேரத்திற்கு காணமுடியவில்லை. இருபக்கமும் அடர்ந்த காடாகவே இருந்தது. கொஞ்சம் பயமாகக்கூட இருந்தது.

" இனிப்பரந்தன், கிளிநொச்சி தான் "
" இங்க யானையள் வருமா ?"
தாமோதரி பெரிய குரலில் சிரித்தான்.

" இளந்தாரிப்பெடிகதைக்கிற கதையைப் பார். பகலில ஆனையள் வராது. இரவில சனம் பிரயாணம் செய்யிறேல"

வெகு நேரத்துக்கு அதே அடர்ந்த காடுதான் கூடவே வந்தது. யாழ்ப்பாணம் நோக்கி கரிக்கோச்சி போகும் இரைச்சல் வலதுபுறம் கேட்டது.

" இந்தா பரந்தன் வந்திட்டுது. "

தாமோதரி வேலாயுத்திடம் திரும்பினான்.

" மாணிக்கன்ர கடையில தேத்தண்ணி குடிச்சிற்றுப்போவம் தம்பி"

" இங்க எங்க கடைகிடக்கு" சிவம் சுற்றும் முற்றும் பார்த்தான்.

" கரிக்கோச்சி ஓடுறதால இதில ஸ்ரேசன் இருக்கு. அதில தான் மாணிக்கன் தேத் தண்ணிக்கடை வைச்சிருக்கிறான். மூண்டு சதம் தான் ஒரு பேணி தேத்தண்ணி தருவான்."

வண்டில் தெருவிலிருந்து வலது புறம் திரும்பி சிறிது தூரம் சென்று நின்றது. தண்டவாளக் கரையுடன் ஒரு சிறு மேடை. அதன் ஒரு பக்கத்தில் கிடுகுகளால் வேய்ந்த சிறு கடை. மனிதர்களே இல்லதா இந்த இடத்தில் மாணிக்கனைப்பார்த்ததும் உற்சாகமாய் இருந்தது. மூவரும் இறங்கிப் போய் காட்டுத்தடிகளினால் அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தார்கள். சிவம் தலையில் கட்டியிருந்த துவாயை எடுத்து உதறி முகம் துடைத்துக்கொண்டான்.

வண்டில் தெருவிலிருந்து வலது புறம் திரும்பி சிறிது தூரம் சென்று நின்றது. தண்டவாளக்கரையுடன் ஒரு சிறு மேடை. அதன் ஒரு பக்கத்தில் கிடுகு களால் வேய்ந்த சிறுகடை. மனிதர்களே இல்லதா இந்த இடத்தில் மாணிக்கனைப் பார்த்ததும் உற்சாகமாய் இருந்தது. மூவரும் இறங்கிப்போய் காட்டுத் தடிகளினால் அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தார்கள். சிவம் தலையில் கட்டியிருந்த துவாயை எடுத்து உதறி முகம் துடைத்துக்கொண்டான்.

மாணிக்கன் மூவருக்கும் பேணி நிறைய வெறும் தேனீர் போட்டுக்கொடுத்தான். சுடச்சுட இருந்த தேனீர் மாலை நேரக்குளிருக்கு தொண்டைக்குள் இதமாக இறங்கியது.

" இங்க ஒரு சனத்தையும் காணேலை. ஆர் இங்க வந்து தேத்தண்ணி குடிப்பினம்" சிவம் வியப்போடு கேட்டான்.

"கரிக்கோச்சியில ஏறுற இறங்கிற சனம் வந்து குடிப்பினம். மற்றம்படி உங்களை மாதிரி வண்டிலில வாற ஆட்களும் மேற்கால பூநகரி, குஞ்சுப்பரந்தன் போற ஆட்களும் வந்து குடிப்பினம். கிழக்கால கண்டாவளை, புளியம்பொக்கணை, முரசுமோட்டை போற ஆட்கள் பரந்தன் சந்தியில இருக்கிற இலகுப்பிள்ளையின்ர கடைக்குப் போவி னம். இரவில அங்கால பிரயாணம் செய்ய ஏலாது. இலகுப்பிள்ளை வீட்டுத் தாழ்வாரத்தில படுத்திட்டு விடியப்போகுங்கள். இரவில ஆணை, கரடியளுக்குப் பயம்."

" சரிஇனி என்ன கிட்டத்தானே. நாங்கள் போயிட்டு வாறம்."

மூவரும் மறுபடி வண்டிலில் ஏறிக் கொண்டார்கள். மாடுகள் மெதுவாய் நடக்கத் தொடங்கின.

வெய்யில் நன்றாய் தாழ்ந்து விட்டது. காற்று குளிராய் வீசியது மெலிதாய் மழை தூறத் தொடங்கியது.

"இந்த இடத்தை பரந்தன் எண்டு சொல்லுறது."

அதே உயர்ந்த மரங்களும் அடர்ந்த பற்றைகளும் தெருவின் இரு பக்கமும் காணப்பட சற்றுத்தூரத்தில் கிடுகுகளினால் வேயப்பட்ட இரண்டு மூன்று ,கொட்டில்கள் தெரிந்தன.

"அங்க தெரியிறதுதான் மயிலற்ர பல சரக்குக்கடை. அந்தசந்தியிலயிருந்து கிழக்குப்பக்கமாய் போற றோட்டுத்தொடக்கத்தில இலகுப்பிள்ளையின்ர தேத்தண்ணிக்கடை இருக்கு. பரந்தனிலதான் உப்பிடியாவது கடையள் இருக்கு. கிளிநொச்சியில பெரியகாக்கா, சின்னக்காக்கா எண்டு ரெண்டு பேர்தான் கடை வைச்சிருக்கினம்."

சிவம் எதிரே பார்த்தான்.

கடவுளே.... இந்தக் காட்டுக்குள்ள எப்பிடி சனங்களால இருக்க முடியுது..... மனதுக்குள் பயமும் குழப்பமும் ஒருசேர எழுந்தது.

பரந்தன் சந்தியிலிருந்து மேற்குப் புறமாகப்பிரிந்த பாதையில் மாடுகள் திரும்பி நடந்தன.

"இந்தப்பாதை நேர பூநகரிக்குப் போகுது. பூநகரி பழைய காலக்குடியிருப்பு. பரம்பரை பரம்பரையாய் சனம்குடியிருக்குதுகள். அதைவிட இடையில இங்கயிருந்து நாலுகட்ட தூரத்தில குஞ்சுப்பரந்தன் இருக்கு. இரண்டு தலை முறையாய் சனம் இருக்குதுகள். அங்க சிவலிங்கம் விதானை எண்டு எனக்குப் பழக்கமானவர்தான் இருக்கிறார்."

என்று சொல்லிக் கொண்டே வந்தான் வேலாயும்.

வண்டிலின் பக்கத்தடியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு சுற்றும் முற்றும் பிரமிப்போடு பார்த்துக்கொண்டே வந்தான் சிவம். மழையின் மெல்லிய தூறல் முகத்தில் பொட்டுப்பொட்டாய் விழுந்தது. எதிரே இரண்டு பேர் மண் வெட்டியுடன் வந்தார்கள். இடுப்பில் பழுப்பேறிய நாலு முழத் துண்டு. தூசி படிந்த உடம்பு. வண்டிலைப்பார்த்துவிட்டு தெருவோரம் ஒதுங்கி நின்றார்கள். அவர்களைக்கடந்து மேலே சென்ற வண்டில் இடது புறமண் தெருவில் திரும்பியது.

'இவடம்தான் எங்கட இடம். அஞ்சாம் வாய்க்கால் எண்டு சொல்லுறது."

இப்போது இரு புறங்களிலும் பரந்து கிடந்த நிலம் தெரிந்தது. சில இடங்கள் உழுதபடி காணப்பட்டது. சில இடங்கள் காட்டு மரங்களின் அடிக்கட்டைகள் பிடுங்கப்படாமலும் தூரத்துர சிறு பற்றைகளுமாகக்காணப்பட்டது.

வேலிகளுக்கு காட்டு மரக்குற்றிகளை நெருக்கமாக போட்டு முட்புதர்களையும் முட்கொப்புகளையும் நீளத்துக்கு குவியலாக அடுக்கி முள்அக்கில் போடப்பட்டிருந்தது. அதன் கரைகளில் பாம்புப் புற்றுகளும் அவைகளில் படர்ந்திருந்த தொட்டாச்சிணுங்கிகளும் தெரிந்தன. அந்தக் காணிகளில் தூரத்தூர சிறு குடிசைகள் காணப்பட்டன. மண்வீதிக்கு ஒருபுறம் தெருக் கரையுடன் நீளமான வாய்க்கால் அதில் சமீபத்தில்பெய்த மழையினால் சிறிதளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

வாய்க்கால்க்கரையில் நின்று அந்த தண்ணீரை அள்ளி முகம் கைகால் கழுவிக் கொண்டிருந்தவர் இவர்களை நிமிர்ந்து பார்த்துவிட்டு

"என்ன வேலாயுதம் விதைப்புக்கு தம்பியோட வந்திட்டாய்." என்றார்.

"ஓம் செல்லத்துரையண்ணை. எனக்கு உதவிதானே."

"சரி, சரி. நல்லது நடவுங்கோ."

வண்டில்சிறிது தூரம் சென்று நின்றது.

"இதுதான் எங்கடஇடம் இறங்கு." என்று கூறிவேலாயுதம் குதித்து இறங்கினான்.

சிவம் நிமிர்ந்து எதிரேபார்த்தான். எருமை மாடுகளில் ஏர்பூட்டி உழுதுகொண்டிருந்தார்கள்.

நிலம் இன்னமும் முற்றாக திருத்தப் படாத நிலையில் மரங்களின் அடிக்கட்டைகளுடன் காணப்பட அவற்றைத் தவிர்த்து எருமைமாடுகள் உழுது கொண்டிருந்தன.

சூரியன் மேற்கில் விழுந்து கொண்டிருந்த நேரம். அந்த சிவப்புஒளி அந்தப் பிரதேசம் எல்லாம் நிறைந்தது போல அவனுக்குத்தோன்றியது. மழைச்சாரலின் பொட்டுச் சிதறல்கள் முகத்திலும் தோள்களிலும் விழுந்தன.

"இறங்கு"

சிவம் உமலையும் கையில் எடுத்துக்கொண்டு வண்டிலிலிருந்து கவனமாய் கீழே குதித்தான். உள்ளங்கால்கள் நிலத்தில் பதிந்ததும் சில்லிட்டன.

அந்த ஈர மண்ணின் குளிர்மை அவன் நெஞ்சுக்குள் வந்து நிரம்பிக்கொண்டது.

(தொடரும்)




# கண்ணம்மா/தாயாகவாழ்தல்

எத்தனை தரம் அடித்தேன் என்று என்னால் சொல்ல முடியவில்லை. என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அடித்தேன். நன்கு முற்றித்தோல் நிறத்த எலுமிச்சம்பழம் போன்ற என்ர செல்லத்தின்ர கன்னங்களிரண்டிலும் என் கைவிரல் அடையாளங்கள் நெருப்புக்கொள்ளி போல் சிவந்து காணப்பட்டன. பிள்ளை பிறந்ததிலிருந்து.

ஒருநாள்பார்த்து பிள்ளையின்ர மேலில தொட்டிருக்கமாட்டன். இன்றைக்கு என்னவோ, கொலைகாறிபோல மாறி என்ர குமர்ப்பிள்ளையைப்போட்டு அடிச்சுப்போட்டன். விக்கிவிக்கி அழுதபடி கிழிச்சுப்போட்ட துண்டுகளை என்ரபிள்ளை ஒன்றொன்றாய்ப் பொறுக்கி எடுக்கிறதைப்பார்க்க எனக்கு அழுகை அழுகையாக வந்தது.

அப்படி என்னதான் நடந்தது எனக்கு இண்டைக்கு?

என்ர பிள்ளை ஒரு புத்தகத்தில சில பக்கங்களைத் தூள் தூளாகக் கிளிச்சுப்போட்டுது. அதுக்குத்தான் போட்டு அடி அடியெண்டு அடிச்சுப் போட்டன்.

பிள்ளையும் ரோசக்காரி அடிச்சுப்போட்டன் எண்ட கோபத்தில கிணத்துக்க விழுந்து ஏதன் செய்து போட்டாலுமெண்டு நினைக்கப்பயமாக இருக்கு.

இல்லை, அப்பிடியில்லை.அப்பிடிச் செய்யிற அளவுக்கு நான் பிள்ளையை வளர்க்கேலை.

எண்டாலும் பயமாக் கிடக்கு.

என்ன இது ஒரு நாளும் இல்லாத மாதிரி என்ர மனம் இண்டைக்குக் குழம்புது?

வெயிலுக்கால போய் வந்தகளை சரிஞ்சு படுக்க வேணும் போல இருக்கு எனக்கு.

ரோட்டால போற வாகனங்கள் அள்ளிக்கொட்டின புழுதி கண்ணெல்லாம் எரியுது. வெயில் வெக்கை வேறை, அடிக்கடி தும்மலும் வாறமாதிரி வந்து வராமல் மூக்கை அரிக்குது.

படுத்தால் நல்லது.

சீ.... வேண்டாம்...

படுத்து நான் கண்ணயரோக்க என்ர பிள்ளை ஏதேனும் செய்து போட்டா...?

இல்லை, என்ர பிள்ளை எனக்கு வேணும்....

"பிள்ளையாரே"....

'என்ன அம்மா... என்ன அம்மா செய்யுது... தலேக்க இடிக்கிதா...

தேசிக்காய் கரைச்சுத் தரட்டே அம்மா...

ஏன் அம்மா, அழுகிறீங்கள்...?

இல்லை அம்மா என்ர அம்மா எனக்கு வேணும்...

அழாதையுங்கோ அம்மா,

இனிமேல் என்ர அம்மாவுக்கு கோவம் வாறமாதிரி நான் ஒண்டுஞ் செய்யமாட்டன்... ஆழதையுங்கோ அம்மா....

எனக்குப் புதுச் சைக்கிள் வேண்டாம் அம்மா...

எனக்கு என்ர அம்மா தான் வேணும்...

அழாதையுங்கோ அம்மா... அம்மா... என்ர அம்மா....

என்னையுமறியாமல் "பிள்ளை யாரே" எண்டு [illegible] வாய திறந்து அழுதது [illegible] ஓடி வந்த மகள் என்னைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருக்கு....

பாழ்படுவார் திருந்தவே மாட்டாங்கள்

ஏன்தான் இவங்களுக்கு இந்த குறுக்கால போற புத்தியோ தெரியேல,

நிர்வாகம் செய்யிறம் நிர்வாகம் செய்யிறம் எண்டு சொல்லிக்கொண்டு குடும்பம் நடத்துறாங்கள். அதுவும் தங்கட குடும்பத்த விட்டுட்டு ஊரவையின்ர குடும்பம் நடத்தப்பாக்கிறாங்கள்.

> இந்த மாதம் கட்டாயம் மணிமேகலைக்குப் புதுச்சைக்கிள் வாங்க வேணும். "இந்த மாதம் எல்லாருக்கும் அரியஸ் குடுக்கிறதெண்டு அப்பா சொன்னவர்" என்று ஒருநாள் அதிபற்ற மகள் எங்களிடம் சொல்லி எங்களைவிட அதிகம் சந்தோசப்பட்டவா.
> ஆனா அந்தச் சந்தோசம் நிலைத்து நீடிக்கவில்லை.

வேலைக்கு வந்தால் வேலையைச் செய்யிறது. தன்னைப்போல வேலை செய்யிற மற்றவையளையும் வேலைசெய்ய விடவேணும் அதை விட்டுட்டு மற்றவையளைப்போட்டுச் சித்திரவதையெல்லே செய்யப்பாக்கிறாங்கள்.

**ஞா.மணிமேகலை**

இண்டைக்கு விடியக் காலமை எழும்பி வஸ்சுக்கு நிண்டு தூங்கி நாப்பது ரூபா குடுத்து வசுராண்டில போய் றங்கி ஒரு கட்டைதூரம் நடந்து ஒவ்விஸ்சுக்குப் போனால் அங்க அவையள் இல்லை.

இண்டைக்கு வரச் சொல்லி அவையள்தான் கடிதம் போட்டவை. எழுத்து மூலம் வரச்சொல்லிக்கூப்பிடேக்க நான் நினைச்சன் இப்ப ஏழெட்டு மாதமா நான் படாதபாடுபட்டு அலைஞ்சு திரியிற விசயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போயினம் எண்டு.

போனாப்பிறகுதான் தெரிஞ்சுது, அவங்களுக்குப் பிடிச்ச வருத்தம் மாறாதெண்டு சுத்தமா கழுவியெடுத்த நெருப்புக்கொள்ளி மாதிரி ஓராள் மூலைக்குள் கதிரை போட்டுக்கொண்டுஇருக்கிறவன். அவன்தானாம் சப்யெக்ட்கிளாக். நான் முதன் முதலாக போய்க் கேட்க...

"நீர் எத்தினை நாளைக்கு அலையப் போறீரெண்டு பாரும்," எண்டு சொன்னவன்.

அவன்தான் அப்பிடிச் சொன்னவனெண்டால், இண்டைக்கு அவனுக்குப்பதிலாக இருக்கிற அந்தப் பொம்பிளையுமெல்லே என்னில காட்டுப்பூனை மாதிரி பாய்ஞ்சு விழுகிறாள்.

அவளுக்கு அடிக்க வேணும் போலிருந்தது எனக்கு.

எத்தினையென்மம் எடுத்தாலும் மற்றவையல வாழவே விடமாட்டம் எண்டு சத்தியம் பண்ணிப்போட்டு வேலைக்கு வந்தவையள் நான் அடிச்சாப்போல தங்கட சத்தியத்தை மீறி மற்றவையள வாழ விடப் போயினமே?

செமினாரில வந்து ஒரு வைத்தியன் பிழை செய்தால் ஒரு உயிர்தான் பலியாகும். ஆனால் ஒரு ஆசிரியர் பிழை விட்டால் ஒரு தலைமுறையே பலியாகும் எண்டு தங்கட முதுகில நிண்டுதான் பூமியே சுத்துது எண்ட நினைப்பில பொழிஞ்சு தள்ளுவினம் நடைமுறையைப் பாத்தா ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லை எண்ட மாதிரியெல்லே இருக்கு.

ஆசிரியர்மார் பிழை செய்யக்கூடாது எண்டு சொல்லுறவையே அவையளப் பிழை செய்யத்தூண்டினம்.

ஆரிட்டச்சொல்லி, என்ன பயன்?

சும்மா அலைஞ்சு திரியுறதால ஒரு பயனும் கிடைக்காது எண்டு எனக்குத் தெரிஞ்சும் அவை எழுதின கடிதத்துக்கு மதிப்புக்கொடுத்துத்தான் ஒவ்விசுக்குப் போனனான்.

நான் அலைஞ்சுலைஞ்சு வந்ததை விட, என்ர பிள்ளை அவையள் எழுதிக்கொண்டிருக்கிற மாதிரி போட்டோ அச்சடித்து வாழ்த்துச் செய்தி வழங்கின ஒற்றயளைத்தூள்தூளாகக் கிளிச்சுப்போட்டதும், அதுக்காக நான் அடிச்சதும் தான் என்ர மனசை உறுத்துது.

அது நான் படிப்பிக்கிற பள்ளிக்கூடத்தின்ர வெள்ளி விழா மலர்.

அந்த மலர் வெளியீடும் வெள்ளிவிழாவும் சிறப்பாக அமையவேண்டுமென பலரும் தங்கட தங்கட படங்களோட வாழ்த்துச் செய்திகள் வழங்கியிருந்தவை.

அந்தப்படங்களையும் செய்திகளையுந்தான் மகள் கிளிச்சுப் போட்டு என்னட்ட அடிவாங்கிக்கொண்டிருக்கு...

சமாதானம் வாறதுக்கு முதல் சரியான கஸ்ரப்பட்டுத்தான் அந்தப்புத்தகம் அச்சடிச்சது.

அதில் முதற்பக்கத்தில பூமி உருண்டையை மேசையில வைச்சிட்டு அதிபர் எழுதிக்கொண்டிருக்கிற மாதிரி படம் வந்திருக்கிறதைப்பாத்திட்டு

"அதிபர் எழுதா விட்டால் பூமி சுத்தாதோ?...."

எண்டு O/L பெடியள் அதிபற்ற மகளைக்கேட்டவங்கள் எண்டு, மகள் வந்து அப்பவே சொன்னது.



இப்ப பிள்ளை இப்படிச் செய்யுமெண்டு நான் அப்ப நினைக்கேலை.

அவங்கள்தான் இண்டைக்கும் பிள்ளையைப் பாத்து ஏதோ சொல்லியிருக்க வேணும் அதுதான் பிள்ளை வந்து புத்தகத்தைக்கிளிச்சிருக்கு.

நானும் வந்த வேகத்தில என்ன ஏதெண்டு விசாரிக்காமல் பிள்ளையைப்போட்டு அடி, அடியெண்டு அடிச்சுப் போட்டான்.

அதிபரின் மகளும் எனது மகளும் ஒரே வகுப்பில தான் படிக்கினம் உயிர்ச்சிநேகிதம். இருவருக்குமிடையில ரகசியம் என்று ஒன்றும் கிடையாது ஓராளுக்கு எறும்பு கடிச்சால் மற்றாளுக்குப் பாம்பு கடிச்ச மாதிரி. என்ர பிள்ளை பள்ளிக்கூடம் விட்டு வெயிலுக்கால நடந்து வாறது பொறுக்காம அதிபற்ற மகள் தன்னுடைய சைக்கிலில் சிநேகிதியை ஏற்றிவந்து எங்கட வீட்டில விட்டுட்டுப்போறது

"மணிமேகலைக்கும் ஒரு புதுச்சைக்கிள் வாங்கிக் குடுங்கோ ரீச்சர்"

எண்டு அதிபரின் மகள் அடிக்கடி என்னட்டச்சொல்லுறவா.

"அரியஸ்வரட்டும்" எண்டு ஒரு வார்த்தை மட்டும் நான் பதிலாகச்சொல்லுவேன்.

"ரீச்சர் இனிமேல் ஒரு சாட்டும் சொல்லேலாது.

இந்த மாதம் கட்டாயம் மணிமேகலைக்குப் புதுச்சைக்கிள் வாங்கவேணும். இந்த மாதம் எல்லாருக்கும் அரியஸ் குடுக்கிறதெண்டு அப்பா சொன்னவர்" என்று ஒருநாள் அதிபற்ற மகள் எங்களிடம் சொல்லி எங்களைவிடஅதிகம் சந்தோசப் பட்டவா.

ஆனா அந்தச் சந்தோசம் நிலைத்து நீடிக்கவில்லை.

எல்லாருக்கும் அந்த மாதம் அரியஸ் வந்தது. எனக்கு வரவில்லை.

அதிபர் வேணுமெண்டு தான் பேசீற்றில எனது பெயரை எழுதவில்லை என்ற காரணத்தினால தான் எனக்கு அரியஸ்ும் வரேலை சிநேகிதிக்குச் சைக்கிளும் எடுக்கமுடியவில்லை.

என்பதை அறிஞ்ச அதிபற்ற மகள் அதிபருக்கு மகள் என்று சொல்லவே வெட்கமாக இருக்கு தெண்டு மகளிடம் சொல்லி கவலைப்பட்டதாம்.

அதிபர் இங்கிறி மென்ற் போம் குடுக்கேலை எண்ட விசயம் இப்ப ஏழெட்டு பத்து மாதமா என்னை உயர்அதிகாரிகள் வரை அலையவைத்துக் கொண்டிருக்கு.

இப்படி அலைஞ்ச வழிச் செலவுத்துண்டுக் காசுகளைச் சேர்த்தால் ரண்டு புதுச்சைக்கிள் வாங்கலாம்.

ம்... இப்ப குத்துவிளக்கில கணக்குப்பாத்த மாதிரிப்பாத்து என்ன பிரயோசனம்...?

என்ன அம்மா யோசிக்கிறீங்கள்? சத்தியமா எனக்குப் புதுச்சைக்கிள் வேண்டாம் அம்மா...

அம்மா நாங்கள் எங்கட ஊருக்குப் போவம் அம்மா.

ஊரில பச்சத்தண்ணியெண்டாலும் குடிச்சிட்டுக்கிடக்கலாம்.

அம்மா..., வாங்கோ, அம்மா பாஸ் எடுக்கப் போவம்...

மகள் ஓயாமல் சொல்லிக் கொண்டே போகுது....

மகளைத் தொடர்ந்து கதைக்க விடாமல் மார்போடு கட்டியணைத்து அழுதேன்.

இத்தகைய கையறு நிலையில் என்னால் வேறு என்னதான் செய்யமுடியும்?...

"ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்விகற்கும் உரிமை உண்டு" என பத்திரிகை விளம்பரம் ஒன்றில் பார்த்த வாசகம் நினைவுக்கு வந்தது.

சினத்தைத் தடுக்க மிகவுச்சிறந்த வழி தாமதம் - ஸெனெகா



# நூல்நோக்கு

இருபதாம் நூற்றாண்டின் இறுதி இரு தசாப்த காலங்களில் தமிழகத்திலும், ஈழத்திலும் ஒப்பியல், ஆய்வு நூல்கள் மிகக் குறைவாகவே எழுந்துள்ளன. பலர் தகமையுடையோராய் இருந்தும் ஆர்வம், அக்கறையின்மையே அவ்வாறு குறைவாக எழுதப்பட்டமைக்கு காரணமெனலாம். அவ்வாறான குறைவான ஆய்வு ஒப்பியல் இலக்கியங்களும் கவிதை, சிறுகதை இலக்கிய வடிவங்களை ஒட்டியவையாக இருந்தன. இக்காலப்பகுதியில் ' சொக்கன்' அவர்களால் எழுதப்பெற்ற ஆய்வு, ஒப்பியல் இலக்கியமான " இலக்கியக் கருவூலம்" என்ற நூல் ஒரு தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

வித்துவான் சொக்கலிங்கம் அவர்கள் முதுகலை மானிப் பட்டதாரியும் ஆவார். ( எம். ஏ) " சொக்கன்" என்றபுனை பெயரால் அழைக்கப்பட்டு மதிக்கப்படுபவராகவுமுள்ளார். தமிழ்க் கல்வியயாளர்களால் பேரறிஞராகவும், உயர் கல்வி பெறும் மாணவர்கள் மத்தியில் பேராசானாகவும் மதிக்கப்படுபவர். சொக்கன் அவர்களின் ' இலக்கணத் தெளிவு' என்ற இலக்கணப்புத்தகம் மாணவர்களுக்கான சிறந்த இலக்கண வழிகாட்டி நூலாகக்கொள்ளப்படுகின்றது. பட்டங்கள், பதவிகளைப் படிப்படியாக பெற்று ஆசிரியராகவும், அதிபராகவும் கொத்தணிஅதிபராகவும் பதவிவகித்தவர். உருவாக்கிய மாணவ பரம்பரை இன்றும் குருபக்தியுடன் நினைவு கூருகின்றது. தமிழறிவும் சைவசமய ஞானமும் நிரம்பப் பெற்ற அவர்கள், தாம் பெற்ற இன்பத்தை இவ்வையம் பெற வைத்தார்.

சொக்கன் அவர்களின் 'இலக்கியக்கருவூலம்' எனும் நூல் பட்டதாரிமாணவர்களுக்கும், தமிழ்ப் பாடசிறப்புப்பட்டதாரி மாணவா களுக்கும் தமிழிலக்கிய ஆய்வுப் பணியில் ஈடுபடுவோருக்கும் அடிப்படை ஆதாரநூலாகக் காணப்படுகின்றது. அவர் தமக்கு பாடத் திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் இரட்டைக்காப்பியங்களையும் கம்பராமாயணம், பாரதம் மற்றும் சுப்ரமணியபாரதியார் கவிதைகள், ஈழத்து உரை நடை இலக்கியவரலாறு பற்றி அறிபவர்களுக்கும் இந்நூல் அகன்ற ஆழமான விளக்கம் பெற பெரிதும் உதவும்.

இலக்கியக் கருவூலத்தில் எட்டுக்கட்டுரைகள்இடம் பெறுகின்றன. 1999 ம் ஆண்டில் இந் நூலின் முதற்பதிப்பு வெளிவந்தது. சில புதிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டும் திருத்தங்கள் செய்யப்பட்டும் இரண்டாவது பதிப்பு 2001 ல் வெளிவந்தது. இக் கட்டுரைகள் பல்வேறு காலகட்டங்களில் ஆசிரியரால் எழுதி வெளியிடப்பட்டவை. பத்திரிகைகளிலும் மற்றும் மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்த இலக்கியமாகவே இந்நூல் அமைகின்றது. முதற்பதிப்பிலும் திருத்திய பதிப்பிலும் யாழ்.பல் கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி க.சிவலிங்கராசா அவர்கள் அணிந்துரை எழுதியுள்ளார்.

வித்துவான் 'சொக்கன்'அவர்கள் முதுகலை




நூலின் பெயர் - இலக்கியக்கருவூலம்
நூலாசிரியர் - வித்துவான் க. சொக்கலிங்கம் எம்.ஏ ' சொக்கன்'
வெளியீடு - திருவள்ளுவர் அச்சகம் நல்லூர், யாழ்ப்பாணம்.
இரண்டாவது பதிப்பு - 2001ம் ஆண்டு.

மானிப்பட்டம் பெற்றதன் மூலம் தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சியும் திறமையும் பெற்றுள்ளார் என்பது அவரது இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளால் அறியமுடிகின்றது. இந்நூல் ஆசிரியர் பழந்தமிழ் இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்கள் சிலவற்றிலும் ஆய்வுகள் செய்து இக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சிலப்பதிகாரம், மணிமேகலை,கம்பராமாயணம் பாரதம், ஆகிய நூல்களிலும், சுப்ரமணியப்பாரதியாரின் குயில்ப்பாட்டுப் பகுதியிலும், ஈழத்து உரைநடை வரலாற்றில் விபுலானந்தஅடிகள், பண்டிதமணி கணவதிப்பிள்ளை ஆகியோர் ஆற்றிய பங்களிப்புத் தொடர்பாகவும் ஆசிரியர் கைலாசபதி அவர்களின் தமிழ் வீரயுகக் கவிதை என்பவை தொடர்பாகவும் ஒப்பியல், ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார்.

தமிழிலக்கிய வரலாற்றில் தமிழகத்தில் பேராசிரியர் வையாபுரி அவர்களும் ஈழத்தில் பேராசிரியர் கைலாசபதிஅவர்களும் இலக்கியத்திறனாய்வுத்துறையில் தமக்கென தனியான இடத்தை பெறுகின்றமைக்கு அவர்தம் ஆக்கங்கள் சான்று பகரும். அந்த வரிசையில் ' சொக்கன்' அவர்களும் இடம்பெறுமளவிற்கு 'இலக்கியக் கருவூலம் ' வழிசமைத்துக்கொடுக்கின்றது எனலாம். இலக்கியங்களைப்படிப்பவர்கள் ஆய்வு நோக்கில் அல்லது ஒப்பியல் நோக்கில் கற்றுணர்வது மிகக்குறைவு. அவ்வாறானவர்க்கு அந்நோக்கில் வளரவும், திறனாய்வுத்துறையில் ஈடுபடவும் வழிகாட்டி வைத்துள்ளார்.

'சொக்கன்' அவர்கள் இந்நூலில் கையாண்ட உரைநடைப் போக்கு தனித்துவமானது. ஆற்றொழுக்காக கருத்துக்களை எடுத்துக்கூறும்திறன், தெளிவாக கருத்துக்களை முன்வைக்கும்திறன் என்பன பாராட்டுக்குரியவை. இயன்றவரை பிறமொழிச்சொற்களைத்தவிர்த்து தூயதமிழ் நடையில் எழுதியமை எழுத்தாளர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகிறது.

நூலாசிரியர் அவர்கள் தமது முன்னுரையில் இடம் பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றும் எழுதுவாதற்கான நோக்கம் பற்றிய விபரத்தை குறித்துக் காட்டுகின்றார். 'இளங்கோவும் கம்பனும்' என்ற கட்டுரை ஒப்பு நோக்குக்கட்டுரையாகவும், சிலப்பதிகாரத்தின் தலைமைப்பாத திரங்களை அறிமுகம் செய்வதாக ' கற்பரசியர்இருவர்' என்ற கட்டுரையும், குன்றன்ன கொள்கையான் என்ற கட்டுரை கம்பராமாயணப்பாத்திரமான கும்பகர்ணனை அறிமுகம் செய்வதாகவும் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இவை சிலப்பதிகாரத்தையும் கம்பராமாயணத்தையும் ஐயந்திரிபுறக் கற்றுணர்ந்து ஆய்வு மேற்கொள்ளவும் உதவு வன. 'இளவல்கள் மூவர்' என்ற நான்காவது கட்டுரையில் வில்லிபுத்தூராரது பாரதஇதிகாசத்தில் வரும் இளவரசர்களான கர்ணன், அபிமன்யு, சகாதேவன் ஆகிய மூவரதும் அஞ்சாமை, அறிவாற்றல்கள் வீரம், தியாகம் என்ற பண்புணர்வுகள் எடுத்துக் கூறப்படுகின்றன. இப்பண்புகளை எமது இளந்தலை முறையினர் பின்பற்ற வேண்டுமென்பதை மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றார். 'யாழ்நூல்' தந்த விபுலானந்த அடிகளாரும், 'இலக்கியவழி' ஆசிரியர் பண்டிதமணி கணவதிப்பிள்ளை அவர்களும், இன்றைய இலக்கியகர்த்தாக்களுக்கு பல்வேறு துறைகளிலும் வழிகாட்டுகின்ற ஈழத்தறிஞர்கள், அவ்விருவரும் ஈழத்தமிழ் உரை வளர்ச்சிக்கு ஆற்றியபங்களிப்புப் பற்றியதாக அடுத்த இரு கட்டுரைகளும் அமைந்துள்ளன. இறுதிக் கட்டுரை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் ஆங்கிலத் தில் எழுதிய ஆய்வுநூலான ' தமிழ் வீரயுகக் கவிதை' என்ற நூலை ஆங்கில அறிவில்லாத தமிழ் அறிஞர்களும் கற்றுணரவேண்டுமென்ற நோக்கோடு ' பேராசிரியர் கைலாசபதியின் நோக்கில் தமிழ் வீரயுகக் கவிதை' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது.

கற்றவர்க்கும், மற்றவர்க்கும், தமிழ் ஆர்வலர்க்கும், சிறப்பாக மாணவர்களுக்கும் அருமருந்தன்ன ஆய்வுநூல் இலக்கியக் கருவூலம். வித்துவான் ' சொக்கன்' அவர்கள் நீடூழிகாலம் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்ற வாழ்த்துவோம். அவர்தம் மாணவர் பரம்பரையினர் காட்டிய வழியில் சென்று தமிழ்த்தொண்டாற்றும் கடப்பாடுடையவர்கள். 'இலக்கியக் கருவூலம்' அனைத்துத்தமிழ் நெஞ்சங்களுக்கும் அறிவுக்கான கருவூலமாக அமையட்டும்.

**க. சரவணபவன்**

# மனம் குளிரும்...



விதையுடைத்து முகம்
சிரிக்கும்
முல்லைக் கொடிபடரும்
என்தேசத்து நினைவில்
கரைந்து பேரவேன்.
வானம் உடைத்து
மண்ணில் இறங்கும்
பெருமழைபோல் - ஒருநாள்
என்மனம் குளிரும்.
தேசம் விடிந்ததென்று
புலரும் ஒரு பொழுதில்.

**வேழினி**

# அவள் வருவாளென...

**கவிதையில் ஒரு கதை**



ஊரின் மடியிடை
ஊடறுத்துச் செல்கின்ற
குன்றும் குழியுமான வீதிகளில்
உலாவுகையில் தன்னவளின்
பாதங்கள் படிந்துள்ளதாவென
விழிகளால் தேடுவான்.

பள்ளியின்
பாத்திரப்படைப்புகளாய்
வகுப்பறைதனை மொய்க்கின்ற
வெள்ளை வண்டுகளில்
புன் சிரிப்பு சுமந்த அதரங்களிலும்
தன்னவளைத்தேடுவான்.

கடல்மகள் காலடியில்
சென்றுலாவிவரும்
வேளையெல்லாம்
அலை தழுவி வரும்
காற்றலைகளிடம்
தன்னையழைத்திடும் அவள் குரல்
வருகின்றதாவென
மனதால் ஏங்குவான்
அக்கரை சென்று பக்குவமாய்
உயிர் தக்க வைத்த
சந்தோசத்தில்
மீண்டும் ஊர் புகும் நோக்கில்
தெப்பம் மீதேறி கடல்மடியே
கரை வருவாளா தனை
நோக்கியென
நீண்ட வெளி
விழிகளால் ஊடறுப்பான்.

இடைக்கிடை விண் நோக்கியும்
அவன் தேடல் இருக்கும் பின்னர்
நிலம் நோக்கி தலை சாயும்
ஒரு வேளை அவள்
அங்கிருப்பாளோ?

முந்தானை சுகம் தேடி அலைந்த
பேய்கள்
தன்னவளையும்
சீண்டியிருப்பார்களோ
அன்றேல் மானம் பெரிதென
எண்ணியே
மான்பு நிறை உயிரை
மாய்த்திருப்பாளோ
ஐயோ! வேண்டாம்! அப்படி
இருக்கக் கூடாது
மறந்தும் கூட தன்வழி விண்ணை
மேய்ந்து
கற்பனைகளை வளர்த்து
விடக்கூடாதென்பதால்
அன்றிலிருந்து இவன் பார்வை
நிலைக்குத்தியே இருக்கும்

மேற்குக் கரையின் காற்றைச்
சுவாசித்து
உறவுவாழ உடலைவருத்தி
பொருள் தேடி வந்த வேளை
அவன் சொத்தென
இங்கிருந்தவள் மண்ணிலில்லை
பாவம் இந்த மாந்தன்

செம்மணியின் ஓரம் வீசும்
காற்றும்
இவனைக் கண்டு
அனுதாபப்பட்டது.
சொல்லி விடலாமா
சிந்தித்து பின்னர் கார் முகிலோடு
கலந்தது.
கண்ணீராய் நீரை மட்டும்
சிந்தியது.

உப்புமணி கரைசலில்
உக்கிய அவள் உடலின்
எச்சங்கள் கலந்திட்ட
மண்ணதைத் தடவியெழும்.
காற்றுச் சொன்னது
பாவம் இந்த மனிதன் என்று.



**அ.பிலோமினா**




## சிறுவர் கதை

# மதியுகத் தீர்ப்பு

மதனும், சதீஸனும் நண்பர்கள் பக்கத்து வீட்டின ருடன் ஒரு நாள் மதன் ஒரு கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் தன் நண்பன் சதீஸனிடம் சென்று எப்போதும் சதீஸன் தன் விரலில் போட்டிருக்கும் மோதி ரத்தை கேட்டான். " திருமணம் முடிந்து வந்ததும் தந்துவிடு கிறேன் " என்று

சரி! நண்பன் கேட்கி றானே என்பதால் உடனே கழட் டிக்கொடுத்தான் சதீஸன். திரு மணம் முடிந்து இரண்டு வாரங் கள் ஆகிவிட்டது. மதன் மோதிர த்தை திருப்பிக் கொடுக்கவே இல்லை. அந்த மோதிரம் மதன் கைக்கு அழகாகா இருந்ததால் அதைத்திருப்பிக்கொடுக்க மனமின்றித்தானே வைத்துக் கொண்டான். சதீஸன் நண்பனி டம் சென்று மோதிரத்தைக் கேட்டான். " மோதிரமா? என்ன விளையாடிறியா நான் என்ன வோ மோதிரம் இல்லாதவன் மாதிரியும் உன்னிடம் கடன் கேட்டு வாங்கின மாதிரியும் பேசுகிறாயே. இதோ பார் இது என் மோதிரம், என்கிட்ட மோதிரம் இருக்கும் போது நான் ஏன் உன்னிடம் வந்து கடன் வாங்கணும் " என்றான். அதிர்ந்து போனான் சதீஸ்ன். " டேய்! அநியாயமா பேசாதே என்னோட மோதிரத்தை விரலில் போட்டுக்கொண்டு ஏமாத்துகிறாயா?" என்றான் சதீஸன். "யார்கிட்டவேண்டுமானா லும் போய்ச்சொல்லு. நான் என்ன ஒன்றும் இல்லாதவனா உன்கிட்ட கடன் வாங்க?" என்று பேசித்திட்டி அனுப்பினான் மதன். கொதித்துப் போன சதீஸன் தான் ஏமாற்றப்பட்ட விடயத்தை ஊர்த்தலைவரிடம் சென்று தெரிவித்தான்.

ஆள் அனுப்பி மதனை வரச்சொன்னார் ஊர்த்தலைவர். "ஐயா! இது என் மோதிரந்தான். இந்த மோதிரத்தின் மீது இவனுக்கு ரெம்ப நாளா கவே ஒருகண். அதுதான் இப்படி பொய் சொல் கிறான்" என்றான் மதன். " சரி! நீங்கள் இருவரும் சொல்வதைக் கேட்டால் யார் குற்றவாளி என்ற உண்மையைக்கண்டு பிடிக்க முடியவில்லை. இதற்குச் சாட்சியும் கிடையாது. எனவே இர ண்டுநாள் கழித்து நீங்கள் இருவரும் வாரு ங்கள் பொற்கொல்லரை வைத்து மேதிரத்தை மதிப்பிட்டு அந்தத் தொகைக்கு மோதிரத்தை விற்று இருவருக்கும் பாதி பாதி பணத் தைக் கொடுக்கின்றேன்." என்றார் ஊர்த்தலைவர். மதன் மனதிற்குள் ஏற்பட்ட மகிழ்ச்சியை மறைக்க முடியாமல் மெல்லச் சிரித்தபடியே சென்றான். சதீஸனோ கஸ்ரப்பட்டு வாங்கின மோதிரமாச்சே" என்று புலம்பியபடியே சென்றான். அப்போதே யார் குற்றவாளி என்பதைக் கணக்கிட்டுவிட்டார் ஊர்த்தலைவர். இரண்டு நாட்களுக்குப் பிறகு இருவரும் ஊர்த்தலைவரிடம் வந்தார்கள். பொற்கொல்லர் சதீஸனின் மோதிரத்தை தேய்தேய் என்று தேய்த்தார். சதீஸன் ஐயோ! உரை க்கல்லில் போட்டு இப்படித்தேய்க் கிறீர்களே...." என்று பதறினான். மதனோ ஒன்றும் பேசாமல் இருந்தான். பிறகு மோதிரத்தின் மதிப்பை விட மிகவும் குறைவான மதிப்பைச்சொன்னார் பொற்கொல் லர். " ஐயா! இது அநியாயம் இந்த மோதிரத்தை நான் வாங்கிய விலையில் கால் பங்கு விலை கூட இந்தப் பொற்கொல்லர் சொல்ல வில்லை. இவருக்கு எடைபோடத் தெரியவில்லை." என்று கூச்சலிட் டான் சதீஸன். மதன் எதுவும் பேசா மல் நின்றிருந்தான். ஊர்த்தலைவர் மதனைப்பார்த்து " என்ன நீ வாயே திறக்கமால் இருக்கிறாய். இது உண்மையிலேயே உன்னுடைய மோதிரமாக இருந்தால் நீ பதறி இருப்பாய் வேண்டுமென்றே தான் நான் இதன் மதிப்பை குறைத்து மதிப்பிடச்சொன்னேன். உன் நண்பன் சதீஸனை ஏமாற்றிய குற்றத்திற்காக உனக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை. சதீஸன் நீ உன் மோதிரத் தைப் பெற்றுக்கொள்." என்றார். நண்பனை ஏமாற்றிய தனக்கு இந்தத் தண்டனை தேவை தான் என்று நினைத்தான் மதன்.

அ. ராஜ்குமார்.

## மாணவர் நாம்

பள்ளிப்பருவத்தில் சிறகடித்துத் திரியும்
சிட்டுக்கள் நாம்
இப்பருவம் இளமையிலும் இனிமை
நாளை எம் தேசத்தை ஆளும்
சின்னப்பூக்கள் நாம்
மாணாக்கர் என்ற பட்டம் தாங்கி
ஈழமண்ணில் துள்ளித்திரியும் புள்ளி
மான்கள் நாங்கள்
இத்தேசத்தைக் கட்டி எழுப்பும்
தூண்கள் ' இளமையில் கல்வி சிலை
மேல்எழுத்து ' என்றார் வள்ளுவர்
இப்பருவத்தில் கற்பதைக்கசடறக்
கற்று சாதனைகள் பல படைத்திடும்
மாணவர் நாம்.

**யோ. பிரகாசினி**

### இணைத்துப்பாருங்கள்



### தெரிந்து கொள்ளுங்கள்

பிரிக்கும் நீரிணைக்கும் பிரிவுபடும் நிலங்களும்
பாக்கு நீரிணை- இந்தியா- இலங்கை
பனாமா நீரிணை- வட அமெரிக்கா- தென் அமெரிக்கா
பிரிஸ் நீரிணை:- ஆசியா-வட அமெரிக்கா
டோவர் நீரிணை:- பிரான்ஸ்- பிரித்தானியா

ச.தனலட்சுமி

### நூலகம்

உலகிலேயே ஒவ்வொரு தெருக்களிலும் நூலகம் இருக்கும் நாடு ரஷ்யாதான்.

### நீளமான நதி

உலகிலேயே மிக நீளமான நதியான நைல்நதியினால், சுமார் 55 நாடுகள் பயன் பெறு கின்றன.

### திருக்குறள்

திருக்குறளில் 1330 குறட் பாக்கள் உண்டு. இது பலருக் குத் தெரியும். ஆனால் இதில் 14,000 சொற்களும் 42,194 எழுத்துக்களும் உண்டு.

பா.தனுசன்
வவுனியா.

## மின்கடத்திகள் என்பவை யாவை?

ஒரு உயர்ந்த இடத்திலிருந்து, கீழே தாழ்மையான இடத்திற்கு நீர் செல்வதைப்போல மின்சார ஓட்டமும் ஒருஉயர் மின்னழுத்தம் உள்ள இடத்திலிருந்து, குறைந்த மின்னழுத்தம் உள்ள இடத்திற்குப்பாய்கிறது. எனவே ஒரு மின்னோட்டம் பாய்வதற்கு மின்அழுத்த வேறுபாடு இன்றியமையாதது. இந்த மின்னோட்டத்திற்கு ஒரு மின்கடத்தி தேவைப்படுகிறது. சில மின்கடத்திகள், மிகுதியான தடையை மின்னோட்டத்திற்குக் கொடுக்கின்றன. சில மின்கடத்திகள் குறைந்த தடையை மின்னோட்டத்திற்குக்கொடுக்கின்றன. குறைந்த தடையைக் கொடுத்து வேகமாக மின்னோட்டம் பாய்வதற்கு உதவும் மின்கடத்திகளுக்கு சிறந்த மின் கடத்திகள் என்பது பெயர்.

### ஓவியத்துக்குள் ஓவியம் கண்டுபிடியுங்கள்





## வாரம் ஒரு குறள்

எமது மூதாதையர்கள் செய்தது போலவே நாமும் செய்ய விரும்புகின்றோம். ஆனால் அப்படியான செயல்கள் செய்யப்பட வேண்டுமா? இல்லையா? என்பதைப்பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. அப்படியில்லாது நாம் எதைச்செய்ய முன்வந்தாலும் அது செய்யப்படக்கூடியதா? இல்லையா என்பதை ஆராய்ந்து செய்ய வேண்டியவற்றையே செய்யமுனையவேண்டும். வள்ளுவரின் குறள் மூலமான கருத்தை நோக்குவோமாயின்,

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்ததை ஒழித்து விடின"**

என்பதன் கருத்துக்கமைய பழித்ததை விடுத்து தேவைகளைப் பயன் படுத்துவோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 29




### இடமிருந்து வலம்

01. அன்பு.
05. அன்னை.
07. முருகன்.
13. உண்மை அல்லாத செய்தி குழம்பி உள்ளது.
23. வீட்டு மிருகம்.
32. நெருப்பு.

### மேலிருந்து கீழ்

01. இசையுடன் சமயக் கதைகள் சொல்பவர்.
02. மதி இறுதி எழுத்தை இழந் துள்ளது..
03. உபாயம் குழம்பியுள்ளது.
06. குழந்தையை தூங்கவைக் கும் பாடல்
16. பாண்டவர்களில் ஒருவர்
23 வருடம்

### குறுக்கெழுத்துப்போட்டி இல.27 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அகந்தை.
08. வலம்புரி.
15. ஆலயம்.
22. புயம்.
31. உதிரம்

**மேலிருந்து கீழ்**

01. அடைக்கலம்.
02. கள்வன்.
06. மாரி.
09. ஆழம்.
22. உப்பு.
24. கரம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.27 இன் பரிசுக்குரியவர்

சி. சயந்தன்.
அரசடி வீதி
வட்டுக் கோட்டை

### குறுக்கெழுத்துப்போட்டி இல.27இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. மா. சுதன், பரித்தித்துறை.
02. மா. சாந்தா, தரம்:-9, மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்.
03. வ. துசித்தா, குருமன்காடு, வவுனியா.
04. சி. சௌமியா, ஐயா தோட்டம், அளம்பில்.

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.29
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.




பா. ரதிகலா
தரம்:- 09
கிளி/திருவையாறு
மகாவித்தியாலம்

| | |
|---|---|
| கல்குலேட்டர் | பாஸ்க்கன் |
| இயந்திரத்துப்பாக்கி | காடலிங் |
| டோர்ச்லைட் | தோமஸ் அல்வா எடிசன் |
| கமரா | பிரிஸ்கிரினே |
| கைக்கடிகாரம் | கிறிஸ்டியன் |
| பென்சிலின் | அலெக்சாண்டர் பிளேமிங் |
| மடக்கை அட்டவணை | நேபியர் |
| ஆவர்த்தன அட்டவணை | மெண்டலீவ் |
| வெப்பமானி | கலிலியோ கலிலி |
| பற்றரி | வோல்ட்டா |
| ஆகாயவிமானம் | ஆர்வில்றைட் ஓர்வில்றைட் (சகோதரர்) |
| வானொலிப்பெட்டி | மார்க்கோணி |
| தொலைக்காட்சி | கலிலியோ கலிலி |

# வயது ஏற...ஏற...

**வயது** முதிர்வது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்பது பற்றி ஒரு பரிசோதனைக்கு நீங்கள் தயாராகுங்கள். ஏனெனில் வயது முதிர்வது எல்லோரும் சந்திக்கவேண்டிய ஒரு சுகமான சுமை இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது பின்வரும் கேள்விகளுக்கு விடையளித்து உங்களுக்குரிய புள்ளிகளை கணக்கிடுங்கள். இப்போதுநீங்கள் தயாரா?

01. வயசாகிப்போவது.....?
அ) தவிர்க்க முடியாதது
ஆ) எந்த விதத்திலேனும் தவிர்க்கப்பட வேண்டும்.
இ) அது மற்றவர்கள் கவலைப்படவேண்டியது.

02. முதிர் வயதுகள் இதனைப் பெற்றுத்தரும்.
அ. ஞானம்
ஆ. கவலைகள்
இ. சுருக்கங்கள்

03. அடுத்த வீட்டில் இருக்கும் பிள்ளைகள் சந்தோசமாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சத்தம் போடுகிறார்கள். உங்களுக்கு ஏற்படும் உணர்வு.
அ) மற்றவர்கள் பற்றிஅவர்கள் கவலைப்படாதது குறித்து எரிச்சல்.
ஆ) அவர்கள் இந்த விதத்தில் மகிழ்ச்சியடைவது குறித்து மகிழ்ச்சி.
இ) அவர்களோடு வயது போய் விட்டது குறித்து வருத்தம்.

04. உங்கள் உறவுக்குழந்தைகளின் பிறந்த நாளுக்கு என்ன பரிசில் வாங்குவீர்கள்.
அ) ஒரு பயனுள்ள கலைக் களஞ்சியம்.
ஆ) நீங்கள் முதலில் கேட்கக் கூடியதாக ஒரு இசை இறுவட்டு.
இ) அவர்கள் தங்களுக்கு விரும்பியதை தெரிவு செய்யக்கூடியதாக பொத்தக வவுச்சர் ஒன்று.

05. உங்களுடைய பிள்ளைகள் வளர்ந்து வீட்டை விட்டுச்செல்லும் போது உங்களுக்கு ஏற்படும் உணர்வு.
அ) இறுதியாக உங்களுக்கு அமைதியும் ஓய்வும் கிடைக்கும் என்பதில் ஆறுதல்.
ஆ) அவர்கள் குறித்தும், இனி உங்களுக்கென அதிகநேரம் இருக்கும் என்பது குறித்தும் கிளர்ச்சி.
இ) அவர்கள் மீது ஒரு கண்ணை வைத்துக்கொள்ளமுடியாது என்பதால் கவலை.

06. உங்களால் இயலும் எனில், இளமையாகத் தோற்றம் அளிக்கச் செய்யக்கூடிய அறுவைச்சிகிச்சையை செய்துகொள்வீர்களா?
அ)ஆமாம் இந்தச் சுருக்கங்களை இல்லாமல் செய்ய எந்தச்செலவிலாவது நிச்சயமாகசெய்து கொள்வேன்.
ஆ) இல்லை.சுருக்கங்கள் என்பது முதிர்வயதோடு இணைந்திருப்பது.

| | அ | ஆ | இ |
|---|---|---|---|
| 01. | 10 | 05 | 0 |
| 02. | 10 | 0 | 05 |
| 03. | 0 | 10 | 05 |
| 04. | 0 | 05 | 10 |
| 05. | 0 | 10 | 05 |
| 06. | 0 | 10 | 05 |
| 07. | 10 | 05 | 0 |
| 08. | 05 | 0 | 10 |
| 09. | 0 | 05 | 10 |
| 10. | 05 | 10 | 0 |

இ) அநேகமாக

07. ஓய்வு பெறுவதை எதிர் பார்த்திருக்கிறீர்களா?
அ) ஒரு வகையில்.... ஆமாம் அப்போது நான் விரும்புவதைச் செய்ய அதிகநேரம் கிடைக்கும்.
ஆ) இல்லை, அலுவலகத்தில் இனி வேண்டப்படாதவர் என்பதே கசப்பான ஒருவிடயம்.
இ) இல்லை. முடிந்தவரைக்கும் வேலைசெய்ய உத்தேசித்திருக்கிறேன்.

08. வயது முதிர்ந்தவர்களை எப்படி நினைக்கிறீர்கள்?
அ) சமூகத்தின் பயனுள்ள உறுப்பினர்கள்.
ஆ) சமூகத்துக்குச்சுமையானவர்கள்.
இ) ஆரோக்கியமான ஒரு சமூகத்துக்கு அவசியமானவர்கள்.

09. மூட்டுவீக்கம் ஏற்படுவது என்பது வயது முதிர்வதின் ஒரு பகுதி தான் என்று உங்கள் மருத்துவர் சொல்கிறார். நீங்கள் என்னசெய்வீர்கள்?
அ) அவர்சொல்வதை ஒப்புக்கொண்டு உடன்பயிற்சிகள் அனைத்தையும் கைவிடுவேன்.
ஆ) வாரத்தில் ஒருதரம் வேக நடைநடப்பேன்.
இ) கிடைக்கக்கூடியதாக இருக்கும் சிகிச்சைகள். குணமாக்கல் முறைகள் பற்றித் தேடலோடு இருப்பதோடு என்னால் முடிந்தவரைக்கும் உடற் பயிற்சிகளை தொடர்ந்துசெய்வேன்.

10. பின்வரும் கூற்றுக்களில் எதனோடு உங்களுக்கு அதிக ஒப்புதல் உண்டு?
அ) நீங்கள் உணரும் அளவுக்கு உங்களுக்கு வயதாகி விட்டது.
ஆ) நீங்கள் கற்றுக்கொள்வதை நிறுத்திய நாளில் இருந்து நீங்கள் வயதுமுதிரத் தொடங்கினீர்கள்.
இ) வயது முதிரும் செயல் வகையை தடுக்க உங்களால் முடியாது.



இப்போது உங்களுக்கான புள்ளிகளைக் அட்டவணை - 01இல் கணக்கிடுங்கள்.

75-100:- நீங்கள் சிறப்பான மன நிலையில் இருக்கிறீர்கள். வயது முதிர்வதென்பது ஞானத்தையும் புதிய வாய்ப்புகளையும் பெற்றுத் தருகிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். எதிர்வரும் வருடங்களில் உற்சாகப்பயன்பாட்டைப்பெற உத்தேசித்திருக்கிறீர்கள். உங்களைப்போன்ற ஒருவர் அருகிலிருக்கும் நற்பேறை உங்கள் குடும் பத்தினரும் நண்பர்களும் கொண்டிருக்கிறார்கள்.

35-70:- சராசரியான மன நிலை வாழ்க்கையின் பிரகாசமான பகுதிகளை எதிர்பார்க்க முயற்சிகள் செய்வீர்களெனினும், வயது முதிர்வது உங்களுக்கு விருப்பமான ஒன்றல்ல. எங்களுக்கு வயது ஏற ஏற, வாழ்க்கைப்போக்கும் மாறும் தான். ஆனால் அதனை ஒரு சவாலாக எதிர்கொள்ளுங்கள். பெரும் சரிவொன்றில் பாதாளத்தை நோக்கி வழுக்கிச்செல்வதாகக்கொள்ள வேண்டாம். கேள்விகளை இன்னொருமுறை வாசித்துப்பாருங்கள். நீங்கள் அதிக புள்ளிகளைப் பெறும் பதில்களைத் தேர்வுசெய்தால் எவ்வாறு உணர்வாகிறது என்று பாருங்கள்.

0-30:- எத்தனை வய்து உங்களுக்கு? முதிர்வதை எண்ணி நீங்கள் திகிலடைகிறீர்கள். நீங்கள் அனுபவிக்கும் எல்லாவற்றினதும் முடிவுக்காலம் அது என்று நினைக்கிறீர்கள். ஒரு கடதாசித்துண்டை எடுங்கள். உங்கள் வாழ்வில், கிடைத்தவற்றுக்காக நீங்கள் நன்றியறிதலுடன் இருக்கும் விடயங்களை பட்டியலிடுங்கள். ஒவ்வொரு நாள் விடியலிலும் சூரிய உதயத்தை காணுதல், அழகான மலர் ஒன்றை ரசித்தல், யாருக்காவது உதவக்கிடைத்தவாய்ப்பு என்றவாறாக இப்பட்டியல் அமையட்டும்.

நன்றி:- ASIA FEATURES
தமிழில்:-
வின்சென்ற் புளோறன்ஸ்

## சிந்திக்கவைத்த சந்திப்பு



### தருவிப்பு

நேரம் ஐந்து மணியிருக்கும். அந்த வீட்டுக்குப்போனேன். முற்றத்தில் ஐந்தாறு பெடியள் 'கிறிக்கற்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். 'கிறிக்கற்' ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு. ஆயிரத்தித் தொளாயிரத்தித்தொண்ணூற்றைந்தாமாண்டு 'றிவிரெஸ' வுக்குப்பின் இன்னும் 'கிறிக்கற்' விளையாடவில்லை

ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றேன்... அந்த வீட்டுப் பையன் ஓடி வந்து சொன்னான் 'அப்பா இல்லை' என்று. அவர் வரும்வரை அந்த 'கிறிக் கற்'றைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

'கேற்' திறந்து ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். பத்துப் பதினொருவயது இருக்கும். கையில் ஒரு கொப்பியும் பேனையும் கொண்டு வந்தான்.

அந்தச் சிறுவன் எனக்குப் பக்கத்தில் வந்து நின்றான். அவர்கள் விளையாடுவதைப்பார்த்து அடிக்கடி சிரித்துக்கொண்டு நின்றான் 'சசீ' "கச்" தவறவிடுவதைப் பார்த்து 'ச்சீ' என்றான் "போர்" அல்லது "சிக்ஷர்" என்றால் கைகளையும் தட்டினான். அவன் ஒரு தீவிர 'கிறிக்கற்' ரசிகன் என்பதை அவன் செயல் எனக்கு உணர்த்தியது.

"தம்பி நீ 'கிறிக்கற்' விளையாடுவியோ?"

"இல்லை" என்றான்.

"அப்பேன் தெரிந்தவர் மாதிரி சிரிக்கிறாய், கைகளைத் தட்டுறாய்?" என்று கேட்டேன். அதுக்கும் சிரித்தான். அவனின் சிரிப்பைப் பார்க்க எனக்கும் சிரிப்பு வந்தது. சிலர் அப்படித்தான். எதுக்கும் சிரிப்பார்கள். அவன் அப்படிச் சிரித்தபடி இருப்பதற்கு இந்தச் சிரிப்புத்தான் காரணமாய் இருக்கலாம். ஏனென்றால் சிரிப்பு வருத்தம் போக்கும் ஒரு மருந்தல்லவா?

அவன் சிரித்தபடியே சொன்னான்.

"நான் ஒருநாளும் விளையாடேலை. விளையாடுறதைப் பார்த்திருக்கிறன் பார்த்தால் அதை மாதிரிச் செய்யலாம் தானே,"

'கண்கண்டதை கைசெய்யும்' எனும் பழமொழிதான் எனக்கு ஞாபகத்தில் வந்தது.

"கொஞ்சத்துக்கு நில் தம்பி - உனக்கொரு ஓவர் வாங்கித் தரலாம்"

என்று சொல்லி விட்டு நின்றேன். அவன் அந்த ஓவருக்காகக் காத்துக்கொண்டு நின்றான்.

நான் தேடிப்போனவர் கேற்றைத் திறந்து வந்தார். கையிலே நிறையப் பேப்பர்கள் இருந்தன. அவரிடம் நான் பேப்பர்கள் வாங்கிப்படிப்பது வழக்கம் அவர் ஒரு தீவிர வாசகர்! அவர் எனக்குக் கிட்ட வந்ததும் அந்தச் சிறுவன் கையிலிருந்த கொப்பியையும், பேனையையும் அவரிடம் நீட்டிக் கொண்டு கேட்டான் -

"எனக்கு ஒரு கட்டுரை எழுதித்தாங்கோ...?"

"என்ன கட்டுரை?" அவர் கேட்டார்.

"ஆசிரியர் பற்றி...."

ஆசிரியர் பற்றியென்றதும் அவர் கொஞ்ச நேரம் பேசாமல் நின்றார். சில நிமிடங்களுக்குப் பின் கேட்டார்.

"உங்கட ஆசிரியர் பற்றி உமக்கு தெரியாதா?"

அவன் சிரித்தான்

"தம்பி எனக்கு ஆசிரியர் பற்றி ஒரு கட்டுரை வேணும். நீ எனக்கொரு கட்டுரை எழுதிக் கொண்டுவா - நான் உனக்கு எழுதித்தரலாம்."

அவர் சொல்லி விட்டு கொஞ்ச நேரம் அவனையே பார்த்தார்.

"ஓம்"

தலையை ஆட்டினான்.

எனக்கு விளங்கிவிட்டது; அவர் ஏனப்படிச் சொன்னார் என்று! அவனாகவே முயற்சி செய்யவேணும். அவனின் அந்த முயற்சியில் தான் சில திருத்தங்கள் ஏற்படின் சொல்ல வேணும் - அந்தத் திருத்தங்களை வைத்து அவன் மீண்டும் முயற்சி செய்யவேணும். அவனின் அந்த முயற்சியே அவனை, எப்படி எழுதுவதென்பதை புரியவைக்கும்.

ஆனால், ஆசிரியர் மாணவர்களுக்கு வீட்டுவேலைகள் என்று இப்படியான விடயங்களையே கொடுப்பார்கள். அம்மாணவர்கள் இன்னொருவர் எழுதிய ஆக்கங்களைப் பெற்றே தனது 'ஆக்கமென உரியவர்களிடம் சமர்ப்பிப்பார்கள்.

இது ஒரு விபத்து.

இவ்வாறான நிகழ்வானது அநேகமாக தமிழ்த் தினப் போட்டிகளில் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றில் நிகழ்கின்றது.

ஆகவே,ஆசிரியர்கள் இப்படியான விடயங்களை தங்கள் வகுப்பறைகளிலே எழுதவைத்து, எப்படி எழுதுவதென விளக்கமளித்து, அவர்களைக்கொண்டே எழுத வைப்பதன் மூலம் அவர்களின் எழுத்துப்பரப்புத்தளம் விருத்தி கொள்ளுமல்லவா? நான்அவரையே கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டு நின்றேன் - அவர் என்னைப்பார்த்துச்சிரித்தார்.

அது அச்சிறுவனின் சிரிப்பு மாதிரியில்லை

"வண் மினிற்"

சொல்லிவிட்டு வீட்டுக்குப் போனார்.

அந்தச் சிறுவன் போகவில்லை- அவர் வீட்டுக்குள் போகும் வரை பார்த்து விட்டு, என்னைக்கேட்டான்.

"நீங்கள் எழுதித்தாங்கோ ஆசிரியர் பற்றி ஒரு கட்டுரை?" நான் ஆசிரியரிடம் படித்து பலவருடங்கள் ஆகிவிட்டன. எனக்கெப்படித்தெரியும் இன்றைய ஆசிரியரைப்பற்றி...?

- கருணைரவி

வாழ்க்கை வாழ்வதற்கல்ல, சுகமாக இருக்க - மார்க்ஷியல்



# மண் அகழ்வு நிகழ்வுகளும் நியாயங்களும்...

சுற்றுச்சூழலுடன் தொடர்பான விடயங்களைப்பற்றி எண்ணும் பலருக்கும் வன்னியிலிருந்து எடுத்துச்செல்லும் மண் தொடர்பான எண்ணம் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாதது. ஆற்றுவழிகளில் தேங்கிக்கிடக்கும் மண்ணை அகழ்வது என்பது இப்போது பலரும் விவாதிக்கும் விடயமாக மாறிவிட்டது. குடாநாட்டிலும் கூட மிகப் பரபரப்பான விடயங்களில் ஒன்றாக மண் அகழ்வது இருந்து வருகின்றது. கடந்த 20 வருடகாலப் போரினால் அழிக்கப்பட்ட கட்டடங்கள், கட்டுமானங்களை மீள அமைப்பது என்பதும் தவிர்க்க முடியாது. அவசியதேவையாக இருக்கும் நிலையில் இப்பிரச்சினையை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவரும் மையம் அவசியமானதாகும். இந்த இருநிலை யதார்த்தங்களுக்கு மத்தியில் இப்பரபரப்பான விடயம் சம்பந்தமாக ஆராயும் சூழலியல் ஆர்வலர்களின் குழுவில் நேரடியாக மண் அள்ளப்படும் காடுகளுக்கும், மண் அள்ளப்படக்கூடிய சாத்தியப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட வாய்ப்புக்கிடைத்திருந்தது. அப்பயண அனுபவத்திலிருந்து சில எண்ணங்களை சமூக மட்டத்தில் பரிமாறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அ.கேதீஸ்வரன்**

தமிழர்தாயகத்தின் நெருக்கடியான சனச்செறிவு கொண்ட குடாநாட்டுப்பரப்பில் அதன் பௌதீக அமைப்புக் காரணமாக உவர் நீராகும் வாய்ப்பு உயர்ந்து வருவது பற்றிய அபாய எச்சரிக்கைகள் அந்த மனித வாடிக்கையினால் எழுந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டட நிர்மாணத்தேவைகளுக்குத்தேவையான மணல் அள்ளப்பட்டு வந்த நாகர் கோயில் முதல் வல்லிபுரம் வரையிலும் முறையற்ற மண் அகழ்வு காரணமாக பாரிய குழிகள் ஏற்பட்டு கடல்நீர் உட்புகும் அபாயம் எழுந்த நிலையில் அப்பகுதியிலிருந்து மண் அகழ்வதனை தடை செய்துள்ளனர். மாறாக அரியாலைப்பகுதியில் இருந்து களவாகமண் அகழ்வது இரவோடு இரவாக பொதுமக்களின் காணிகளில் இருந்து கூட மண் திருட்டு நிகழும் சம்பவங்கள்தொடர்ந்து வருகின்றது. ஆனால் குடாநாட்டின் மண் தேவையோ மிக மிக உயர்வாகவே தொடர்கிறது. அழிக்கப்பட்ட தனியாரின் கட்டுமானங்கள், அரச நிறுவனங்களின் கட்டுமானங்கள், புதிய தேவைகளின் காரணமாக கட்டுமானங்கள் என சனச்செறிவின் தேவைக்கேற்ப தேவையின் உயர்வு தவிர்க்க முடியாத நியாயமாக இருந்து வருகிறது.

எமது மரத்தேவையின் முழுப்பங்கையுமே தென்பகுதியிலிருந்து பெறத்தீர்மானிக்கப்பட்ட பின்னர் உள்ளூரில் இருக்கும் சொற்ப காடுகளாயினும் மிஞ்சும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கிடைத்திருக்கும் சந்தை வாய்ப்பில் தென் பகுதியாரின் விற்பனை களைகட்டி நிற்கிறது. எமது தேசத்தின் வளங்களுக்கும் இவ்வாய்ப்பைப்பயன்படுத்தி வருமானமும் தொழிலும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது நியாயமானவாதமாக இருக்கக் கூடும். எனினும் இது மௌனமாக ஏற்படுத்தும் சூழல் தாக்கங்களையும் ஆராய்ந்து பார்த்து விழிப்புப் பெறவேண்டியதும் அவசியமாகும். குடா நாட்டின் தேவைக்கு ஈடு கொடுக்கும் வளக்க முறைமையை அடிப்படையாகக்கொண்ட வன்னிப் பொருநிலப்பரப்பில் இம் மண்ணுக்கான நிரம்பல் நிலையம் செயற்படுவது நீண்ட காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். கண்டாவளை மண்ணில் சீமெந்தைக் கலக்கும்போது சிறிய குறுணிக்கல் கலக்கப்பட வேண்டியசெலவு தானாக மீதப்படுத்தப்படும். அத்துடன் கட்டுமானக்காரரின் திருப்தியும் உயர்ந்துவிடும். அந்தக் கட்டுமானப்பண் பாட்டுத்தொடர்பை நாம் மறுக்கவே யில்லை. இந்த பின் புலங்களின் தொடர்போடு உண்மையில் இப்போது நடைபெறுவது என்ன என்பதனைப் பார்க்கும் போது கனகராயன் ஆற்றின் நீர்வரத்துப் பகுதிகள், கலவலப்புஆற்று நீர்வரத்துப் பகுதிகள், வண்டல்கல் ஆற்றின் நீர்வரத்துப்பகுதிகள், பாலியாற்றின் நீர்வழிகள் என்பவற்றில் சுறுசுறுப்பாக மணல் அகழ்வு நிகழ்ந்து வருகிறது. 1980 களில் பின் பெருமளவில் மணலின் கேள்வி குறைவானதாக இருந்ததால் இவ்வாற்று வழிகளில் பெருமளவில் மணல்ப்படிவுகள் சேர்ந்திருக்கின்றன. இவை ஆறுகளின் நீரோட்டத்தை தடுக்கும் நிலமைகள் கூட ஏற்பட்டிருந்தன என்பதால் இவ்வாய்ப்பான சந்தையைப் பயன்படுத்தி எம் தேசத்தின் வளத்துக்கும் உரிய விலையைப்பெறுவதுடன் உட்கட்டமைப்பிலும் திருப்தியான மாற்றம் செலவின்றி வருமென்ற இருநிலை நன்மை எதிர்பார்ப்புடன் எம் பெரும்பரப்பில் மண் அள்ளுவது அனுமதிக்கப்பட்டது. ஆனால் இச்செய்முறையிலோ முகாமையற்ற தன்மை காரணமாக சூழலுக்குஅபாயம் தரும் பல செயற்பாடுகளே நடந்தேறியுள்ளன. இது தொடர அனுமதிக்கக்கூடாது என்பதே எமது வாதமாகும். இந்தச் செயற்பாடுகளைபட்டிய லிட்டுப் பார்க்கும் போது,

1. மண் ஏற்றச்செல்லும் உழவியந்திரங்கள் விரைவாக செலவுக்குறைவுடன் மண்ணைப் பெற ஆக்கிய பல புதிய வீதிகளுக்கும் வழிகளுக்குமாக பல மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. சதுர மீற்றர் ஒன்றுக்கு 15-23 மரங்கள் வெட்டப்பட்டு புதிய புதிய பொட்டல்வெளிகள் உருவாக்கப்பட்டதனால் எமது காடுகளின் இயல்புநிலை குழப்பப்பட்டு அடர்தன்மை சிதைக்கப்பட்டுள்ளது.
2. ஆற்றுவாய்க்கால்களில் உழவியந்திரத்தை இறக்கி மண் ஏற்றப்படுகிறது. ஒப்பந்த கூலியாக ஏற்றுவோர் பெறுவதனால் எவ்வளவு அதிக சுமையை ஏற்ற முடியுமோ அதுவே இலாபமானதாக இருப்பதால் வளங்களை மூடி பாதுகாப்பாக இருந்த மரங்களை வெட்டிஅகற்றிவிட்டே மண் ஏற்றப்படுகிறது.
3. மண் எங்கே ஏற்றப்பட வேண்டும், அது எந்த அளவு மட்டும் ஏற்றப்படுவது பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்கும் எவரும் அப்பகுதியில் இருப்பதில்லை என்பதால் நிலம் தெரியும் வரை மண் அள்ளப்படுகிறது. இது அப்பகுதியில் இருக்கும் நீர் மட்டத்தை நேரடியாக சூரிய ஒளியுடன் தொடர்புபடுத்த அது ஆவி உயிர்ப்பைத் தூண்டுகிறது. இதனால் நீர் மட்டம் குறைய அப்பகுதியின் வரட்சி உயர்வடைகிறது.
4. குறித்த சில இடங்களில் பாரிய குழிகள் ஏற்படக் கூடியவாறு கூட மண் அகழ்வது இடம் பெறுவதால் ஆற்றங்கரையோரம் இருக்கும் மரங்கள் விரைவில் பாறி விழும் வாய்ப்பு உயர்ந்துவிட்டது.
5. ஆற்றுமண் முகாமையின்றி அள்ளப்படுவதனால் நீர் வளத்தின் வேகம் உயர்வாக இருக்கும். இது மழைக்காலங்களில் ஒரு சில நாட்களிலேயே நீர் கடலைச்சென்று சேரத்தூண்டுவதனால் நீரை வீணடிக்க இத்திட்டமிடாத அகழ்வு காரணமாகிவருகிறது.
6. வேகமான நீரோட்டம் ஆற்றுவழிகளில் ஏற்படுமாயின் அது மழைக்காலங்களில் குளங்களின் நீர் மட்டம் கட்டுப்பாடின்றி உயர வாய்ப்பாகும். இது குளங்களில் உடைப்பை ஏற்படுத்த முக்கிய காரணமாகும்.
7. காடுகளில் மண் ஏற்றும் கூலியாட்கள் தமது தேவைக்கென தீயை மூட்டி தண்ணீர் சூடாக்குவது அப்பகுதியில் காட்டுத்தீயை ஏற்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தும்.

இவ்வகையில் முகாமைத் தவறுகள் காரணமாக ஏற்படும் சூழலியல் பாதிப்புகள் சிந்திக்கப்படல் அவசியம். மறு நிலையில் எமது தேவைக்கு மண் பெறுவது எப்படி என்பது நியாயமான வினாவாகும். இதற்குச்சாத்தியமான இரு வழிகள்இருப்பதாக தொடர்புடையபலர் கருதுகின்றனர். அவையாவன,

1. போதிய மண் மலைகளாக குவிந்துள்ள கௌதாரிமுனை முதல் பரமன் கிராய், வெட்டுக்காடு வரையான பகுதிகளில் இருந்து குடாநாட்டு மண் தேவையை பூர்த்திசெய்யலாம். இப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் வீசும் காற்றினால் பெருமளவு மணல் வந்து சேர்வது குறிப்பிடத்தக்கது.
2. மண் அள்ளப்படக்கூடிய அளவில் உள்ள ஆற்று வழிகளில் எந்தெந்த இடங்களில் எந்தளவு தூரத்திற்கு மண் அகழ்வது என்பதனை முகாமை செய்து தீர்மானிக்கப் படல் வேண்டும். நேரடியான அவதானிப்பாளரின் மேற்பார்வையில் இது நடைபெற அனுமதிப்பதுடன் கூடைகளின் மூலம் மண் எடுத்து சுமந்து ஏற்றுவது வாய்க்கால்களின் இயல்புநிலை பாதிப்படைவதனை தவிர்க்கமுடியும்.

எதுவாயினும் மனித தேவைகளின் தற்போதைய நிலை எவ்வளவு அவசியமானதோ அதேயளவு முக்கியத்துவம் எதிர்காலம் நிலைத்திருப்பதற்கும் காட்டப்படல் அவசியமாகும். மற்றவர் வாழ தன்னுயிர் மாய்க்கும் எம் தேசத்தின் எதிர்காலம் வெறும் உவர்பூமியாக மாறுவது எந்தளவுக்கு நியாயமாகும்?

---

**ஊக்கமாத்திரை**

# தொலைநோக்குடன் செயற்படுங்கள்



சிற்றின்பத்தில் தினமும் மூழ்கிப் போனால் பேரின்பத்தை இழந்து விடுவோம். இது ஆன்மீகவாதிகளின் கூற்றாயினும் எமது நாளாந்த வாழ்வுக்கும் சாலப்பொருந்தக்கூடியதே.

ஒரு இலக்கை நோக்கிய பயணத்தில் வெற்றிகிட்டும் போது தான் பெருமகிழ்ச்சி ஏற்படும். இவ் இலக்கை அடைவதற்கு நாம் சில சில்லறை மகிழ்ச்சிகளைத் தியாகம் செய்யவேண்டும். அப்படித் தியாகம் செய்யும் போதுதான் வெற்றிக்கனியைப் பறித்திடமுடியும்.

ஆனால் யதார்த்தத்தில் நம்மில் பலருக்கு இது சாத்தியப்படுவதில்லை. பலருக்கு சிறுசிறு மகிழ்ச்சிகளில் அதிக ஈடுபாடு. இறுதி வெற்றியையும். எல்லையில்லா மகிழ்ச்சியையும் மறந்து செயற்படுகிறார்கள். ஆனால் வெற்றியைப் பெறுகின்றவர்கள் அனைவருமே சிறு சிறு உல்லாசங்களைத் தியாகம் செய்தவர்கள் தான்!

இளமைப்பருவம் வாழ்வின் பொற்காலம். இந்தப் பருவத்தில் நாம் எதிர்காலத்திற்குரிய பலமான அத்திவாரத்தைப் போட்டு விட்டோமானால், பின்னர் வாழ்வில் முன்னேறுவதும் மகிழ்வாயிருப்பதும் தொடர்கதையாகிவிடும்.

எண்ணும், எழுத்தும் கண் எனத்தகும் என்று சான்றோர் கூறுவர். ஆம்! இளமையிலே கல்வி சிலையில் எழுத்து! இன்று எமது பிரதேசங்களில் கல்வி நிலை தாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இரண்டு தசாப்தங்களிற்கு முன்னர் இலங்கையிலே யாழ்ப்பாண மாவட்டம் முதல் நிலையில் இருந்தது. இன்று அந்நிலை மாறி ஐந்தாம் ஆறாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலைக்குபோரும் இடப்பெயர்ச்சியும் தான் காரணமா? அப்படிச்சொல்ல முடியாது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வசதிகளற்றநிலையிலும் கல்வியில் மேலோங்கி வருவதை அவதானிக்க முடிகின்றதே!

உண்மையை ஆராயுமிடத்து யாழ்ப்பாணத்து மாணவர்கள் சிறு சிறு மகிழ்ச்சிகளில் மூழ்கிப்போயிருப்பது புரிகிறது. பரீட்சைக்குப் படிக்கவேண்டிய மாணவன் சினிமா, தொலைக்காட்சி பார்ப்பதும், நண்பர்களுடன் கூடிக் கும்மாளம் அடிப்பதும், தொலைபேசியில் நண்பர்களுடனும், வானொலியுடனும் பொழுதைக் கழிப்பதும் என்று மாறிவிட்டது.

சேர்ந்து படித்தல் என்ற போர்வையில் நண்பர்களுடன் கூடி,பாடத்தைத் தவிர ஏனைய சில்லறை விவகாரங்களை எல்லாம் அலசி அரட்டை அடிப்பது என்று நேரத்தை வீணாக்கினால் இன்றைய போட்டியான காலத்தில் அதிக புள்ளியைப் பெற்று உயரமுடியுமா என்ன? மேலும் சினிமா கதாநாயகர்களைப் பின்பற்றி ஆடை அணிவதும், புகை பிடிப்பதும், வன்முறைகளில் இறங்குவதும் சர்வ சாதாரணமாகி விட்டது. இவற்றுக்கு மத்தியிலே புற்றீசல்போல் கிளம்பியுள்ள நீலப் படங்களும், ஆபாசபுத்தகங்களும் திட்டமிடப்பட்ட சதியாக எமது பிரதேசங்களில் எதிரிகளால் திணிக்கப்படுகின்றது.

இதையெல்லாம் உணராத எமது இளைஞர்களும் யுவதிகளும் நாகரீகம் என்ற மயக்கத்துள் தம்மைத் தாமே சீரழித்துக் கொள்வது வேதனைக்குரிய விடயமாகும். இளமையில் கல்வியில் நீங்கள் ஈட்டும் வெற்றி மூலம் எதிர்காலம் மிக மகிழ்ச்சியாக அமையும் என்ற நிச்சயமான உண்மையை எண்ணிப்பாருங்கள். மேலும் நீங்கள் எந்தத்துறையில் இறங்கினாலும் உங்களுக்கு கைகொடுக்கப்போவது கல்வியே என்பதை மறந்துவிடாதீர்கள்.

எனவே சிற்றின்ப மாயையை புறக்கணிப்போம். எமக்காக பேரின்பமயமான வாழ்வு இவ்வுலகிலேயே காத்திருக்கின்றது. அதற்குத் தேவை சில்லறை இன்பங்களை தியாகம் செய்து ஒரு அத்திவாரத்தை ஏற்படுத்தலேயாகும்.

விடுதலைக்காகப் போராடும்போராளிகள் எத்தனை தியாகங் களைச் செய்கிறார்கள்! தமது இன் பங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தியாகவிடுதலை ஒன்றே பேரின்பம் என்று செயற்படுகிறார்கள்.

நீங்கள் அவர்களைப் போல், மற்ற வர்களுக்காக உங்கள் இன்பங்களை புறம்தள்ளவேண்டாம். உங்கள் சொந்த உயர்வுக்காக, போலியான சிற்றின்பங்களைத் தியாகம் செய்யுங்கள். அப்புறம் எதிர் காலத்தில் நீங்களே ராஜா! நீங்களே மந்திரி!

**ச. முருகானந்தன்**

பகுதி–03



## தொடர்கதை

### அத்தியாயம் -01

# பிளானறி ஓ கொணரின் இடம் பெயர்ந்தவன்

சு.மகேந்திரன்



சாந்தமான நீண்ட முகத்தையுடைய அந்தப்பாதிரியார், முகத்தை ஒரு விரலால் தாங்கியபடி, பத்து நிமிடங்கள் வரை ஆவிகள் தூய்மையடையும் இடங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு எதிரேயிருந்த கதிரையிலிருந்தபடி, மிஸிஸ் மக்கின்ரயர் அவரை ஓரக்கண்களால், மிகுந்த சினத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்கள் வீட்டின் தலைவாசலில் அமர்ந்து, இஞ்சிப் பானத்தை அருந்திக்கொண்டிருந்தனர். பனிக்கட்டிகள் கண்ணாடியில்பட்டு சத்தமெழுப்பும்அளவிற்கு, அவள் கிளாசை ஆட்டிக்கொண்டிருந்தாள். அவளது மணிமாலை, கைவளையல்களும் கூட சத்தமெழுப்பும் வகையில் ஆவேசமாக ஆடின. இது பொறுமையிழந்த குதிரைக்குட்டியொன்று, தனது சோணத்தை கணீரென்ற ஓசையுடன் ஆட்டுவது போலிருந்தது. “அப்படி அவனை இங்கு வைத்திருக்கத்தான் வேண்டுமென்ற மனிதநேயக் கடமைப்பாடு எதுவும் எனக்கில்லை. அப்படிப்பட்ட நிபந்தனையற்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை” எனத் தனக்குள் கூறிக்கொண்டாள். கப்பலைப்போல் சடுதியாக ஒரு பக்கம் சரிந்தவள், ஒரு இயந்திரரம்பம்போல் ‘இங்கே பாருங்கள். நான் ஒன்றும் வேதாந்தியல்ல. நடைமுறைக்கு ஏற்பநடப்பவள். நடைமுறைபற்றி உங்களிடம் கதைக்க வேண்டியவள்’ என அவரது காலடியில் எல்லாவற்றையும் கொட்டித்தீர்த்தாள்.

ஆ.... என முனகியபடி பேச்சைத்தட்டிக்கழித்து அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க பாதிரியார் முனைந்தார்.

அவருடன் நீண்ட நேரமாக நடக்கப்போகும் இந்தச்சந்திப்பை சகித்துக்கொள்வதற்காக, தனது இஞ்சிச்சாற்றுப்பானத்தில், ஒரு விரலுக்கும் சற்றுஅளவுகூடவாக விஸ்கியை ஊற்றிக்கொண்டாள். தான் நினைத்து அமர்ந்ததை விட கதிரை அவருக்குச் சமீபமாக இருந்ததால், அவள் ஒழுங்கற்ற முறையில் அமர நேர்ந்தது. கௌசக்கின் நடத்தை திருப்திகரமானதாக இல்லை என்றாள்.

கிழவர் தனது கண் இமைகளை பரிகாசம் மிகுந்த ஆச்சரிய உணர்வுடன் மேலுயர்த்தினார்.

‘அவன் இங்குமேலதிகமான ஒருவனாகவே இருக்கிறான். இவ்விடத்துக்கு பொருந்து பவனாகவும் அவன் இல்லை. நான் பொருந்தக்கூடிய ஒருவனையே வைத்திருப்பேன்.’

பாதிரியார் கீழே குனிந்து, தனது பாதங்களைக் கவனமாகப் பார்ப்பது போலப்பார்த்தார். அவரிடம் சிறிது மௌனமாக இருந்துவிட்டு, பின்பேச்சைத் தொட ங்கி எதனையும் தனது பாதைக்குக்கொண்டு வரக்கூடிய வித்தை நிறைந்திருந்தது. அவர் கிட்டத்தட்ட எண்பது வயதானவர் அவள் இடம்பெயர்ந்த ஒருவனை வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்காக அவரை அணுகும் வரை, வேறொரு பாதிரியாரையும் அறிந்தவளல்ல. இந்தப்பொலிஸ்காரன் கௌசக்கை வேலைக்கு அமர்த்திய பின், அதனாலுண்டான அறிமுகத்தைப்பயன்படுத்தி, அவளை மதம் மாற்ற முயன்று வருகின்றார் பாதிரியார் அவளுக்கும் அவர் அக்காரியத்தை எப்படியோ நிறைவேற்றி விடுவார் போலவே தோன்றியது. கிழவர் ‘அவனுக்கு சிறிது அவகாசம் கொடுங்கள். அவன் விரைவில் இவ்விடத்துக்குப் பொருந்தக்கூடிய மாதிரி, தன்னை ஆக்கிக் கொள்வான்’ என்றார்.

‘ஆர்ர்ர்..... என்ன அழகாக உங்கள் பறவைகள் உள்ளன. இப்போது தான் அவற்றைக் கண்டேன் எனக்கூறியபடி, எழுந்து நின்று தோட்டத்தில் நின்ற ஆண் மயிலையும், இருபெட்டைகளையும் பார்த்தார். பயத்துடன் அவதானமாக நடந்துகொண்டிருந்த அவற்றின் கழுத்துகள், சுருக்கங்களுடன் மடிந்திருந்தன. ஆணின் கரு நீலக்கழுத்தும், பெண்மயிலின் வெள்ளி நிறம் கலந்த பச்சைவண்ணமும், அந்தப்பின் மாலை வெயிலில் பளபளத்தன.

மிஸிஸ் மக்கின்ரயர் உணர்வற்ற ஆனால் உறுதியான குரலில், அவன் திறமையுள்ளவன் தான், அதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஆனால் அவனுக்கு எனது நீகிரோக்களுடன் எப்படிப் புரிந்துணர்வுடன் பழகுவது என தெரியவில்லை. அத்துடன் நீகிரோக்களுக்கும் அவனில் விருப்பமில்லை. எனது நீகிரோக்கள் இங்கிருந்து ஓடிவிடுவதை என்னால் சகிக்க முடியாது. அவனது மனோபாங்கிலும் எனக்கு விருப்பமில்லை. அவன் இங்கு வந்து சேர்வதையிட்டும், சிறிதளவு நன்றியறிதல் இல்லாமல் வேறு இருக்கின்றான்.’

அந்தத்திரையிட்ட கதவைத் திறந்து கொண்டு அங்கிருந்து தப்பிவிட அவர் ஆயத்தமானார். ‘வாறான் இங்கிருந்தும் இப்போது புறப்பட வேண்டியுள்ளதுஎன அவர் கூறினார். முணு முணுத்தார்.

‘ நீகிரோக்களைப்புரிந்து கொள்ளக்கூடிய ஒருவன் எனக்குக் கிடைத்தவுடன், நான் கௌசக்கை விட்டுவிட வேண்டியது தான்’ எனக் கூறியபடி எழுந்து நின்றாள் மிஸிஸ் மக்கின்ரயர்.

திரும்பி அவளின் முகத்தைப் பார்த்தபடி, ‘அவனுக்குப் போவதற்கு ஒருஇடமும் இல்லை’ என்றார் பாதிரியார். ‘அவன் செய்த இந்தஅற்பச்செயலுக்காக, அவனை வெளியே அனுப்புவது சரியானதல்ல என்பதை, நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்’ என்ற படி பதிலுக்குக்கூடக்காத்திராமல், கையைஉயர்த்தி ஏதோ உருளுவது போன்ற குரலில் அவளை ஆசீர்வதித்தார்.

‘அவனுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை நான் தோற்று வித்தவள் அல்ல’ என்று சினத்துடன்கூடிய சிரிப்புடன் மிஸிஸ் மக்கின்ரயர் கூறினாள். பாதிரியார் கண்களை பறவைகள் மேல் மேயவிட்டார். அவை முற்றத்தின் நடுப்பகுதியில் அப்போது நின்றன. ஆண்மயில் சடுதியாக தனது தோகையை உயர்த்திப்பின் அதை விரித்து, சடுதியாக பயத்தை ஏற்படுத்தும் வகையில் சப்தமிட்டது. அதனை பச்சை கலந்த பொன் நிறக்கொண்டையில், அடுக்கடுக்கான முழுமைபெற்ற சூரியன் போன்ற கண்கள் மிதந்தன. தனது கண்களைத்தளர்த்திய நிலையில், ஸ்தம்பித்து நின்றார் பாதிரியார். இப்படியொரு முறையற்ற கிழவனை தான் எங்காவது பார்த்திருக்கின்றாளோ என எண்ணியபடி, மிஸிஸ் மக்கின்ரயர் திகைத்து நின்றாள். ‘ இப்படித்தான் கிறிஸ்துவும் வருவார் என்று சந்தோஷமான குரலில் கூறியபடி, வாயைத் துடைத்துக்கொண்டார் பாதிரியார்.

(தொடரும்)

# நட்பு

நட்பு என்பது பூஜ்யத்திற்கு பக்கத்தில் முளைக்கும் இலக்கம் போன்றது. இதயத்தை அது நிரப்பி விடுகின்றது. அப்போது சூரியன் மனதில் உதிக்கின்றது. இருளை அப்புறப் படுத்தும் வெளிச்சம் தான் நட்பு. ஒரு வைரத்தை விட புதிதாக கைகுலுக்கிய நண்பன் பெறுமதிமிக்கவன். நல்ல நட்புள்ளம் இதயத்தை திறக்கும் போது நூறு பகைவர்கள் இல்லாமல் ஆகின்றனர்.

வார்த்தைகள் நண்பர்களுக்கான வலை.
இன்சொல் நட்புக்கான அழைப்பிதழ்.
வேருக்கும் நீருக்கும் நட்பு.
மலருக்கும் நறுமணத்திற்கும் நட்பு.
விழிக்கும் இமைக்கும் நட்பு.
இதயத்திற்கும் தேகத்திற்கும் நட்பு.
இதயத்திற்கும் இதயத்துக்குமான நட்பு.

இந்த நட்புகளில் இதயத்தில் வளரும் நட்புச்செடி அற்புதமானது. நட்பு தேவைக்கானதல்ல. அது இதயத்திற்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானது. நல்ல நட்புக்கு நட்சத்திரம் கூட வாழ்த்துத் தெரிவிக்கும். இது இதயத்தில் ஊறும் இரத்தப்பசை. தனக்குரிய சப்தங்களை தெரிவுசெய்யும் முயற்சி. மனிதன் காதலை சுவாசிக்காமல் வாழலாம். இந்த ஆறறிவு ஜீவன் நட்பு ஒளியை தரிசிக்காமல் நாட்களை நகர்த்த முடியாது. மனிதம் புன்னகைக்கின்றதா? நட்பு பூ அனுப்பியிருக்கின்றது.

கலாசாலை நண்பர்கள் காற்றுக்கு கலகலக்கும் இலைகளுக்கு ஒப்பானவர்கள். முடிந்ததும் உதிர்ந்துவிடுவார்கள். கல்லூரி அன்பு உள்ளங்கள் சலசலக்கும் ஓடையைப் போன்றவர்கள். இடையிலே வற்றிவிடுவார்கள். பாலியல் நட்பு கடல் அலையைப்போன்றது. எப்போதும் அதன் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். இதயக்கரை ஈரலிப்பாகவே கிடக்கும்.

வாழ்க்கைப் பேருந்தில் ஏறுவார்கள், இறங்குவார்கள் இப்படி மலர்ந்து மலர்ந்து உதிர்ந்து உதிர்ந்து போகும் நட்புகள் மிகமிக மலிவானவை. நட்பு மலிவாககிடைக்கும் போது இதயம் தெளிவாக இருக்க வேண்டும். வாழ்க்கை வண்டியின் சக்கரங்கள் நண்பர்களால் திருடப்படலாம், வாழ்க்கைத் தீபம் பலத்த காற்றால் அணைந்து போகலாம். தூரத்து எதிரி வீசுவது கல்லா? பூவா? என்பதை பூனை விசாரித் துவிடும். இமை விழியைக்காக்குமா?



முள்ளாகிக் குத்துமா என்பதை கவனமாக பரிசீலனை செய். முடிந்த வரை முழுமையாக இதயத்தை சாப்பிடு- சுவைத்த பின்னர் சந்தேகத்தைக்கூப்பிட்டு தீயிடம் ஒப்படைத்துவிடு.

நீ நல்ல வெல்லத்தைக் கொடுத்தால் உன் நாக்கும் இனிக்கும் என்பதை உன் நாளேட்டில் குறித்துவை. விரலை நீட்டினால் தான் மோதிரம் கிடைக்கும். கழுத்தை நீட்டினால் தான் மாலை விழும். நீ கத்தி நீட்டக் காத்து இருக்கின்றாயா? இன்னும் ஒரு இதயத்தில் உனக்காக கத்தி காத்துஇருக்கின்றது. மனிதனே அன்பு விசயத்தில் ஒரு கிணறாக கிடந்து நீர் கொடு. ஊற்றுக்கு அணைக்கட்டு கிடையாது. நட்புச்செல்வம் வறுமை முள்ளை நட்பு உடைத்து விடும்.

நட்பு உயர்ச்சியானது. சிகரத்திற்கு அழைத்துச்செல்லும் நட்பு மகிழ்ச்சி மழை பெய்யக்கூடியது. சோகவெப்பம் அதில் தணிந்து விடும். நட்பு கவர்ச்சியானது. இதய ஓவியங்கள் நிறங்கள்பெறும் நல்ல மனிதர்களை பெற்றவன் ஒருவன் என்றாலும் அவன் பல நூறு மனிதர்களுக்கு நிகரானவன். தீய நண்பர்களின் காற்றை சுவாசிப்பவன் ஒருவன் என்றாலும் அவன் இறந்த உடலுக்கு சமனாவன்.

எதிரிக்குஉன் இதயத்தை அனுப்பு - உன் அன்பு காத்திருக்கின்றது என்று பூவாசம் கலந்து கடிதம் எழுது. பகை சுவரல்ல நிலைப்பதற்கு இது புகைபோன்றது என்று புன்னகையால் தூது விடு. நட்புக்கிடைக்காதவனைச்சுற்றி இலட்சம் பேர் கூடி இருந்தாலும் அவனுக்கு தனிமை நெருப்பு வைக்கின்றது. ஒரு நல்ல நட்பை இழந்தவன் சிகரத்தில் இருந்து வீழ்கின்றான். தன்னுடைய இதயச் சிறகை பறிகொடுக்கின்றான்.

நட்பு பற்றி உனக்குள் கவி எழுது.
கைகள் இருப்பது கைகள் குலுக்குவதற்காக
வார்த்தைகள் வசிப்பது வாழ்த்துவதற்காக
பார்வையால் உன்னைப்பரிமாறு - உன்
வியர்வையினை நண்பனுக்கு வழங்கு

காகம் கறுப்பு நிறமென்றாலும் அதன் நட்பு வெள்ளை நிறமுடையது. நாய் மிருகம் என்றாலும் அதன் அன்பு மனிதத்துவம்மிக்கது. உன் அன்பால் சூழலை சுத்தப்படுத்து . வரட்சி காலநிலையில் மட்டும் காணப்படுவதில்லை. அது இதயங்களிலும் நாற்காலி செய்து அமர்ந்து இருக்கின்றது. - நீ மழையாகிநீர் கொடு. வரட்சி விடுதலை பெற்றுச்செல்லட்டும்.

கனியை விட சுவையானது தான் நட்பு.
பனியை விட சுத்தமானது தான் நட்பு.

நல்ல நட்புக்கடலில் நீந்த நீந்த ஆழம் அதிகமாகும். காதல் காமம் கலந்த கலவை நட்புக் காதல் கலந்த கலவை. காதல் வேலிகளுக்கு வெடிவைக்கக்கூடியது. நட்பும் அப்படித்தான்.

இரந்து பெறுவது நட்பல்ல - சுரந்து பெறுவது அது.
வலிந்து கேட்பது நட்பல்ல - தானாய் எழுந்து வருவது.
இயற்கையானது நட்பு. இயல்பானது நட்பு.

அதை செயற்கை ஆக்கினால் போலி ஆகுவாய் நீ. நீ உன்னைப்பார்த்து ஒரு கைஅசைகிறதா? நீ இரு கைகளையும் நீட்டு தோற்றுப்போகாத நட்பு உன்னை ஆசீர்வதிக்கும்.

உன்னில் சூரியன் உதிக்க வேண்டுமா? நட்பு எனும் கிழக்குப்பக்கம் உன் இதயத்தை அனுப்பு.

நல்லது நண்பர்களே நீங்கள் நட்பை ஆராய்ந்து தானே நண்பர்களை தெரிவு செய்கின்றீர்கள். உங்களுக்கு நண்பனானவரிடம் எதையும் ஒளிக்காதீர்கள் உங்கள் இதயத்தை முற்றாக திறந்துபேசுங்கள். உள்ஒன்று வைத்து வெளி ஒன்று எனப்பேசாதீர்கள். நட்புக்குள் துரோகம் செய்து நட்பை இழிவுபடுத்தாதீர்கள்.

கண்ணீரால் கடல் மட்டம் உயராமல்
புன்னகைப்பூக்களால் - இப்
பூமி உயரட்டும்.

நட்பினை நரகல் படுத்தாதீர்கள். நட்பு என்னும் செடிக்கு அன்பு எனும் நீரை ஊற்றி நன்மை என்னும் நறுமலா பூக்கச்செய்யுங்கள்.

இ.மதுமிதா

சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதால், எவரும் சுதந்திரம் அடைந்து விடுவதில்லை - கார்ஜ் ஸாந்தாயனா



# சுவிஸ் அணியின் தாயகச் சுற்றுலா தேசியத்துக்கு கிடைத்த வெற்றி

சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்களின் உதைபந்தாட்ட அணியொன்று தாயகத்துக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தது. இந்த அணியுடன் தாயகத்தின் 8 மாவட்ட அணிகளும் கனிஷ்ட பிரிவுகளுக்கான சுற்றுப்போட்டியை நடத்தின. மாணவர் அமைப்பின் ஆரம்ப காலப்போராளியான மேஜர் முரளியின் நினைவாக நடத்தப்பெற்ற இந்தப்போட்டியினை தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாடு செய்திருந்தது. தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கி என நான்கு இனங்களும் போட்டித்தொடரில் பங்குபற்றியிருந்தன. 13வயது, 15வயது, 17வயது,19வயது அணிகள் என 4பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன.

இச்சுற்றுப்போட்டிக்கு சகல மாவட்டங்களிலிருந்தும் நடுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அண்மையில் பாடசாலை மட்டப்போட்டிகளில் பங்குபற்றி தமது திறமையை வெளிப்படுத்திய மாணவர்களே பெரும்பாலும் இதில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அந்த வகையில் அணிகளின் நேர்த்தி, கூட்டு முயற்சி பாராட்டத் தக்கவகையில் அமைந்திருந்தது.

விலகல் முறையிலான இச்சுற்றுப்போட்டியில் சுவிஸ் அணி சகல பிரிவுகளிலும் அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தது. இதனுடன் 13 வயதுப் பிரிவில் மன்னார்-மட்டு, அம்பாறை அணிகளும், 15 வயதுப்பிரிவில் திருமலை-யாழ், வவுனியா-அணிகளும் 17வயதுப்பிரிவில் அம்பாறை திருமலை, மட்டு அணிகளும் 19வயதுப் பிரிவில் மன்னார், மட்டு, திருமலை அணிகளும் தெரிவாகியிருந்தன. 13 வயதுப் பிரிவின் சுவிஸ் அணியில்டிலக்சனா என்ற வீராங்கனையும் இடம் பெற்றிருந்தார். வவுனியா அணியை எதிர்த்து ஆடிய முதலாவது போட்டியில் இவர் ஒருகோலையும் போட்டிருந்தார்.

இப்போட்டித்தொடரில் மிகவும் பரபரப்பான ஆட்டமாக அமைந்தது சுவிஸ்- மன்னார் அணிகளுக்கிடையிலான 19 வயதுப்பிரிவு அரையிறுதி ஆட்டமே. இறுதிவரை எந்த அணி வெற்றிபெறும் எனக் கூறமுடியாதவகையில் இந்த ஆட்டம் அமைந்திருந்தது. எனினும் முடிவில் மன்னார் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத்தெரிவானது. மன்னார் அணிக்கு எதிராக தண்டனையாக வழங்கப்பெற்ற சந்தர்ப்பங்களிலேயே சுவிஸ் அணியினால்கோல் போட முடிந்தது.

இந்தளவு பரபரப்பு இறுதிப் போட்டியில் இருக்கவில்லை. ஆரம்பத்தில் மட்டு- திருமலை அணிகள் மாறி மாறி கோல் போட்டு பரபரப்பை ஏற்படுத்தின. எனினும் 5-2 என்ற கோல் கணக்கில் மன்னார் அணி வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்தது. இறதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக மன்னார் அணிவீரர் K.S மொறிஸ் தெரிவானார்.

17 வயதுப்பிரிவில் சுவிஸ் அணியே வெற்றி பெறும் என பொதுவாக எல்லோராலும் கருதப் பட்டது. அந்தவகையில் அவர்களது



சுவிஸ் ஏற்பாட்டாளருடன் தளபதி கேணல் பானு, கேணல் ஜெயம், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.

ஆட்டம் அமைந்திருந்தது. திருமலை அணியுடனாக இப்போட்டியின் பந்து கடத்தலில் அவர்களின் ஆட்டம் மிகவும் அபாரம் முதல் கோலையும் சுவிஸ் அணியே போட்டது. ஆட்ட முடிவில் இரு அணிகளும் 2-2 என்ற வகையில் கோல் போட்டிருந்தன. எனினும் K.D.J மதுசங்ஹ என்ற வீரர் "தங்கக்கோல்" போட்டு திருமலைஅணிக்கு கேடயம் செல்ல வழிசமைத்தார். இந்த அணி வீரர் வேதநாயகம் சிறீஸ்கந்தரா˜சா ஆட்டநாயகனாகத்தெரிவா˜னார்.





15 வயதுப்பிரிவில் சுவிஸ்-யாழ் அணிகள் மோதின. யாழ். அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்களே பெரும்பாலும் இடம்பெற்றிருந்தனர். உயரத்திலும், உருவத்திலும் பொருத்தமற்ற அணிகளாக இரு அணிகளும் காணப்பட்டன. யாழ்.அணி நேர்த்தியாக ஆடினாலும் 8-0 என்ற கோல் கணக்கில் சுவிஸ் அணி வெற்றிபெற்று கேடயத்தைக் கைப்பற்றியது. சுவிஸ் அணி வீரர் பிரவீன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

13 வயதுப்பிரிவில் இறுதியாட்டத்தில் அம்பாறை, மட்டு அணிகள் மோதின. அம்பாறை அணியின்ஆட்டம் ஆரம்பத்தில் அபாரமாக இருந்தது. முதல் கோலை அம்பாறை அணியின் ஜாலுத்தே போட்டிருந்தார். எனினும் மட்டு அணி படிப்படியாக தமது நிலையை வலுப்படுத்தி 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று கேடயத்தைக் கைப்பற்றியது.

எமது இளைய தலைமுறையை விளையாட்டில் வளர்த்தெடுக்கும் உயரியநோக்கோடே தமிழீழ விளையாட்டுத்துறை இந்த சுற்றுப்போட்டியை ஏற்பாடுசெய்திருந்தது. சுவிஸ் அணி மூலமாக விளையாட்டு நுட்பங்களை தாயக அணிகள் கற்றுக்கொள்ள இப்போட்டித் தொடர்வழிவகுத்தது. எனினும் சில அணிகள் கனிஷ்ட பிரிவினருக்கென்றே ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இப்போட்டித்தொடரில் "மீசை மழிக்கப்பட்ட" சில வீரர்களை போட்டியில் பங்குபற்ற அனுமதித்தன. இதன் மூலம் கனிஷ்ட பிரிவில் உருவாகவிருந்த சில வீரர்களின் வாய்ப்பு அநியாயமான முறையில் பறிக்கப்பட்டது. இது மிகவும் வருந்தத்தக்கது. அத்துடன் தமிழீழ விளையாட்டுத்துறையின் நோக்கத்துக்கு எதிரானது.



சுவில் நட்சத்திர ஆட்டக்காரன் துஷ்யந்தன்

பரிசளிப்பு வைபவத்தில் உதைபந்தாட்டத்தில் வினைத்திறனுடன் பணியாற்றும் மூவர் தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் கி. பாப்பாவினால் தங்கப்பதக்கம் அணிவித்துக்கௌரவிக்கப்பெற்றனர். சுவிஸ் தமிழர் விளையாட்டுக் கழகத்தில் அங்கம் வகித்து அங்கு நட்சத்திர வீரராகத் திகழும் தேவராசா துஷ்யந்தன், 13 வயதுப்பிரிவு அணியில் இடம்பெற்று அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பெற்ற மன்னார் புனித சவேரியார் கல்லூரி மாணவன் ஜெயராசா மகிபன், போராளியாகவும், உதைபந்தாட்ட வீரராகவும், விளையாட்டுத்துறைப்பொறுப்பாளராகவும், விளங்குவதுடன் வட கிழக்கில் உதைபந்தாட்டத்தை வளர்த்தெடுக்க பணியாற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த நிலான் ஆகியோர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

**நசிகேதன்**

இப்போட்டித்தொடரில் நடுவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. குறிப்பாகதிருமலை மாவட்டத்தைச்சேர்ந்த M.D பர்சூக் எவ்வாறான சூழ்நிலையிலும் ஒரு போட்டியை வெற்றிகரமாக நடத்திமுடிப்பது எவ்வாறு என்பதறகுஉதாரணமாகத்திகழ்ந்தார்.

இப்போட்டித்தொடர்பற்றி விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் கி.பாப்பா குறிப்பிட்டதுபோன்று "இது எமது தேசியத்துக்குக்கிடைத்த பெரிய வெற்றி"யே. இவ்வாறான வாய்ப்பை அளித்த சுவிஸ் அணியினருக்கும் குறிப்பாக இவர்களை அழைத்து வந்த மதி அவர்களுக்கும் தாயகவிளையாட்டு ரசிகர்களின் பாராட்டுக்கள். அவர்களின் தாயகப்பற்றை இந்தமண் என்றும் நன்றியுடன் நினைவு கூரும். ●

## மருத்துவம்

# ருபெல்லா கனவைக் கலைக்கும் கொடிய அரக்கன்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது,
கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி பிறத்தல் அரிது"

என்பது ஔவையார் வாக்கு. ஒரு நோயற்ற குழந்தையை பெற்றெடுப்பதே ஒரு தாயின் இன்பக்கனவு. ஆனால் இக் கனவைக்கலைத்து தாயினதும் சிசுவினதும் வாழ்வை துயரில் ஆழ்த் தக்கூடிய ஒரு நோயே "ருபெல்லா" அல்லது " ஜேர்மன் சின்னமுத்து" ஆகும்.

இந்நோய் ருபெல்லா எனப்படும் ஒரு வகை வைரசினால் ஏற்படுத்தப்படுகின்றது. இந்நுண்ணுயிர் கர்ப்பத்தின் ஆரம்பகாலத்தில் தொற்றை ஏற்படுத்தும் போது கருவில் உருவாகும் சிசுவை தாக்குகின்றது. அங்கவீனமடையச் செய்கின்றது. பல குறைபாடுகளைத்தோற்றுவிக்கின்றது.

1. ருபெல்லா என்றால் என்ன?
2. தொற்றுதல் அடையும் வழிமுறைகள் என்ன?
3. நோய்க்குரிய அறிகுறிகள் என்ன?
4. தொற்றுதலால் சிசுவுக்கு ஏற்படும் பாதிப்பு என்ன?
5. நோயைத்தடுப்பது எப்படி?

போன்ற விடயங்களை இக் கட்டுரையில் இருந்து அறிந்து உங்களையும் உங்கள் குழந்தையின் இனிய வாழ்வையும் காத்துக் கொள்ளுங்கள்.

### 1. ருபெல்லா என்றால் என்ன?

ருபெல்லா அல்லது ஜேர்மன் சின்னமுத்து என அழைக்கப்படும் நோய் ருபெல்லா வைரஸ் எனப்படும் ஒருவகை வைரசினால் ஏற்படுத்தப்படுகின்றது.

சாதாரணமாக ஒருவரில் இந்நோய் ஏற்படும் போது எந்தவித நீண்டகாலப்பாதிப்பும் இன்றி விரைவாக சிகிச்சை இன்றியே குணமடைந்து விடும். ஆனால் ஒரு கர்ப்பிணித்தாயை இந்நோய் தாக்கும் போது கருவில் உள்ள சிசு இந்நோயால் வாழ்நாள் முழுவதும் பாதிப்படையக் கூடும். உலகெங்கும் இந்நோய் பரவலாக காணப்படுகின்றது. எமது பகுதிகளிலும் குழந்தைகள் குறைபாட்டுடன் பிறப்பதற்கு இந்நோயும் ஒரு முக்கியமானகாரணி.

### 2. தொற்றுதல் அடையும் வழிமுறைகள்

இந்நோய் தொற்று உடையவர்கள் நோயறிகுறிகளுடனோ அல்லது எந்தவித அறிகுறிகளும் இன்றியே எமதுசுற்றயலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தொற்றுதல் அடைந்த ஒருவர் இருமும் பொழுதோ, தும்மும் பொழுதோ இக்கிருமி வளியில் விடப்படுகின்றது. இதன் மூலமாக சுகதேகிகளுக்கும் இந்நோய் சுவாசப்பாதையூடாகப் பரவுகின்றது.

நோயால் பீடிக்கப்பட்ட ஒருவரின் உமிழ்நீர் மற்றும் நாசிச் சுரப்பிகளின் மூலமும் நேரடித் தொற்றுக்கான வாய்ப்புகள் உள்ளன.

ஒரு கர்ப்பிணித்தாய்க்கு தொற்று ஏற்படும் போது ருபெல்லா நுண்ணுயிர்கள் குருதிச்சுற்றோட்டத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் சூழ் வித்தகம் வளியாக சிசுவைச் சென்றடைகின்றது. பின் அங்கு நோயை ஏற்படுத்துகின்றது.

தொற்று ஏற்பட்ட சிசு பிறந்த பின்னர் பல மாதங்களுக்கு இந் நோய்கிருமியைப்பரப்பும் தன்மையைக் கொண்டிருக்கும்.

ஒருமுறை இந்நோய் தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு மீண்டும் இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகக்குறைவாகும். தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட தாய்க்கு பிறக்கும் குழந்தை 4-6 மாதகாலத்துக்கு நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டதாய் இருக்கும்.

### 3) நோயின் அறிகுறிகள்

இந்நோய் ஏற்படும் போது பல அறிகுறிகள் தென்படுகின்ற போதிலும் சிலர் இந்நோயால் பீடிக்கப்பட்டும் எவ்வித அறிகுறிகளும் காட்டாது சுகதேகிகள் போன்று



காணப்படுவர்.

இந்நோய்க்குரிய அறிகுறிகள் வெளிப்படும் போது முதலில் இலேசான காச்சலுடன் உடலில் சிவந்த கொப்பளங்கள் தோன்றும். இக்கொப் பளங்கள் முதலில் முகத்திலும் பின் அதிலிருந்து படிப்படியாக வேறு பாகங்களிற்கும் பரவும். எனினும் இந் நோய் தொற்று ஏற்பட்டோரில் 50% ஆனவரிற்கே செந்நிற கொப்பளங்கள் தோன்றும். இத்துடன் மூட்டு வலியும் ஏற்படலாம். இவைதவிர தொற்று ஏற்பட்டவரின் கண்கள் சிவந்து இருத்தல், காதுச் சோனைக்கு பின்னாலுள்ள கணங்களில் நோவுடன் கூடிய வீக்கமும் ஏற்படலாம்.

### 4) சிசுவுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்:-

ருபெல்லா நோய்க்கிருமி ஏற்படுத்தும் பாதிப்புகளில் மிகப் பாரதூரமானதும் அஞ்சவேண்டியதுமான தாக்கம் கருவிலுள்ள சிசுவிற்கு ஏற்படும் தாக்கம் ஆகும்.

கர்ப்பிணி ஒருவர் கர்ப்பமடைந்த முதல் 3 மாதகாலத்திற்குள் இந்நோய்க்கு பீடிக்கப்படுவாரேயானால் அவ ரது குழந்தை நிறை குறைந்ததாகவும் அங்கக்குறைபாடுகளுடன் பிறக்கவும் அல்லது கருவிலே இறக்கவும் அதிகளவுவாய்ப்புள்ளது.

முக்கியமான குறைபாடுகள் செவிப்புலன் பாதிப்பு, பார்வைக்குறை பாடுகள், இதயத்தில் குறைபாடு போன்றனவாகும். இவைதவிர குழந்தை சிறிய தலையுடன் பிறத்தல் மூளையில் பாதிப்பு ஏற்படுதல் கருவிலேயே வளர்ச்சிகுன்றி காணப்படல். ஈரல் மண்ணீரல் வீங்கி காணப்படவும் வாய்ப்புகள் உள்ளன.

### 5) நோயைத் தடுத்தல்:-

இக்கொடிய நுண்ணங்கியை தடுப்பது எப்படி, அதைத்தடுப்பதற்கு வழிகள் உள்ளனவா என நாம் கேட்கின்றபோது இக் கேள்விக்குரிய பதில் ஆம், உண்டு அதுவே ருபெல்லா தடுப்பு மருந்து ஆகும். இத்தடுப்பு மருந்தானது "விரிவாக்கல் தடுப்பு மருந்து திட்டத்திற்கேற்ப" ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் 3 வயதில் கொடுக்கப்படுகின்றது. அதன் பின் 10-14 வயதுக்குட்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் இத்தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.

இவ்வாறு தடுப்பு மருந்து ஏற்றப்படாத 15-44 வயதுக்குட்பட்ட பெண்கள் இத்தடுப்பு மருந்தை ஏற்றுவதால் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்நோயினால் ஏற்படும் பிறவிக் குறைபாடுகளை முற்றாகத் தடுக்க முடியும்.

**கவனிக்க வேண்டியவை:-**

கர்ப்பிணிகளிற்கும் ஒரு வயதிற்கு உட்பட்டகுழந்தைகளுக்கும் இந்நோய் தடுப்பு மருந்து ஏற்றுவது முற்றாகத்தவிர்க்கப்படல் வேண்டும்.

இந்நோய் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு 3 மாத காலத்திற்குள் கர்ப்பம் தரித்தல் தடுக்கப்படல் வேண்டும்.

**முக்கிய குறிப்புகள்:-**

-ருபெல்லா தடுப்பு மருந்து ஏற்றுவதன் மூலம் இந்நோயை தடுக்கமுடியும்.

-நோய் தொற்றுகாலம் ஒருவரிற்கு செந்நிற கொப்பளங்கள் ஏற்படுவதற்கு முன் 7 நாட்களும் ஏற்பட்டபின் 7 நாட்களும் இக்காலத்தில் நோய் ஏனையோரிற்கு தொற்றுதலடையும்

- இந்நோய் கிருமித்தொற்று ஏற்பட்டு 12-23 நாட்களுக்குள் நோய்க்குரியஅறிகுறி தோன்றத் தொடங்கும்.

-கர்ப்பம் தரித்து முதல் 3 மாத காலத்திற்குள் ஒரு கர்ப்பிணித் தாய்க்கு இத்தொற்று ஏற்பட்டால் பிறக்கும் குழந்தைக்கு செவிப் புலன் பாதிப்பு, கண்பார்வை குறைபாடு, இதயத்தில் குறைபாடு, மூளைவளர்ச்சி குன்றுதல் மற்றும் ஈரல் மண்ணீரல் போன்றவற்றிலும் பாதிப்பு ஏற்படலாம்.

ஜெ.டேறியஸ்
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

## நேர்நோக்கு

# அஞ்சுவதால் ஏற்படப்போவது...

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபொன்றை முன்வைப்பதில் அரசாங்கம் நெருக்கடிக்குள் உள்ளதுபோல தெரிகிறது. ரோக்கியோமாநாட்டில் இடைக்காலநிர்வாகசபை ஒன்று ஏற்படுத்தப்படும் என ரணில்விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதியை "சிறிலங்காவின் அரசியலமைப்புக்குள் நின்று" செயற்படுத்து வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றும் கூட இறுதி வரைவு ஒன்று தயாரிப்பதில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால், அத்திட்டவரைபுடன் வன்னிக்கு வரமுயலும் நோர்வே விசேட தூதுவர் ஜோன்வெஸ்பேக்கின் விஜயமும் தாமதமடைகிறது.

இவ்வாறு அரசாங்கத்தின் நிலை இருக்கையில் இடைக்காலநிர்வாக சபை குறித்த இறுதித் தீர்மானத்தை அமைச்சரவைக்கு அறிவிக்க வேண்டும் என சனாதிபதியும், சனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும் எனபொதுசனஐக்கிய முன்னணியினரும் அது மட்டும் போதாது பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று ஜே.வி.பி.யினரும் கோரிவருகின்றனர்.

இவர்கள் இவ்வாறு கோரிவருவது இடைக்கால நிர்வாக சபையிலுள்ள வரைபுகள் அல்லது எடுக்கப்படும் தீர்மானங்கள் நியாயபூர்வமானவையா? நாட்டுக்கு நன்மை பயப்பனவா? அல்லது அவர்கள் வலியுறுத்துவது போல சிறிலங்காவின் அரசியலமைப்புக்கு உட்பட்டதா? என்று அறிந்து கொள்வதற்காக அல்ல. அதில் ஏதாவது சிலவற்றைப்பிடித்துக் கொண்டு புலிகளுக்கு அரசாங்கம் ஈழத்தைத்தாரைவார்த்துக் கொடுத்து விட்டதாக கூக்குரலிடுவதற்காகவோ அல்லது சனாதிபதி சந்திரிகா நினைத்தால் இதனை ஆட்சிக் கலைப்புக்கான காரணமாகவும் கொள்ளக்கூடும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், அரசியலமைப்பு விதிகளுக்கு உட்படட்டதாகவும் மிகக்குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகவும் அமைந்த ஓர் அமைப்பை முன்வைத்தால் கூட இக்கூக்குரல் எழாது விடப்போவதில்லை என்பதற்கு கடந்தகாலத்தில் முன்வைக்கப்பட்ட சில குறைந்தமட்ட அதிகாரப் பரவலாக்கல் அலகுகளுக்கு எதிர்க்கட்சிகளிடமிருந்து எழுந்த எதிர்ப்புகள் வெளிக்காட்டியிருக்கின்றன.

எனவே அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லக்கூடிய வகையிலான செயற்பாடுகளைத் துணிந்து மேற்கொள்வதன் மூலமே இன்றுள்ள தேக்கநிலையைப் போக்கமுடியும் .

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண்பது என்பதும் அதற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்பதும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி புலிகளின் பங்களிப்புடனான இடைக்கால நிர்வாகம் ஒன்றை வடக்கு கிழக்கில் ஏற்படுத்துவது என்பதும் ஐக்கியதேசிய முன்னணியின் தேர்தல்கால வாக்குறுதிகளாகும்.

சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏழுவருடங்கள் நடத்திய தீவிரமான யுத்தத்தின் விளைவாக தாம்சந்தித்த பெரும் பொருளாதார நெருக்கடிகள் நீங்க சமாதான முயற்சிகளே சிறந்தவை என்பதை உணர்ந்து கொண்டே மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தனர்.

"யானை - புலி கூட்டு நாட்டை அழிக்கவே" என ஜே.வி.பி.யினரும் பொ.ஐ.மு.வினரும் கூக்குரலிட்ட போதும் மக்கள் சமாதானத்துக்கான மனுவை ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்கினர்.

இவ்வாறான நிலையில் மக்கள் மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு நம்பிக்கையிருந்திருக்குமானால் நிறைவேற்று அதிகாரத்துக்கு அஞ்சாது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை விரைந்து நிறைவேற்றி சமாதானமுயற்சிகளில் இன்று எவ்வளவோ தூரத்துக்கு முன்னேறியிருக்கவேண்டும்.

ஆனால் ஆட்சிபீடமேறி ஒன்றரை வருடங்களாகியும் இடைக்கால தீர்வு ஒன்றை எட்டுவதற்கே தயக்கம் காட்டிவரும் ரணில்விக்கிரமசிங்க அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தை நிறைவுசெய்தாலும் நிரந்தரமான தீர்வொன்றை எட்டுமென எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்?

இந்தத் தயக்கமானது நிறைவேற்று அதிகாரத்தால் ஆட்சிகலைக்கப்பட்டாலென்ன, ஆட்சிக்காலத்தை நிறைவு செய்தாலென்ன மக்கள் மத்தியில் செயற்திறனற்ற அரசாங்கம் என்ற முடிவை ஏற்படுத்தவே உதவும். அதன் பின்னர் மக்களிடம் மீண்டும் செல்வதில் சாதகமான பயனெதுவும் கிட்டிவிடப்போவதில்லை. அதாவது இன்று எதற்காக அரசாங்கம் அஞ்சுகிறதோ அதுவே அதன் முடிவாக அமையும்.

வேலவன்

தலை நகரில் அறிவுக்கடலினை திறந்துவிட்டிருக்கும் ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன்

## யாழ் நகரில் மாபெரும் புத்தகக்கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகதிகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (**Jeya book centre**) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.

**காலம் : 2003 ஜுலை 15 முதல் 30 வரை**

**நேரம் : தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்)**

**இடம் : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல் நிலைய மண்டபம்.**

* பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாட,பயிற்சிப்புத்தகங்கள்
* பல்கலைக்கழக மாணவர்களுக்கான மருத்துவ, விஞ்ஞான, கணித,பொறியியல்,கலை,விஞ்ஞான,வணிக நூல்கள்
* கணனிக்கல்வி தொடர்பான நவீன நூல்கள்
* சிறுவர் இலக்கியங்கள்
* நாவல்கள், சிறுகதைகள், கவிதைத்தொகுதிகள்
* அகராதிகள் (தமிழ்,ஆங்கிலமொழிகளில்)
* சோதிட நூல்கள்
* சமையற்கலை நூல்கள்
* ஆங்கில இலக்கிய நூல்கள்
* தரமான அப்பியாச கொப்பிகள் ( மலிவு விலையில்)
* தரமான **C.R** புத்தகங்கள் ( மலிவு விலையில்)

விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே நாளில் பெறக்கூடிய அரிய வாய்ப்பு!

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய விலை விபரம்:
இலங்கை நூலகளுக்குஆகக்கூடிய சில்லறை விலையில் **10%** கழிவு
இந்திய வெளியீடுகளுக்கு1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி
இங்கிலாந்து வெளியீடுகளுக்கு **1UK £165/= வீதப்படி**
அமெரிக்க வெளியீடுகளுக்கு **1US$ - 110/= வீதப்படி**
சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு **1S $ - 75/= வீதப்படி**

முக்கிய குறிப்பு: பாடசாலைகள், பல்கலைக்கழகம், பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், சனசமூகநிலையங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களை கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில், 10% கழிவு கொடுக்கப்படும். புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விசேட கழிவுவழங்கப்படும்.

**நிறுவனங்களுடனான புதிய ஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.**

வாருங்கள்! அலைகடலெனத் திகழும் புத்தக வகைகளைப்பாருங்கள்! விரும்பியதை வாங்குங்கள்! அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்! அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (சி-8307)

**வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்**

**JEYA BOOK CENTRE, 91-99,People's Park Complex, Colombo- 11.**



### வருடாந்த பொதுக் கூட்டம்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 19.07.2003 (சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நடைபெற இருப்பதால் அனைத்து பழையமாணவர்களையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**குறிப்பு:-** வருடாந்த சந்தாக்கட்டணத்தைச்செலுத்தி தங்களது அங்கத்துவத்தைப்புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்.
புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்,
பழையமாணவர் சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி-8231)



## சிவா கோல்ட் ஹவுஸ்



இளம் நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை கைதேர்ந்த நிபுணர்களின் கைவண்ணத்தில் அழகாகவும் சிறப்பா கவும் அசல் 22கரட்டில் செய்து கொள்ள நாடவேண்டிய இடம்

நம்பிக்கை,நாணயம்,தரச்சிறப்பு

**சிவா கோல்ட் ஹவுஸ்**

இல:56
தர்மலிங்கம் வீதி,
வவுனியா. (சி-8303)
☎:024-23034


(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைப் பெறுமதியின் அடையாளச்சேமிப்புகள் அவர்களிடமிருக்கும். அவர்களுடைய அலுவலகங்கள், விடுதிகள், பாடசாலைகள், மருத்துவமனை கள், வழிபாட்டிடங்கள், பொது மண்டபங்கள் என சகலவற்றையும் அவர்கள் இவற்றால் அழகுபடுத்தி யிருப்பார்கள். அத்தகைய ஈடுபாடும் அழகுணர்வும் அவர்களிடம் முறையாக வளர்க்கப்பட்டு வருகிறது.

அவர்கள் பிளாஸ்ரிக்கையும் பயன்படுத்தினாலும் அதன் கவர்ச்சிக்கு கட்டுப்பட்டிருக்கவிலலை. உள்ளூர் உற்பத்திகளை கௌரவக்குறைவானவையாகக் கருதிகைவிடவும் இல்லை. பதிலாக இன்னும் நேர்த்தியோடும், புதுமை கலந்த நுட்பத்தோடும் தங்களின் கலையாற்றலை வெளிப்படுத்தி தங்களின் உற்பத்திகளைப் பெருக்குகிறார்கள்.அவற்றை தங்கள் மட்டத்தில் பரவலாக பாவிப்பதோடு வெளியுலகுக்கும் விற்கிறார்கள்.

வெளியேயும் அவர்களுடைய அந்த பொருட்களுக்கு பெரும் கிராக்கியும் கூடுதலான கவர்ச்சியும் இருக்கின்றது. அப்படி யானதொரு அறிமுகத்தை அவர்களின் உழைப்பும் முயற்சியும் நுட்பமும் பெற்றிருக்கின்றது. நாங்களோ எங்களுடைய கைவினைப் பொருட்களை நமக்கு அவமானத்தையோமதிப்பிறக் கத்தையோ தருவனவாக கருதி அவற்றை செய்வதையே விட்டு விட்டோம்.

எங்காவது சாட்டுக்கோ சம்பிரதாயத்துக்கோ நடக்கும் காட்சிப்படுத்தல்களுக்கும் சில சான்றிதழ் பெறும் கற்றல் வகுப்புகளுக்கும் மட்டும் சில பொருட்களை செய்கின்றோம். அதுவும் அந்தப் பருவத்தோடு சரியாகிவிடும். பிறகு அதைப்பற்றிய அக்கறையே கிடையாது.

எங்களுடைய வீடுகளில் அல்லது மண்டபங்களில் அல்லது அலுவலகங்களில் அல்லது இவ்வாறான ஏதாவது இடங்களில் என்றாவது நமது கலைப்பொருட்களையோ கைவினைப்பொருட்களையோ நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? பண்பாடு பற்றியும் கலை பற்றியும் வாய்கிழியக் கதைக்கும் நாம் ஏன் இது பற்றிய அக்கறையற்றிருக்கிறோம்.?

இது தவிர, இப்போது நாம் வாங்கிக்குவிக்கும் பிளாஸ்ரிக் பொருட்கள் உண்மையில் எங்களுடைய காலநிலைக்குப் பொருத்தமானதேயல்ல என்ற சிறுஅனுபவ அறிதலைக்கூட நாம் கவனிப்பதில்லை.

ஒரு பிளாஸ்ரிக் கதிரையில் ஆகக்கூடியது ஒரு மணித்தியாலயத்திற்கு மேல் சுகமாக இருக்க முடிகிறதா? அதற்கு மேல் இருந்தால் உடம்பு நம்மையறியாமலே கொதிக்கத்தொடங்குகிறது. வியர்வையும் மனதில் எரிச்சலும் ஏற்படுகின்றது. இப்படித்தான் பிளாஸ்ரிக் பாயாக இருந்தாலும் சரி, விரிப்பாக இருந்தாலும் சரி, வேறு என்னதான் என்றாலும் சரி.

நாங்கள் வெப்பவலய வாழ்க்கைக்குரியவர்கள்.எங்களின் கால நிலைகளுக்கு அமையவே இங்கே மரங்களும் மண்ணும் செடி கொடிகளும் இருக்கின்றன. எந்தச் சூழலிலும் அதனதன் தட்பவெட்பச் சூழலுக்கு அமையவேஅவற்றின் வளங்களுமிருக்கும். அந்த வளங்களை இனங்காண்பதிலும் அவற்றை தேவைகளுக்கு பயன்படுத்துவதிலுமே ஒரு சமூகம் வளர்ச்சியடையும். பண்பாட்டையும் கொண்டிருக்கும்.அப்படி நாம் இருந்தோம் அன்று. இன்று...

பிளாஸ்ரிக்கை பொறுத்த வரையில் ஈரவலயமக்களுக்கும் குளிர் பிரதேச மக்களுக்கும் ஓரளவுக்கு பொருத்தமாயிருக்கலாம். ஆனாலும் பிளாஸ்ரிக்கினாலான தீமைகளினால் உலகம் முழுவதிலும் அதன் பயன்பாட்டைத் தவிர்க்கும்படியே பல அமைப்புக்களும் சொல்கின்றன.

ஆனாலுமென்ன? 'புகைத்தல் உடல் நலத்திற்கு கேடாகலாம்' என்ற அறிவுறுத்தலோடு விற்பனைக்கு வரும் புகைத்தல் பொருட்களைப் போலவே பிளாஸ்ரிக்கைத்தவிர்ப்போம் என்றபடி பிளாஸ்ரிக் விற்பனையாவதும் உற்பத்தி செய்யப்படுவதும் நடக்கிறது.

ஆனால் நாங்கள் முடிந்தளவு இதைத்தவிர்க்கலாம். நிச்சயம் தவிர்க்கவும் வேண்டும். அது பிளாஸ்ரிக்கை விலக்குவதற்கு மட்டுமல்ல, சுவாத்தியமாகவும் நன்றாகவும் இருப்பதற்கே.

இயற்கைக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கின்றமோ அவ்வளவு தூரம் தீமைகளிலிருந் தும் தூர விலகிக்கொள்கிறோம் என்பார்கள்.

இயற்கையோடிணைந்திருத்தல் = மகிழ்வோடிருத்தல் =நன்மையோடிருத்தல் என்பதாகவே இருக்கும்.

அது எங்களின் சூழலை நாங்கள் விளங்கிக்கொள்வதிலும் பயன்படுத்துவதிலுமே தங்கியிருக்கிறது.

- ஜான் கீட்ஸ்

# அனுமார் பதில்கள்



● **ஹாய் ஆனுமார் இப்போது வீதிவிபத்து அதிகரித்து தினம் வீதி உயிரைக் குடிக்கிறதே. இந்த விபத்துக்கள் முன் நடக்கவில்லை, இப்போது அது எங்கிருந்து வந்தது.**

ஆ.சுதர்சிகா,
கிளி/முருகானந்தா.ம.வி.

வாகனங்கள் அதிகம் எங்கிருந்து வந்ததோ அங்கிருந்து. அவைகள் வரும்போதே எமதர்மராஜாவை 'வண்டி'யில் ஏற்றிவருகின்றனவோ?!

● **அலுவலகங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் போல் நடந்து கொள்ளும் அதிகாரிகள் பற்றி?**

எம்.ஜி.ஆர். சந்திரன்,
கிளிநொச்சி.

அதிகாரத்தை விரைவில் இழந்துவிடக் கூடியவர்கள்.

● **ஹாய் அனுமாரே நாட்டின் பாராளுமன்றம் கேடிகளின் கூடாரமாகிவிட்டது எனக் கூறும் அஸ்கிரிய பீடாதிபதிக்கு?**

கே.மதனா,
வள்ளிபுனம்.

துறவிகள் ஆச்சிரமம் நாடாளுமன்றமாகினால் எதிர் விளைவு?

● **மதிப்பிற்குரிய அனுமார் அவர்களே! சிக்கனமே சிறந்த செல்வம் எனக்கூறும் பெரியவர்களுக்கு என்ன சொல்கிறீர்கள்.**

என்.சிவா,
எழிலகம்,ஆலடி,
காரைநகர்.

ஒருகதை இருக்கிறது. உலோபி ஒருவன் கடினமாக உழைக்கும் கொழுத்த கழுதை ஒன்றைவாங்கினானாம். அவன் ஒவ்வொருநாளும் அதன்சாப்பாட்டிலிருந்து அரைக்கிலோ புண்ணாக்கை குறைத்துக்குறைத்து வைத்து வந்தானாம். அதன் சாப்பாடு அரைக்கிலோமட்டுமே என ஆகிவிட்ட ஒருநாளில் கழுதை செத்துப்போயிற்று. துக்கம் தெரிவிக்க வந்தவர்களிடம் அவன் கவலைப்பட்டானாம் - 'இன்றைக்கு இது செத்திருக்காவிட்டால் இதை சாப்பிடாமல் வேலை செய்யப் பழக்கியிருப்பேன் ' என்று.

● **அனுமாரே சிக்கித் தவிக்கும் சமாதானம் தப்பிப் பிழைக்குமா?**

சத்தியசீலன்,
திருவையாறு.

சத்திரசிகிச்சைக்கு உடன் படாவிட்டால் அற்புதங்களாலும் இது நிகழாது.

● **அனுமார் மாமாவே சிறிலங்காக் கடற்படையினரின் அடாவடித் தனங்களை கட்டுப்படுத்த கடற்புலிகளை நியமித்தால் நிலைமை எவ்வாறு அமையும்?**

க.கஜீபன்,
புதுக்குடியிருப்பு.

அதற்குத்தான் யுத்தம் என்று பெயர்.

● **டியர் அனுமார்! நான் ஒரு பெண்ணை ஆறுவருடமாகக் காதலித்தேன். (ஆனால் அவள் என்னைக் காதலித்தாளோ தெரியவில்லை) இப்போது எனது காதலை கடிதம் மூலம் தெரியப்படுத்திவிட்டேன். அவள் என்னை காதலனாக ஏற்காவிட்டால் நான் அவளை அடைவதற்கு வரம் தருவாயா?**

தேவா,
வலைப்பாடு.

வழியொன்று தந்தேன். 108 வெள்ளி என்னை நினைத்து ஈழநாதம் வாங்கிப்படித்தால் எண்ணம்போல் எல்லாம் நடக்கும். என்ன ஆச்சரிமா? எப்படியிருக்கிறது என் லொள்ளு.

● **உலகசனத்தொகை தினம் 11.07.2003அன்று கொண்டாடப் பட்டதே. ஏன் அனுமார் அதற் கொரு தினம்?**

தீபன்.
கொக்குவில் கிழக்கு,

பிள்ளை வேண்டும் என்று பெண்கள் அரசு சுற்றியது அக்காலம்.

பிள்ளைவேண்டாம் என்று அவர்களை 'அரசு' சுற்றுவது இக்காலம். என்ற கவிக்கோவின் வரிகளே ஞாபகம் வருகிறது.

● **அனுமாரே கதிர்காமரை எல்லோரும் தமிழர் என்று சொல்கிறார்கள் அதற்கு என்ன ஆதாரம்.**

வை. சத்தியன்,
திருவையாறு.

கதிர்காமக்கந்தன் தமிழர்களுக்கென்றாக இருக்கும் வரைக்கும் நம்பித்தான் ஆகவேண்டும். பெயர் ஒன்றல்லவா.

● **இடப்பெயர்வால் ஏற்பட்ட இன்னல்களால் பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்களின் பார்வை இப்போது எப்படி?**

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

அவர்களின் பார்வை அப்படியேதான் இருக்கிறது. நாதத்தின் பின்பக்கத்தில் வந்திருக்கும் படத்தைப்பாருங்களேன்.

● **தற்போதைய அரசின் கல்வித்திட்டம் நம்தேசத்திற்கு பொருத்தமா?**

பி.சதீசா,
மன்னார்.

வைரமுத்துவின் வரி ஒன்று.

பல இளம்பெண்கள் புத்தகச்சுமை பொறுக்காமலே பூப்பெய்திவிட்டார்கள். ●

---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய நடவடிக்கைகள் பகிரங்கமாக இருந்தாலும் கூட இதன் போது பரிமாறிக் கொள்ளப்படும், உரையாடப்படும் கருத்துக்களும், விடயங்களும் இரகசியமாகவே பேணப்படும். இதுவும் ஒரு அவசியமேயாகும்.

ஆனால் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி சிறிலங்க புலனாய்வுத்துறை அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டத்திற்குள் பிரவேசித்து அதிகாரிகளுடன் அதிகாரியாக அமர்ந்து, ஆலோசனைகளுள் கலந்து கொண்டு, கேள்விகள் கேட்டு, விளக்கம் பெறுமளவிற்கு நிலைமை கேலிக்கிடமானதாகியுள்ளமை தான் கேள்விக்குரிய விடயமுமாகும்.

சிறிலங்காவின் இரகசியங்கள், எதுவும் அமெரிக்காவுக்கு மறைக்கத் தேவையற்றது என்று அரசு முடிவெடுத்துவிட்டதா?

சிறிலங்காவை அமெரிக்கா தனது நவீன காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டு வந்துவிட்டதா?

பேரினவாதிகள் பெரிதாக பீற்றிக் கொண்டு திரியும் சிறிலங்காவின் 'இறைமை' இந்த நிகழ்வின் மூலம் அமெரிக்காவிடம 'சோரம்' போய் விடவில்லையா?

அல்லது சிறிலங்காவின் புலனாய்வுத்துறையை அமெரிக்க புலனாய்வுத்துறை குத்தகைக்கு எடுத்துக் கொண்டுவிட்டதா?

இவை இயல்பான சந்தேகங்களால் எழும் வினாக்கள்... ஆனால் இதற்கு அப்பாலும்...!?

சரி இப்போது கதைக்கு வருவோம். (வெறும் கதைதான்)

இரண்டாவது உலகப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரம்.

போர் வியூகம் குறித்து ஆராய அமெரிக்க சனாதிபதி 'ரூஸ் வெல்ட்'டும் பிரிட்டிஷ் பிரதமர் சேர் வின்ஸ்டன் சேர்ச்சிலும் கூடிப் பேசினர்... பல்வேறு யோசனைகள் ஆராயப்பட்டன.

இடையில் 'சேர்ச்சில்' குளித்து விட்டு வருவதாக கூறி குளியலறை நோக்கிப் புறப்பட்டார். அப்போது அவர் 'ரூஸ் வெல்ட்' டிடம் ஏதாவது நல்ல யோசனை தென்பட்டால் உடனே என்னிடம் சொல்லுங்கள் காலதாமதம் யோசனையை குழப்பிவிடும். நானும் ஏதாவது வியூகம் பற்றி உணர்ந்தால் குளிப்பதை நிறுத்தி விட்டு உங்களிடம் வந்து உடன் கூறுவேன் என்றார்.

சேர்ச்சில் குளித்துக் கொண்டிருக்கையில் ரூஸ்வெல்ட்டுக்கு ஓர் அற்புத வியூகம் பளிச்சிட்டது.

சக்கர நாற்காலியை வேகமாக நகர்த்திக் கொண்டு சேர்ச்சியுடன் தன் யோசனையை பகிரும் வேகத்துடன் சேர்ச்சிலினின் உதவியாளர் 'ஐயா குளிக்கிறார் என்று கூறுவதையும் பொருட்படுத்தாது குளியலறைக்குள் நுழைந்தே விட்டார்.

அங்கே நிர்வாணமாக குளித்துக் கொண்டிருக்கும் சேர்ச்சிலைக் கட்டதும் அவருக்கு கூச்சமாகப்போய் விட்டது.

வந்த வேகத்தில் சக்கர நாற்காலியை திருப்ப முயன்றார். ஆனால் சேர்ச்சில் கூறினார். 'மிஸ்ரர் ரூஸ் வெல்ட் பரவாய் இல்லை... வந்தவிடயத்தைக் கூறுங்கள்... பிரிட்டிஷ்காரர்களாகிய நாம் அமெரிக்கர்களுக்கு எதையுமே மறைக்க விரும்ப வில்லை.

சிறிலங்காவும் எந்த விடயத்தையும், இரகசியத்தையும் அமெரிக்காவுக்கு மறைக்க விரும்பவில்லைப் போலும்...

அப்படியா கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களே?! ●

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –27



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –27**

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –26



சு. கார்த்திக்
வன்னி.

### பரிசுக்குரிய வரிகள்

புல்லாங் குழலெடுத்து
பூபாளம் நீ பாடினாலும்
புரியும் எங்களுக்கு - உலக
பூச்சாண்டி நீயென்று.

### பாராட்டுக்குரிய வரிகள்

*பூவையே நீ இசைப்பது,*
*புல்லாங்குழலின் இனிய இசை அல்ல.*
*போர் வெறி கொண்ட பூதங்களின்*
*சுடு குழலின் கொடிய இசை அல்லவா?*

K.நிறஞ்சலா,
கிளிநொச்சி.

*தலையிலே பாதுகாப்பு கவசம்*
*உன் நெஞ்சிலும் உள்ளது பாசம் -*
*உன் இனத்திற்கு எம்மேல் இருக்குது -*
*துவேசம்! இனியும் ஏன் வேசம்?*

ப. கண்ணன்,
இராமநாதபுரம்.

*நீர் அமெரிக்கன் இராணுவமா - பெண்ணே*
*உன் குழலில் கேட்பதும் உன் போன்ற*
*ஈராக் பெண்களின் அழுகுரலா*
*அதுதான் இவ்வளவு ரசனை போலும்.*

மதி, கனகபுரம்,
கிளிநொச்சி.

*நீ செய்வதோ கொடுமை*
*பறிப்பதோ எம் உரிமை - நீ*
*கீதம் இசைப்பது மடமை*
*இப்படி நடப்பதா உனக்கு பெருமை.*

சர்மிளா,ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

*பார்வைக்கு இனிமை காட்டி*
*படுகொலைகள் புரிவோரே*
*ஊர்காக்கும் படைகள் அல்ல - நீர்*
*உயிர் குடிக்கும் சின்னங்கள்.*

ஒளியன்,முள்ளியவளை,
முல்லைத்தீவு.

*காட்டு மூங்கில் பாட்டா - இல்ல*
*கானம் இசைக்கும் வேட்டா!*
*நாட்டு கொடியை உயர்த்தும்*
*மெட்டா மொட்டவிழ்கிறது.*

சிவா.
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

---

குறை காண்பது எளிது; அதைவிடச் சிறப்பாகச் செய்வது அரிது. - ப்ளூட்டார்க்

# இன்னும்...



உயர் பாதுகாப்பு வலய
இருப்புக்களினாலும்
சொந்த இடங்களுக்குச்
செல்வதற்கு எவ்வித
வசதியும்
இன்மையினாலும்
இன்னும் அப்படியே
வாழும் வன்னியின்
இடம்பெயர்ந்த மக்கள்
குடியிருப்புக்கள்.
இனிமேலாவது வழி
தென்படுமா!




நகரத்தில் சிகரமான தோன்றும்

BECON

வெலிங்டன் சந்தியருகில் யாழ்

A/L 2004

ACC → -திரு. பாலவாசன்
ECO → -திரு. மோகன்
B.ST → -திரு யசோ
Log → -திரு. மனோகரன்

DAY CLASS

Mon, Tue, Thu, Fri, → 8-1PM

[சி-8415]

ஆரம்பம் → 28-07-03 திங்கள் காலை 8மணி


## 7ம் ஆண்டு நீங்காத நினைவில்



மேஜர் புலிக்குட்டி (கரி)
ஆனந்தராசா ஜெயமோகன்
புகையிரத நிலைய வீதி, ஓமந்தை வவுனியா
(முல்லை ஓயாத அலை தாக்குதலின் போது)

தாயின் மடியில்
04-03-1970

தாயக மண்ணில்
19-07-1996

மண்ணுக்காய் மரணித்த மாபெரும் தியாகியே
எண்ணற்ற பெருமையுண்டு என்றெண்ணி
கண்ணுக்குள் இருந்தமணி (நீ) கண்ணை விட்டு
விண்ணுக்குள் சென்றாயோ.

பெற்றோர், சகோதரர்கள்,
போராளிகள்.

[3446]


சிறிலங்காவின் முதல்தர கூரைத்தகடான

யானைமார்க் கூரைத்தகடுகள்

இப்பொழுது உங்களின் வாசலிலும் வருகை தந்துள்ளது.
வன்னிக்கும் வனப்பூட்ட வந்து விட்டது.

ஆம்!

'மஸ்கன்ஸ்' நிறுவனத்தாரின் சிறப்புத்தயாரிப்பான 'யானைமார்க்'
கூரைத்தகடுகளின் கீழ் உங்கள்வாழ்வும் வளம்பெற இன்றே வாங்குங்கள்.

தேடி அலையாமல் நாடவேண்டிய இடம்
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

பாண்டியன் வாணிபம்

கரடிப்போக்கு கிளிநொச்சி



யானைமார்க் கூரைத்தகடுகள்

சில்லறையாக
பெற்றுக்கொள்ள
அருகிலுள்ள
பாண்டியன்
கிளைகளை
நாடுங்கள்

முகவராண்மை
பாண்டியன் வாணிபம்

பாண்டியன் வாணிபம்



EXPOAIR

your friend in the skies

எக்ஸ்போ எயார்





ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்- 021-2223891, 074 512666
01-360290, 0712-349999, 0712-348888

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.